உ

சிவமயம்

பொன்வண்ணத்தந்தாதி

மூலமும் உரையும்

கா. பொன்னுசாமி நாட்டார்

… SAW… & CO.,
… MADRAS.

உ

சிவமயம்

சேரமான் பெருமாணுயனுர்

அருளிச்செய்த

பொன்வண்ணத்தந்தாதி மூலமும்

ஆசிரியர் ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்

மாணவர்களுள் ஒருவராகிய

கா. பொன்னுசாமி நாட்டார் இயற்றிய உரையும்

இவை

ஷை ஆசிரியர் அவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை, கேசரி அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டன

விலை] 1935 [அணு **0-4-0**

சிவமயம்

முகவுரை

வைதிக சைவப்பயிர் தழைத்தோங்குமாறு அவதாரஞ் செய்தருளிய வைதிக சைவப் பெரியார்களுள் ஒருவராயும், சிவானுபவச் செல்வராயும், உத்தமகுலத் துதித்தவராயும், சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடித் தொண்டர்களுள் ஒருவராயும், தமிழ்ப்புலமையில் தலைமை பெற்றவராயும், செய்யுள்கள் இயற்றுவதில் திறம்பாத ஆற்றலுடையவரா யும், அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராயும், சேர நாட்டரசராயுமிருந்த சேரமான் பெருமாணுயனர் அருளிச் செய்த நூல்கள் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும் மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா என மூன்றும். அவற்றுள், கட்டளைக் கலித்துறை வடிவமா யுள்ள பொன்வண்ணத்தந்தாதி என்னும் நூலினை நான், எனது ஆசிரியர் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியார் அவர்க ளிடத்துப் பாடங்கேட்கும் முறையில் என் நண்பர்களுடன் பாடங்கேட்டு வரும்போது அதற்கு ஒரு குறிப்புரை எழுதி வைத்திருந்தேன்; அக்குறிப்புரையை ஆதாரமாக வைத் துக்கொண்டும், வேறுபல நூல்களைப் பாடங்கேட்டபோது எழுதிவைத்திருந்த குறிப்புக்களின் ஆதரவைக்கொண்டும் இப் பொன்வண்ணத்தந்தாதிக்கு, கருத்து, பதப்பொருள், காட்டு என்னு மூன்றும் அமைய ஒருரை என்புத்திக் கெட்டிய அள வில் சிலவருஷங்களுக்குமுன் எழுதிவைத்திருந்தேன். அதனை என்னோடு ஷை ஆசிரியரவர்களிடத்துப் பாடங்கேட்டு வந்த என்நண்பர் சென்னை, இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். ச. கந்தசாமி முதலியார் அவர்கள் அச் சிட்டுப் புத்தக ரூபமாக வெளியிடுமாறு என்னைப் பன்முறை வற்புறுத்தி வந்தனர். அவர்கள் வற்புறுத்தற் கிணங்கி யான் ஷை ஆசிரியர் அவர்கள் முன்னிலையிலேயே அவ்வுரையைப்

பரிசோதித்துச் செப்பமாக்கி, இப்போது அச்சிட்டுப் புத்தக ரூபமாக வெளியாக்கினேன். அதனை அச்சிடுங் காலத்தில் ஷை முதலியார் அவர்கள் என்னுடனிருந்து செவ்வையாகக் கையெழுத்துப்பிரதியை அச்சிடும்பிரதியோடு ஒப்பு நோக்கிச் செப்பஞ் செய்து எனக்குத் தந்தனர். அவர் இப்புத்தக விஷயமாகச் செய்த நன்றி எஞ்ஞான்றும் மறத்தற்குரிய தன்றாம்.

இதனைச் செப்பமாக எனது விருப்பத்திற்கிணங்கி, பிழை திருத்தஞ் செய்தனுப்பும் அச்சுப்பிரதிகளைச் செவ்வை யாகக் கவனித்து அச்சிட்டுத் தந்த சென்னை, கேசரி அச்சி யந்திரசாலையின் அதிபரது நன்றியும் எஞ்ஞான்றும் மறத் தற்குரியதன்றாம்.

இந்நூலின்கண் பிரமப் பிரமாதங்களால் நேரிட்டுள்ள பிழையை இவ்வுரையைப் படிக்கும் அன்பர்கள் கருணைகூர்ந்து எனக்குத் தெரிவிப்பாராயின், அதனை நான் வந்தனத் தோடு ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன்; அது மறுபதிப்புப் புத்தகத்தைச் சுத்தமாக அச்சிடுவதற்குப் பேருபகாரமாம்.

இவ்வுரையோடு கூடிய பொன்வண்ணத்தந்தாதி என் னும் நூல் எஞ்ஞான்றும் நிலவுமாறு எல்லாம்வல்ல இறைவ னாகிய நடராஜமூர்த்தி அருள்புரிவாராக.

இதில் பிழையிருக்குமாயின், உலகம் பொறுக்க.

கா. பொன்னுசாமி நாட்டார்,
நெ. 6, வெங்கிடேச கிராமணி தெரு,
20—5—35 சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

சற்குருநாதன் திருவடி வாழ்க

பொன்வண்ணத்தந்தாதி என்பதன் பொருள் வருமாறு :—

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, வாக்குண்டாம் என்னுமிடத்து ஆத்திசூடி என்னுஞ்சொல் அச்சொல்லை முதலிலேயுடைய நூலையும், கொன்றை வேந்தன் என்னுஞ்சொல் அச்சொல்லை முதலிலேயுடைய நூலையும், வெற்றிவேற்கை என்னுஞ்சொல் அச்சொல்லை முதலிலேயுடைய நூலையும், வாக்குண்டாம் என்னுஞ் சொல் அச்சொல்லை முதலிலேயுடைய நூலையும் குறிப்பாக உணர்த்துதல்போன்று, பொன்வண்ணத்தந்தாதி என்னுமிடத்தும் பொன்வண்ணம் என்னுஞ்சொல் அச்சொல்லை முதலிலேயுடைய நூலைக் குறிப்பாக உணர்த்தி நின்றது. குறிப்புச் சொல் பலவற்றுள், இங்குப் பொன்வண்ணமென்பது முதற் குறிப்புச் சொல்லாம்; அதனால், பொன்வண்ணத்தந்தாதி என்பது முதற்குறிப்புச் சொல்லால் பெயர்பெற்ற நூலாம். இங்ஙனமன்றி, வெற்றிலை நட்டான் என்னுமிடத்து வெற்றிலை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடியை யுணர்த்துதலால், சினையாகு பெயரானாற்போல, பொன்வண்ணத்தந்தாதி என்னுமிடத்தும் பொன்வண்ணமென்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய நூலை யுணர்த்துதலால், சினையாகுபெயராமென்று கூறுவதும் பொருந்துவதாம்.

அந்தாதி என்பது யாப்பிலக்கண நூல் கூறும் நாற்பத்து மூன்று தொடைகளுள் ஒன்றும்; அந்தாதித் தொடையாவது அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும்,

அசையானும், சீரானும், அடியானும் மற்றை அடிக்கு ஆதி யாகத் தொடுப்பதாம்.

" அடியுஞ் சீரு மசையு மெழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறைதல் வேண்டும் "

என்றார் நத்தத்தனார். அந்தாதி என்பது பலவாம்; அவற் றுள், செய்யுள் அந்தாதி யென்பதும் ஒன்றாம். செய்யுள் அந்தாதியாவது நின்ற செய்யுளின் இறுதிக்கண் நின்ற எழுத்தாவது அசையாவது சீராவது அடியாவது அடுத்த செய்யுளுக்கு முதலாக வருவதாம்.

தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய அந்தாதி என்பது நேரிசை வெண்பா நூறந்தாதியாய் வந் தால் வெண்பா வந்தாதி என்றும், கட்டளைக் கலித்துறை நூறந்தாதியாய் வந்தால் கலித்துறை யந்தாதி என்றும் பலவிகற்பமாய்ப் பெயர் பெறும். இப்பொன்வண்ணத்தந்தாதி கலித்துறை யந்தாதியாம்.

அந்தாதி என்பது பதாம்புயம் என்பதுபோல, தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்திசந்தி யென்னும் மூவகைச் சந்தி களுள், தீர்க்கசந்திபெற்ற வடமொழித் தொகைநிலைத் தொடராம். அந்தாதி என்பது அந்த+ஆதி எனப் பிரி படும். அந்தாதி என்பதன் பொருள் அந்தத்தை ஆதியாக வுடைய தென்பதாம்; இப்பொருளில் அஃது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்காரணக்குறிப்பெயராம். குடம் ஆகாயம் என்பன

குடாகாயம் எனப்புணர்ந்து வருதல்போல, அந்தம் + ஆதி என்பன அந்தாதி எனப்புணர்ந்து வந்தன ; இங்ஙனம் புணர்ந்து வருவனவெல்லாம் மரூஉவழக்காம் என்பாருமுளர். பொன்வண்ணத்தந்தாதி என்பதன் திரண்ட பொருள் பொன்வண்ணமென்பதை முதற்குறிப்புச் சொல்லாகப் பெற்று அந்தாதித் தொடையால் அமைந்து வந்த நூலென்பதாம்.

பொன்வண்ணத்தந்தாதி என்பதன் மற்றொரு பொருள் வருமாறு :—கந்தரந்தாதி, பழமலையந்தாதி, மருதூரந்தாதி, அழகரந்தாதி என்றற் றொடக்கத்து நூல்கள் அடையடுத்த அந்தாதி வடிவ நூலாயிருத்தல்போல, பொன்வண்ணத் தந்தாதி என்பதும் அடையடுத்த அந்தாதி வடிவ நூலாம். பொன்வண்ணத்தந்தாதி என்பதில் பொன்வண்ணமென்பது அடையாம் ; அந்தாதி என்பது அடைகொளியாம். அடை விசேடணமெனவும், அடைகொளி விசேடியமெனவுங் கூறப் படும். பொன்வண்ணத்தந்தாதி என்பது பொன்வண் ணம் + அத்து + அந்தாதி என்று இங்கு மூன்று சொல் இரண்டு சந்தியாய்ப் பிரிபடுவதாம். பொன்வண்ணத்தந்தாதி என்பதன் திரண்ட பொருள் பொன்வண்ணமென்னுஞ் சொல்லை அடையாகக்கொண்டு அந்தாதித் தொடையால் அமைந்த நூலென்பதாம்.

உ

சிறப்புப் பாயிரம்

ஸ்ரீமத் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M.A., B.L., Dip. Ec., வித்வான் (தமிழ்), அவர்கள் இயற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா

சுந்தரர் தம்மொடு மந்தரத் தியங்கி
இந்தணி யமலன் முந்துற வமரும்
கைலை யென்ற சைலஞ் சென்று
சிவபுரத் துள்ளா ருவந்துரை யாடுதல்
செந்தமி ழென்றே நந்தமக் குணர்த்த
ஒருவனே கேட்கத் திருவுலாப் பாடிப்
பேரரங் கேற்றிய சேரமான் பெருமாள்
அன்பம ரருளு மின்பமர் தெருளும்
இங்ஙன மென்றே நன்கன முணர்த்திப்
பொன்வண்ண மென்றே தன்வண்ணம் பாடிய
அருமறைப் பொருளாம் திருமறை தனக்கே
உள்ளுறைப் பொருளைத் தெள்ளுற வுரைத்தும்
காதற் பொருளை மேதகக் காட்டியும்
அறிவனூற் பொருளின் செறிவினை விரித்தும்
இலக்கண வமைதியை விளக்கிநன் கியம்பியும்
பேருரை யொன்றைச் சீருற வருளினன் ;
சென்னையா மின்னதோர் நன்னகர் நடுவண்
சிந்தா திரிதனில் முந்தையோர் மகிழவே
அமிழ்தினு மினிய தமிழினை வளர்க்கவும்
வந்து தோன்றிய எஞ்சீர் நண்பன்
அடியேற் கருளும் வடிவேற் குரவன்
தன்னடி போற்றும் பொன்னுச் சாமியாம்
நன்னர்ப் பெயரமை பன்னரு மறிஞனே.

உ

சிவமயம்

பொன்வண்ணத்தந்தாதி

மூலமும் உரையும்

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும், மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம், தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட, என்வண்ண மெவ் - வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே. (க)

(இதன்பொருள்.) தன்னைக்கண்ட - தன்னைத் தரிசித்தமையாலுண்டாகிய, என்வண்ணம் - எனது (பசலை) நிறம், எவ்வண்ணம் - எந்நிறமோ, அவ்வண்ணமாகிய - அந்நிறமாயுள்ள, ஈசனுக்கு - பரமசிவனுக்கு, பொன்வண்ணம் - பொன்னிறம், எவ்வண்ணம் - எந்நிறமோ, அவ்வண்ணம் - அந்நிறமாக, மேனி பொலிந்து இலங்கும் - திருமேனியானது சிறந்து விளங்கும்; மின்வண்ணம் - மின்னலினது நிறம், எவ்வண்ணம்-எந்நிறமோ, அவ்வண்ணம் - அந்நிறமாக, வீழ்சடை - தாழ்ந்த சடாபாரமானது (சிறந்து விளங்கும்); வெள்ளிக்குன்றம் தன்வண்ணம் - வெள்ளிமலை யென்னும் கைலாய மலையினது நிறம், எவ்வண்

ணம் - எந்நிறமோ, அவ்வண்ணம் - அந்நிறமாக, மால்விடை - பெரிய ரிஷபமானது(சிறந்து விளங்கும்); (என்றவாறு).

(விசேடவுரை.) தன்னை என்றது சிவபெருமானை. கண்ட என்பது காரணப்பொருளில் வந்த பெயரெச்சம். மால்விடை என்பதற்கு விஷ்ணுவாகிய விடை எனப் பொருள் கூறினும் பொருந்தும். பொலிந்திலங்கும் என்பது முதனிலைத் தீவகம். இச்செய்யுள் சொற்பொருட்பின்வருநிலையணி; வண்ணமென்னுஞ்சொல் நிறமென்னும் ஒரே பொருளில் பன்முறை வந்தமையால். இது தலைமகள் கூற்று. திணை - பாடாண்திணை; துறை- கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம். (1)

ஈசனைக் காணப் பலிகொடு செல்லவெற் றேயிவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ லாமென்று பேதையர்முன்
தாயெனை யீர்ப்பத் தமியேன் றளரவத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லவென் ருனிமை விண்டன வாட்கண்களே. ()

(இ - ள்.) ஈசனைக்காண - ஈசனைக் காண்பதற்காக, பலி - பிச்சையை, கொடுசெல்ல - (நான்) கொண்டுபோக, எற்றே - (இஃது) எத்தன்மைத்தே, இவள் - இப்பெண், ஓர்பேயனை - ஒரு பைத்தியக்காரனை, காமுறும் - விரும்புகின்ற, பிச்சியாம் என்று - பைத்தியக்காரியாம் என்று (கூறி), பேதையர்முன் - தோழிப்பெண்களின் முன்னே, தாய் என்னை ஈர்ப்ப - (என்) தாய் என்னை இழுக்க, தமியேன்தளர - (அதனால்) எளியவளாகிய யான் தளர்ச்சியடைய, அத்தாழ் சடையோன் - தாழ்ந்த சடாபாரத்தையுடைய அப்பரமன், என்னைப் புல்லவா என்ருன் - என்னைத் தழுவுதற்கு(நீ)வா என்றுசொன்னான், (அப்போது), வாட்கண்கள் - (என்) வாள்போன்ற கண்கள், இமை விண்டன - விழித்துக்கொண்டன; (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் தோழிக்குத் தனது கனவு நிலை யுரைத்ததாம். கொல் - அசை. தமியேன் என்பதன் பொருள் (துணையின்றித்) தனித்திருப்பவளாகிய யான் என்ப தாம். வாட்கண் - வடிவத்தால் வாளையொத்த கண். "துஞ்சுங் காற் றோண்மேல ராகி விழிக்குங்கா, னெஞ்சத்த ராவர் விரைந்து" என்னுங் குறள் இங்குணர்தற்பாற்றும். (2)

கண்களங் கஞ்செயக் கைவளை சோரக் கலையுஞ்செல்ல [வப்
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பவொண் கொன்றையந் தாருரு
பெண்களங் கம்மிவள் பேதுறு மென்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்மிசை பாடநின் றாடும் பரமனையே. (௩)

(இ - ள்.) கண்கள் - கண்கள், அங்கு - (ஈசனைக்கண்ட) அவ்விடத்தில், அம்செய்ய - நீர்பொழியவும், கைவளைசோர - கையிலுள்ள வளையல்கள் நழுவிவிழவும், கலையும் செல்ல - ஆடை யும் அவிழ்ந்துவிழவும், ஒண்களம் - பிரகாசம் பொருந்தியகண்ட மும், கண் - கண்களும், நுதல் - நெற்றியும் (ஆகிய இவை), வேர்ப்ப - வேர்க்கவும், ஒண்(மை) - சிறந்த, அம்கொன்றை தார் உருவம்-அழகிய கொன்றைமலர் மாலையினிறத்தையொத்த வடி வத்தையுடைய, பெண் - பெண்ணாகிய, இவள் பேதை நெஞ்சம் - இவளது அறியாமையுடைய மனம், அம் பண்கள் - அழகிய பண் களை, கம்மிசைபாட - ஆகாயத்தின்மீது (பூதகணங்கள்) பாட, நின்றாடும் பரமனை - நின்றாடாநின்ற பரமசிவனை, பேதுறும் என்பது - (விரும்பி) மயங்கும் என்பது, ஓர் களங்கம் - (அதற்கு) ஒருகுற்றமாம்; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று; கண்டோர் கூற்றுமாம். கண்ணென்பது அதன் சினையாகிய புருவத்திற்கா மிடத்துப்

பொருளாகு பெயராம். பெண் இவள் பேதைநெஞ்சம் பேதுறும் என்பது ஓர் களங்கம் என்று அன்வயஞ் செய்துகொள்க. கொன்றைப்பூவி னிறம் பொன்னிறமாம். பண்-இசைப் பாட்டு. பண்களங்கம் மிசைபாட என்பதனை, பண்கள் அங்கம் இசை (ஆக) பாட எனப்பிரித்து அதற்கு, இசைப்பாடல்களை (அவற்றைப் பாடுதற்குரிய) அங்கங்களோடு, பொருத்தமாகப் (பூத கணங்கள்) பாட என்றும் பொருள் கொள்ளலாம். (3)

பரமனை யேபலி தேர்ந்துநஞ் சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங் கொடுப்பது பேரருளாம்
சரமனை யேயுடம் பட்டு முடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகுமுக் கண்ணுடை மாதவனே. (ச)

(இ - ள்.) முக்கண்ணுடை(ய) மாதவன் - (சூரியன் சந்திரன் அக்கினியென்னும்) மூன்று கண்களையுடைய பரமசிவன், பரமனையே - அன்னியாது வீடுகளிலேயே (சென்று), பலிதேர்ந்து(ம்) - பிச்சை எடுத்தும், உண்டது நஞ்சு - (தான்) உண்டது விஷமாம், பன் மலர்சேர் - (உயர்ந்தோரால்) சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற செந்தாமரை மலரில் பொருந்தி வாழும், பிரமனை சிரங்கொண்டும் - பிரமனது தலையைக் கொய்தும், கொடுப்பது பேர் அருளேயாம் - (அடியார்களுக்குத் தான்) செய்வது பெருங்கருணையேயாம், சர மன் ஐ - (புஷ்ப) பாணம் பொருந்திய மன்மதனது, உடம்பு அட்டும் - உடம்பை எரித்தும், உடம்பொடு - (தன்) உடம்பினது, மாது - அழகிய, இடம் ஆம் - இடப்பாகத்தில் பொருந்திய, வரமனையே - சிரேஷ்டமாகிய பார்வதிதேவியே, கிளையாகும் - (அவனுக்கு) உறவாகும்; (எ - று).

(வி - ரை.) பிரமனையே என்னும் ஏகாரம் அருளென்பத ஞேடு பிரித்துக் கூட்டப்பட்டது. ஐ - மன்மதன். சரமனையே என்பதன் ஏகாரம் அசை நிலை. வரமனையே என்பதனை வரம் அன்னை ஏ எனப் பிரித்துச்கொள்க. அன்னை - உமாதேவி. உடம்பொடு என்பதன்கணுள்ள ஒடு உருபு ஆறனுருபின்பொரு ளில் வந்தது.

உடம்பொடு மாதிடமாம் என்பதற்கு, உடம்பு - தன் உடம்பு, மாது - உமாதேவிக்கு, இடமாம்-வசிக்குமிடமாம் என்றும், வர மனையேகிளையாகும் என்பதற்கு, வரம் - சிரேஷ்டமான, கிளையே- மூங்கிலே, மனையாகும் - அவனுக்குப் பிறப்பிடமாகும் என்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருளில் ஒடு இசைநிறைப் பொரு ளில் வந்தது. ஈசனுக்கு மூங்கில் பிறப்பிடமா மென்பதை,

"வேயீன்ற முத்தர்தமை வெட்டினு னேயிடையன்
தாயீன்ற மேனி தயங்கவே"

என்னும் பிரயோகத்தினுலறிக. மாதவன் - மாதினையுடைய வன். மாது - பார்வதி. (4)

தவனே யுலகுக்குத் தானே முதருன் படைத்தவெல்லாம்
சிவனே முழுதுமென் பார்சிவ லோகம் பெறுவர்செய்ய
அவனே யடல்விடை யூர்தி கடவிடை நஞ்சமுண்ட
பவனே யெனச்சொல்லு வாரும் பெறுவரிப் பாரிடமே. (ரு)

(இ - ள்.) தவனே உலகுக்கு முதல் - சிவனே உலகத் திற்கு முதற்காரணன், தான் படைத்த வெல்லாம்தானே - (அச்சிவன்) தான் படைத்த உலகமெல்லாம் அச்சிவனேயாம், சிவனே முழுதும் - சிவனே முழுதுமா யிருக்கின்ருன், என்பார்- என்று சொல்பவர், சிவலோகம் பெறுவர் - சிவபதவியை யடை

வர், செய்ய அவனே - சிவந்த நிறமுடைய அச்சிவனே, அடல் விடையூர்தி - வல்லமையுள்ள ரிஷபவாகனத்தையுடையவன், கடல் இடை நஞ்சம் உண்டபவன் - திருப்பாற்கடலில் தோன்றிய விஷத்தையுண்ட சிவன், எனச் சொல்லுவாரும் - என்று சொல்லுகின்றவரும், இப்பாரிடம் பெறுவர் - இவ்வுலகத்தை (அரசாட்சி செய்யு மூரிமையை)ப் பெறுவர் ; (எ - று).

(வி - ரை.) தவன் - தவவடிவினன். சிவன் - ஆனந்த வடிவினன். விடை ஊர்தி - விடையின் மீதேறி அதனைச் செலுத்துகின்றவன்; (ஊர்தி - ஊரப்படுவது.) பவன் - மேன்மையுடையவன். சொல்லுவாரும் என்னும்உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. பவனே என்னும் ஏகாரம் அசை. (5)

இடமால் வலந்தா னிடப்பா றுழாய்வலப் பாலொண்கொன்
வடமா லிடந்துகி றேல்வல மாழி யிடம்வலமான் [றை
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா லிடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே. ()

(இ - ள்.) எங்கள் கூத்தனுக்கு - எமது கூத்தப் பிரானாகிய சிவனுக்கு, இடம் - இடப்பாகம், மால் - விஷ்ணுவாம், வலம் - வலப்பாகம், தான் - தானும் (சிவபெருமானும்), இடப்பால் - இடப்பக்கத்தில், துழாய் - துளசிமாலை (இருப்பதாம்), வலப் பால்-வலப்பக்கத்தில், ஒண்கொன்றைவடம் - சிறந்தகொன்றை மலர்மாலை (இருப்பதாம்), இடம் - இடப்பக்கத்தில், மால்துகில் - பெரிய (பொன்) ஆடை (இருப்பதாம்), வலம் - வலப்பக்கத்தில், தோல் - தோலாடை (இருப்பதாம்), இடம் - இடப்பக்கத்தில், ஆழி - சக்கரப்படை (இருப்பதாம்), வலம் - வலப் பக்கத்தில், மான் - மான் (இருப்பதாம்), இடம் - இடப்பக்கம், மால்கரிது - மிகக் கருமையாயிருப்பதாம், வலம் - வலப்பக்கம், சேது -

செந்நிறமாயிருப்பதாம், இவனுக்கு - இக்கூத்தப் பிரானுக்கு, இடம் - இடப்பாகம், மால் - மிக்க, எழில்நலம் சேர் - அழகும் மேன்மையும் பொருந்திய, குடம் (ஆம்) - குடக்கூத்துச் செய்வதாம், வலம் - வலப்பாகம், கொக்கரையாம் - கொக்கரைக் கூத்துச் செய்வதாம் ; (எ-று).

(வி - ரை.) இச்செய்யுள் அரியரர்தம்முள் அபேதமுடையரென்பதை விளக்கியவாறறிக. கரிதால் என்புழி ஆல் அசைநிலையாம்; கரிது என்பதன் பகுதி கருமையாம்; சேது என்பதன் பகுதி செம்மையாம். வடமால், இடமால், குடமால் என்பவற்றின்கணுள்ள மால் மூன்றும் பெரிய என்னும் பொருளில் வந்தன ; இம்மூன்றையும் வடம் ஆல், இடம் ஆல், குடம் ஆல் எனப் பிரித்து ஆல் என்பவற்றை அசை நிலையாகக் கோடலும் பொருந்தும். இது சங்கரநாராயண வர்ணனை.

கொக்கரைக் கூத்தாவது கொக்கரை யென்னும் வாத்தியத்தோடு செய்யும் நடனமாம். கொக்கரை யென்பது ஒரு வகை வாத்தியமாம். இதனை, "தட்டழி சங்கஞ் சலஞ்சலம் தண்ணுமை, கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும், குடமுழவங் கொக்கரை வீணை குழல்யாழ், இடமாந் தடாரி படகம் - இடவிய, மத்தளந் துந்துமி வாய்ந்த முருடு" என்று திருக்கைலாய ஞானவுலாவில் இந்நூலாசிரியர் அருளியிருப்பதாலு மறிக. (6)

கூத்துக் கொலாமிவ ராடித் திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாமிவ ராதரிக் கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாமிவர் கண்டதிண் டைச்சடை யுத்தமரே. (7)

(இ - ள்.) இண்டைச்சடை உத்தமர் - இண்டைமாலை யணிந்த சடாபாரத்தையுடைய உத்தமராகிய, இவர் - இவர்,

ஆடித்திரிவது - ஆடிக்கொண்டுலாவுவது, கூத்து ஆம் - கொக்கரைக் கூத்தாகும், பலிதேர்வது - பிச்சை எடுப்பது, கோல்வளைகள் - புள்ளிகளையுடைய வளையல்களை யணிந்த பெண்கள் (இடும்), பாத்து ஆம் - சோறும், மேனிபவளம் ஆம் - சரீரம் பவளநிறத்ததாம், இவர் ஆதரிக்கின்றது - இப்பரமர் விரும்புகின்றது, எத்து ஆம் - (அன்பர்செய்யும்) துதியாம், இவர்கண்டது - இவர்படைத்தது, இமையவர் தம் ஒத்து ஆம் - தேவர்களால் துதிக்கப்படுகின்ற வேதமாம்; (எ - று).

(வி - ரை.) கோல்வளை - இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயராம். கொல் என்னும் இடைச்சொல் ஐந்தும் அசை நிலையாம். தம் சாரியை. கோல் - புள்ளி. இண்டைமாலை என்பது சிரசின்மீது வட்டவடிவமாய்ச் சுருங்க இறுகக்கட்டிச் சாத்தும்பூமாலையாம்.()

உத்தம ராயடி யாருல காளத் தமக்குரிய
மத்தம ராமதி மாடம் பதிநலஞ் சீர்மைகுன்று
எத்தம ராயும் பணிகொள்ள வல்ல விறைவர்வங்தென்
சித்தம ராயக லாதுட னுடித் திரிதவரே. (அ)

(இ - ள்.) தமக்குரிய - தமக்குரியனவாகிய, மத்தம் - ஊமத்தம் பூவும், அரா - பாம்பும், மதி - பிறைச்சந்திரனும், (ஆகியவற்றைத் தரித்து), மாடு - இடபவாகனமும் (ஏறி), அம்பதி - அழகிய இறைமைத்தன்மையும், நலம் - அருளும், சீர்மை - சிறப்பும், குன்று - குறையாமல் (வந்து தோன்றி), அடியார் - (தமது) அடியவர், எத்தமராயும் - (முன்) எப்படிப்பட்ட மூடராயிருந்திருப்பாராயினும், உத்தமராய் - சத்புருடராய், உலகாள - சிவலோகத்தைக் கைக்கொண்டனுபவிக்கும்படி, பணிகொள்ள வல்ல இறைவர் - (அவர்களை) அடிமை கொள்ளவல்ல கடவுள்,

வந்து - (என்முன்) வந்து, என் சித்தமராய் - என்மனத்தில் பொருந்தியவராய், அகலாது - நீங்காது, உடன் ஆடி - என்னுடன் ஆடி, திரிதவர் - திரிகின்றவரா யிருக்கின்றனர்; (எ-று).

(வி - ரை.) எத்தமராயும் என்பதில் தமர் என்பதற்கு, தமோகுணமுடையவர் (மூடர்) என்பது பொருளாம். செய்யுள் விகாரத்தால் ஆயினும் என்பது ஆயும் எனவந்தது. எத்தமராயும் என்பதற்கு, (அடியவர்க்குத் தாமே) எப்படிப்பட்ட பந்துவாயுமிருந்து எனப்பொருள் கூறினும் பொருந்தும். சித்தத்தவர் என்பது அத்துச்சாரியையும் அகரச்சாரியையும் குறைந்து சித்தமர் என வந்தது. திரிதவர் என்பதில் து, அ சாரியைகள். (8)

திரிதவர் கண்ணுள்ளு முள்ளத்தி னுள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை யறிவிப்ப தாயினு மாழிநஞ்சேய் [றும்
கரிதவர் கண்டம் வெளிதவர் சாந்தங்கண் மூன்றொடொன்
பரிதவர் தாமே யருள்செய்து கொள்வர்தம் பல்பணியே. (கூ)

(இ - ள்.) கண்ணுள்ளும் - (இறைவர் என்) கண்ணினுள்ளும், உள்ளத்தினுள்ளும் - மனத்தினுள்ளும் (வந்து), திரிதவர் - திரிகின்றனர், திரிதரினும் - (அங்ஙனம்) திரிந்தாலும், அவர் தன்மை - அவரது தன்மையை, அறிவிப்பது - (பிறர்க்கு யான்) தெரிவிப்பது, அரிது - (எனக்கு) அருமையான காரியமாம், ஆயினும் - (அங்ஙனம்) ஆயினும், (ஒருவகையால் அதனைத் தெரிவிக்கலாம்), ஆழி-திருப்பாற்கடலில் (உண்டாகிய), நஞ்சு - விஷம், ஏய் - பொருந்திய, அவர் கண்டம்கரிது - அவரது மிடறு கருமை நிறமுடையதாம், அவர் சாந்தம் வெளிது - அவர் (பூசும்) விபூதிப்பொடி வெண்மை நிறமுடையதாம், கண் மூன்று - (அவர்க்குக்) கண் மூன்றும், ஓடு பரிது ஒன்றும் - (அவர் தரித்துள்ள) ஆமையோடு பெரிதாய ஒன்றும், தம்பல்பணி - தமது

பல சர்ப்பாபரணங்களை, அவர் தாமே - அவரே, அருள்செய்து கொள்வர் - திருத்திக்கொள்வார். (இக்குறிகளால் அவரைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்); (எ - று).

(வி - ரை.) அந்தரியாமியாயுள்ள இறைவனது சகுண வடிவத்தின் சிறந்த குறிகள் இங்குக் கூறியவாறறிக. அவை கண்டம் கரிது, சாந்தம் வெளிது என்றற் றொடக்கத்தனவாம். ஒடு என்பது வுடு எனக்குறுகி நின்றது. (9)

பணிபதம் பாடிசை யாடிசை யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற்கொ ளப்பனை யத்தவற் கேயடிமை
துணிபதங் காமுறு தோலோடு நீறுட றார்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சல நீயென் றனிநெஞ்சமே. (க0)

(இ - ள்.) என்தனி நெஞ்சமே - எனது தனித்த மனமே, நீ - நீ, பதம் பணி - (பரமனது) திருவடிகளை வணங்கு, இசை பாடு - (அவனது) புகழைப் பாடு, இசையாக ஆடு - (அப்பாட்டிற்குப்) பொருத்தமாக ஆடு, பனிமலரால் அணி - (அவனைக்) குளிர்ந்த புஷ்பங்களால் அருச்சனை செய், பதங்கன் பற்கொள் அப்பன் - சூரியன் பற்களைத் தகர்த்த தலைவனாகிய, ஐயத்தவற்கே - பிக்ஷாடண மூர்த்திக்கே, அடிமை துணி - (உன்னை) அடிமையாகத் தீர்மானித்துக்கொள், பதம் காமுறு - சிவ பதவியை (அடைவதற்கு) விரும்பு, (இங்ஙனம் செய்வாயாயின், அவன்) தோல் ஒடு - (புலித்) தோலாடையைத் தரித்தலோடு, நீறு உடல் ஆர்த்து - விபூதியை உடம்பிலேபூசி (உன்முன் வந்து உனக்கு), நல்ல பதம் காட்டிடும் - நல்ல திருவடியைக் காட்டி (உன்னை) ஆட்கொள்வான், சஞ்சலம் தணி - (இனிக்) கவலையை ஒழிப்பாயாக; (எ - று).

(வி - ரை.) தனிநெஞ்சம் இறைவனது துணையின்றிய மனமாம். பதங்கன் - சூரியன். ஐயம் - பிச்சை. (10)

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர் ததும்ப முகமலர
அஞ்செங் காதலங் கூம்பவட் டாங்க மடிபணிந்து
தஞ்சொன் மலரா லணியவல் லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத் தான்பெரு வானகமே. (கக)

(இ - ள்.) நெஞ்சம் தளிர்விட-மனம் குழையவும், கண்ணீர் ததும்ப - கண்ணீர் ததும்பிப் பெருகவும், முகம் மலர - முகம் மலர்ச்சியடையவும், அம் - அழகிய, செம்மைகாதலம் - செம்மை யாகிய கைகள், கூம்ப - குவியவும், அட்டாங்கம் அடிபணிந்து - அட்டாங்கமாகத் (தனது) திருவடியை வணங்கி, தம் சொல் மலரால்-தமது பாடலாகிய மலர்களால், அணியவல்லோர்கட்கு- அருச்சிக்க வல்லவர்களுக்கு, தாழ்சடையான் - (நீண்டு) தாழ்ந்த சடாபாரத்தையுடைய பரமன், வஞ்சம் கடிந்து-(அவர்தம்) மயக் கத்தை ஒழித்து, திருத்தி - (அவர் மனத்தைத்) திருத்தி, பெருமை வானகம் - பெருமை பொருந்திய மோட்சத்தை, வைத்தான் - (அவர்க்குரியதாக) வைப்பான்; (எ - று).

(வி - ரை.) அட்டாங்க வணக்கமென்பது தலை ஒன்று, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய் ஒன்று, புயமிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலனுறப்பணிதலாம். வைப்பானென்பது வைத்தான் எனத் தெளிவுபற்றி இறந்த காலமாகக் கூறப் பட்டது. மயக்கம் - விபரீதபுத்தி. (11)

வானக மாண்டுமந் தாகினி யாடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப் போருங் கனகவண்ணப்
பானிற நீற்றற் கடியரு மல்லாப் படிறருமே. (கஉ)

(இ - ள்.) வானகம் ஆண்டு - சுவர்க்கலோகத்தை அரசாட்சிசெய்து, மந்தாகினியாடி - ஆகாய கங்கையிலே மூழ்கி,

ந்தாவனம்சூழ் - கெடாத கற்பகச் சோலையுள் பொருந்திய, தேன்நகு அம் மாமலர்சூடி - தேன்துளிக்கும் அழகிய சிறந்த மலர் மாலையைத்தரித்து, செல்வோரும் - (அங்கு) உலாவுகின்றவர்களும், சிதவல் சுற்றி - கந்தைத்துணியைத் தரித்து, கால் நகம் தேய - காலிலுள்ள நகங்கள் தேய, திரிந்து - அலைந்து, இரப்போரும் - யாசிக்கின்றவரும் (முறையே), கனகவண்ணம், பொன்னிறமுடைய, பால்நிறம் நீற்றற்கு - பால்போலும் வெண்மை நிறம் பொருந்திய விபூதியைத் தரித்த சிவபெருமானுக்கு, அடியரும் - அடியவரும், அல்லாப்படிறரும் - அடிமை செய்யாத வஞ்சகரும் (ஆவர்) ; (எ - று).

(வி - ரை.) செல்வோர் அடியர், இரப்போர் அல்லாப் படிறர் என்று அன்வயஞ் செய்துகொள்க. இது முறை நிரனிறைப் பொருள்கோள். சிதவல் - கந்தைத்துணி. கனகம் - பொன். படிறு - வஞ்சகம். மந்தாகினி என்பது ஆகாய கங்கையின் பெயர்களுள் ஒன்றும். (12)

படிறு யினசொல்லிப் பாழுட லோம்பிப் பலகடைச்சென்
றிடறு தொழிது மெழுநெஞ்ச மேயெரி யாடியெம்மான்
கடறு யினநஞ்ச முண்டபி ரான்கழல் சேர்தல் கண்டாய்
உடறு னுளபய னுவசொன் னேனிவ் வுலகினுள்ளே. (கூ)

(இ - ள்.) இவ்வுலகினுள்ளே - இவ்வுலகத்திலே, நெஞ்சமே - மனமே, (மக்களுக்கு), உடல் உள்ளபயன் - உடம்பினுலுளதாகும் பயன், எரியாடி - சுடலையாடினவனும், எம்மான் - எமது பெருமானும் (ஆகிய), கடல்தாயின - திருப்பாற்கடலில் உண்டாய, நஞ்சம் உண்ட பிரான் - விஷத்தையுண்ட சுவாமியினது, கழல் - திருவடிகளை, சேர்தல் - சேர்தலாம், ஆவ(து) - (இனிச்செய்யத்தக்கது) ஆவதை, சொன்னேன் - (நான் உனக்

குச்) சொன்னேன், பலகடைச்சென்று - பல (பணக்காரர்களது) தலைவாயிலிற் சென்று, படிறுயின சொல்லி - (அவர்களைப்புகழுமாறு பல) பொய்யானவற்றைச் சொல்லி, பாழ் உடல் ஓம்பி - அழியும் (இயல்பின தாய இச்) சரீரத்தைக் காப்பாற்றி, இடருது ஒழிதும் - வருந்தாதிருப்போமாக, எழு - (இனி நீ விரைந்து சிவபெருமானைத் தொழ) எழுவாயாக; (எ - று).

(வி - ரை.) கண்டாய் - முன்னிலையொருமை அசை. தான் - அசை. எரி என்பது தானியாகுபெயராக நின்று சுடலையை யுணர்த்திற்று. சுடலை யாடி என்பது சர்வசங்கார காலத்தில் ஈசன்செய்யும் செயலை யுணர்த்துவதாம். கழல் - வீரக்கழல்; அஃது அதனைத் தரித்த திருவடியை யுணர்த்துதலின், தானியாகு பெயராம். பாழ் - அழிவு. எரி - நெருப்பு. (13)

உலகா ளுறுவீர் தொழுமின்விண் ணாள்வீர் பணிமினித்தம்
பலகா முறுவீர் நினைமின் பரமனொ டொன்றலுற்றீர்
நலகா மலரா லருச்சிமி னுரை கத்துநிற்கும்
அலகா வுறுவீ ரரனடி யாரை யலைமின்களே. (கச)

(இ - ள்.) நித்தம் - எப்போதும், பல காமுறுவீர் - பல பொருள்களை (அடைய) விரும்புகின்றவர்களே, நினைமின் - (சிவபெருமானை மனத்தால்) தியானஞ் செய்யுங்கள், விண் ஆள்வீர் - சுவர்க்கலோகத்தையாள விரும்புகின்றவர்களே, பணிமின் - (அவனைவாக்கால்) துதிசெய்யுங்கள், உலகு ஆளுறுவீர் - பூவுலகத்தை ஆளவிரும்புகின்றவர்களே, தொழுமின் - (அவன் திருவடிகளைக் காயத்தால்) வணங்குங்கள், பரமனொடு ஒன்றல் உற்றீர் - சிவபெருமானொடு (பேதமின்றிப்) பொருந்துதலை விரும்புகின்றவர்களே, நல்ல காமலரால் அருச்சிமின் - சிறந்த சோலையிலுள்ள (நல்ல) மலர்களைக்கொண்டு (அவனது பாதபங்கயங்

களில்) அருச்சனை செய்யுங்கள், நாள் - எப்பொழுதும், நரகத்து நிற்கும் - நரகத்திலே வசிக்கின்ற, அலகு ஆ(க) உறுவீர் - பிசா சாக (இருத்தற்கு) விரும்புகின்றவர்களே, அரனடியாரை - சிவ னடியார்களை, அலைமின்கள் - வருத்துங்கள் ; (எ - று).

(வி - ரை.) உறுவீர் என்பது சந்தவின்பம்நோக்கி உற்றீர் எனக்கூறப்பட்டது. நரகத்தில் அலகையாக இருப்பதற்கு ஒருவ ரும் விரும்பாராகலின், 'அலகா உறுவீர் அரனடியாரை அலைமின் கள்' என்பது நரகத்தில் அலகையாக இருத்தற்கு விரும்பாதவர் களே! நீங்கள் சிவனடியாரை வருத்தாதிருங்கள் என்னும் கருத் துப் பொருள்பட நின்றது. இச் செய்யுளுக்கு, தொழுமின் உல காளுறுவீர், பணிமின் விண்ணாள்வீர், நினைமின் பலகா(ம)ம் உறுவீர் (விரும்பிய பலவற்றையும் அடைவீர்), அருச்சிமின் பரமனோடொன்றலுற்றீர், அலைமின்கள் அலகா உறுவீர் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். இப்பொருளில், உறுவீர் என்பது உற்றீர்எனத் தெளிவுபற்றி இறந்தகாலமாகக் கூறப்பட் டது. இச்செய்யுளில் 'உலகாளுறுவீர்' என்பதனால் இம்மைப்பய னும், 'விண்ணாள்வீர்' என்பதனால் மறுமைப்பயனும், 'பரமனோ டொன்றலுற்றீர்' என்பதனால் வீடுபேறாகிய மோட்சமும்கூறப் பட்டன. அலகை என்பது எதுகை நோக்கி, அலகு எனவந்தது.

அலையார் புனலனன் ஞாயி றவனி மதியம்விண்கால்
தொலையா வுயிருடம் பாகிய சோதியைத் தொழுமினோ [னே
தலையாற் சுமந்தூந் தடித்தொண் கொடித்தே ரரக்கனென்
கலையா னொருவிரற் றுங்கதில் லாவிட்ட காரணமே. (கரு)

(இ - ள்.) ஒண்(மை) - சிறந்த, தடித்துக்கொடி - மின்ன லுருவம் எழுதிய கொடி (யோடு கூடிய), தேர் - தேரையுடைய அரக்கன் - இராவணன், தலையால் சுமந்தும் - (தன்) தலையினால்

(கைலமலையைத்) தூக்கியும், கலையான் - ஒற்றைக்கலைச் சந்திரனைத் தரித்த பரமன், ஒருவிரல் - ஒருவிரலால் (அம்மலையை அழுத்த), தாங்க கில்லா (து) விட்ட - (அதனைத்) தாங்கமாட்டாது ஒழிந்த, காரணம் என்னே - காரணம் யாதோ? (அதனால், பரமன் சர்வ சத்திமானென்பது பெற்றாமாதலின்), அலையார் - அலைபொருந்திய, புனல் - நீரும், அனல் - நெருப்பும், ஞாயிறு - சூரியனும், அவனி - பூமியும், மதியம் - சந்திரனும், விண் - ஆகாயமும், கால் - காற்றும், தொலையா(த) - அழிவில்லாத, உயிர் - உயிரும் (ஆகிய எட்டுப் பொருள்களையும்), உடம்பாகிய - (தனக்கு) உடம்பாகக் கொண்டுள்ள, சோதியை - சோதி சொரூபனாகிய பரமனை, தொகுமின் - (நமரங்காள்! நீவிர் அடைக்கலமாகக்) கூடி அடையுங்கள்; (எ - று).

(வி - ரை.) கலையான் என்பதற்கு, (கரத்தில்) மானேந்தியவன் என்பதும் பொருளாம். தொகுமின் என்பது செய்யுள் விகாரத்தால் தொக்குமின் என வந்தது. மதியம் என்பதில் அம் சாரியையாம்.

"அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான், அவனே புவி புனல்காற் றாவான் - அவனே, இயமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான, மயனாகி நின்றானும் வந்து" என்று அற்புதத்திருவந்தாதி கூறுவதும் இங்குணர்தற்பாற்றும். (15)

காரணன் காமரம் பாடவோர் காமரம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற தையலைத் தாங்குவர்யார்
போரணி வேற்கண் புனற்படம் போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்பட மூடி யிருந்தனவே. (கசு)

(இ - ள்.) காரணன் - சர்வகாரணனாகிய பரமனே!, காமரம் - காமரம் என்னும் இசையை, பாட - (வண்டுகள்) பாடா

நிற்க, ஓர் காமர்-(உயிர்களை மயக்குவதில்) ஒப்பற்ற மன்மதனது, அம்பு ஊடு உற - புஷ்பபாணமானது (தன்) மனத்தினுள்ளே தைக்க (அதனால்), தன்தார் - உன்றனது மாலையில், அணங்கு ஆக - விருப்பமாக, தளர்கின்ற - வருந்துகின்ற, தையலை - பெண்ணை, தாங்குவர் யார் - ஆதரிக்கின்றவர் (உன்னைத்தவிர வேறு) யார்? (சொல்), போர் - போர்செய்தற்குரிய, அணி - அழகிய, வேல் - வேலையொத்த, கண் - (இவளது) கண்கள், புனற் படம் - ஜல படலத்தால், போர்த்தன - மூடப்பட்டன, பூஞ் சுணங்கு - பொலிவுள்ள தேமல், ஆர் - பொருந்திய, ஏர் அணி - அழகமைந்த, கொங்கையும் - ஸ்தனங்களும், பொற்படம் - (பசலை யென்னும்) பொன்னுடையால், மூடியிருந்தன - மூடப் பட்டன, (பரமனே! நீ இவற்றைக் கவனித்தாவது இவளுக்கு உன் மாலையை அருள் செய்யவேண்டும்); (எ - று).

(வி - ரை.) இது செவிலிகூற்று. இக்கூற்று மாலைவேண்டலாம். பசலை - நிறவேடுபாடு. 'போர்த்தன', 'மூடியிருந்தன' என்னும் செய்வினைகள் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தன. (16)

இருந்தன மெய்திபு நின்றுந் திரிந்துங் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு போகநெஞ் சேமடவாள் [ன்
பொருந்திய பாகத்துப் புண்ணியன் புண்ணியல் சூலத்தெம்மா
திருந்திய போதவன் றூனே களையுநந் தீவினையே. (கஎ)

(இ - ள்.) போக நெஞ்சே - (சுக) போகத்தை விரும்பும் மனமே! (நீ) இரும்தனம் - பெருஞ்செல்வத்தை, எய்தியும் - அடைந்தும், நின்றும் திரிந்தும் - நின்றும் உலாவியும், கிடந்தும் - படுத்தும், அலைந்தும் - (பற்பலவிடத்திற்குச் சென்றோடி) அலைந்தும், வருந்திய வாழ்க்கை - வருந்துதற்குக் காரணமாகிய

இல்வாழ்க்கையை, தவிர்த்திடு - ஒழித்து விடுவாய், பாகத்து - இடப்பாகத்திலே, மடவாள் - பார்வதி, பொருந்திய - அமைந்த, புண்ணியன் - புண்ணிய சொரூபன், புண் இயல் - மாமிசம் பொருந்திய, சூலத்துஎம்மான் - சூலப்படையை ஏந்திய கடவுள், திருந்தியபோது - (நாம்) திருத்தமடைந்த காலத்தில் (சிவபத்தர்களான காலத்தில்), அவன்தானே - அப்பரமனே, (சற்குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து), நம்தீவினை - நமது பாவங்களை, களையும் - கெடுப்பான் ; (எ - று).

(வி - ரை.) மடவாள் - இளமைப்பருவ முடையவள் ; மடம் - இளமை. திருந்துதல் - கொடுநெறியினின்று நீங்கிச் செந்நெறியி லொழுகுதல். பரமசிவன் அதிகாரி புருடர்க்கன்றி, ஏனையோர்க்கருள் செய்வதில்லையாம் ; அதனால், நாம் அதிகாரி புருடராக முயலல்வேண்டும் என்பது இச்செய்யுளின் கருத்தாம். கிடந்தும் என்னும் உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. எம்மான் - எமது கடவுள். (17)

தீவினை யேனைநின் றைவரி ராப்பகற் செத்தித்தின்ன [யும்
மேவின வாழ்க்கை வெறுத்தேன் வெறுத்துவிட் டேன்வினை
ஓவின துள்ளந் தெளிந்தது கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கண ணாரணன் பாதங்களே. (கஅ)

(இ - ள்.) தீவினையேனை - தீவினையுடைய என்னை, ஐவர் - (இந்திரியக் கள்வரென்னும்) ஐவர், இராப்பகல் - இரவும் பகலும், நின்று - (ஒழியாது) நின்று, செத்தித்தின்ன - (நாய்போல) வருத்தித்தின்ன, (அதனால்), மேவின - பொருந்தின, வாழ்க்கை வெறுத்தேன் - இல்வாழ்க்கையை (நான்) வெறுத்துவிட்டேன், (அதனால்), வினையும் வெறுத்து விட்டேன் - (பயனை விரும்பிச்

செய்யும்) கருமத்தையும் வெறுத்தொழித்தேன், (அதனால்), ஒழிந்தது - (அக்கருமமும்) ஒழிந்தது, உள்ளம் தெளிந்தது - (அதனால்) மனமும் தெளிவடைந்து விட்டது, (அதனால்), கள்ளம் கடிந்து - (நான்) வஞ்சனையை ஒழித்து, பாவின செஞ்சடை - பரவிய சிவந்த ஜடாபாரத்தையுடைய, முக்கண்ணன் - மூன்று கண்களையுடையவனாகிய, ஆரணன் - பரமனது, பாதங்கள் அடைந்தேன் - திருவடிகளை (அடைக்கலமாக) அடைந்தேன்; (எ - று).

(வி - ரை.) ஐவர் என்பது தொகைக்குறிப்புச் சொல். ஆரணன் - வேதமுடியில் விளங்கும் பொருளா யிருப்பவன்; ஆரணம் - வேதம். இச்செய்யுள் காரணமாலையணி. இந்திரியமைந்தாவன - சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, கிராணமென்பனவாம். தீவினை - தீமை யுண்டாவதற் கேதுவாகிய வினை. தீமை - துன்பம். (18)

பாதம் புவனி சுடர்நய னம்பவ னம்முயிர்ப்போங்
கோத முடுக்கை யுயர்வான் முடிவிசும் பேயுடம்பு
வேத முகந்திசை தோண்மிகு பன்மொழி கீதமென்ன
போத மிவற்கோர் மணிநிறந் தோற்பது பூங்கொடியே. (கசூ)

(இ - ள்.) பூங்கொடியே - அழகிய (பூங்) கொடிபோன்றவளே! பாதம் புவனி - (பரமனது) திருவடி பூமியாம், நயனம் சுடர் - கண் (சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று) ஒளிப்பொருள்களாம், உயிர்ப்பு பவனம் - பிராணவாயு காற்றாம், உடுக்கை ஓங்கு ஓதம் - ஆடை (அலையெழுந்து) பெருகுகின்ற கடலாம், முடி உயர்வான் - திருமுடி உயர்ந்த ஆகாயத்தினுச்சியாம், உடம்பு விசும்பு - தேகம் ஆகாயமாம், முகம் வேதம் - வாய் வேதமாம், தோள் திசை - தோள் திக்குக்

களாம், மிகுபன்மொழி கீதம் - (பயன்) மிகுந்த பலசொற்கள் சாமவேதமாம், இவற்கு - (இப்படிப்பட்ட தன்மைகளையுடைய) இப்பரமனுக்காக, ஓர் மணிநிறம் - (உனது) ஒப்பற்ற அழகிய வண்ணம், தோற்பது - வேறுபடுவது, என்னபோதம் - (உனக்கு) என்ன அறிவாம், (அறிவன்றாம்) ; (எ - று).

(வி - ரை.) பூங்கொடி - உவமை யாகுபெயர். இது தோழி கூற்று. பாங்கி பரமனது விராட்புருட வடிவத்தினியல்பைத் தலைவிக்குக் கூறி, அவனை நீ விரும்புதல் கூடாதென்று வற்புறுத்தினளென்பது இச்செய்யுளின் கருத்தாம். இங்கு முகம் வாயை யுணர்த்திநின்றது. உடுக்கை என்பதன் பொருள் உடுக்கப்படுவதென்பதாம். விசும்பே என்னும் ஏகாரம் அசை நிலையாம்

“ அடையுந் திசைஈசன் திண்டோளா காசம்
அடையுந் திருமேனி அண்டம் - அடையும்
திருமுடிகால் பாதாளம் ஆடைகடல் அங்கி
திருமுடிநீர் கண்கள்சுடர் மூன்று.”

என்னும் பரணதேவர் திருவாக்கும், “பரமேசுவரனது சிரசு சுவர்க்கமாம் ; சுரோத்திரம் திக்குகளாம் ; நேத்திரம் சந்திர சூரியராம் ; முகம் அக்கினியாம் ; நாபி ஆகாசமாம் ; பாதம் பூமியாம் என்று பாவனைசெய்து, அவனைத் தியானிப்பது பாவயோகமெனப்படும்” என்று யோகநூல் கூறுவதும் இங்கு உணர்தற் பாலனவாம். (19)

கொடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவும்
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுளேப் போதும் வருகின்றவே.()

(இ - ள்.) கொடிமேல் இடபமும் - (பரமனது) கொடியில் (எழுதிய) இடபவடிவமும், கோவணக்கீளும் - (அரையில் கட்டியுள்ள) கோவணத்தோடு கூடிய கீளும், ஓர் கொக்கிறகும் - (முடியில் தரித்துள்ள) ஒப்பற்ற கொக்கினது இறகும், அடிமேல் கழலும் - திருவடியின்கண் தரித்துள்ள வீரக்கழலும், அகலத்தில் நீறும் - மார்பில் பூசியுள்ள திருநீறும், ஐவாய் அரவும் - (திருமேனியில் ஆபரணமாகத் தரித்துள்ள) ஐந்துதலைகளையுடைய பாம்பும், முடிமேல் மதியும் - முடியின்மேலுள்ள பிறைச்சந்திரனும், முருகு அலர் - (தோள்மீதுள்ள) வாசனை வீசுகின்ற, கொன்றையும் - கொன்றைமலர் மாலையும், (திருக்கரத்திற் பற்றியுள்ள), மூ இலைய - மூன்று இலைவடிவமாக அமைந்த, வடிவேல் - வடித்தவேலினது, வடிவும் - வடிவமும், எப்போதும் - எப்போதும், என்கண்ணுள் - என் கண்ணினிடத்து, வருகின்ற(ன) - (மறையாது தோன்றி) வருகின்றன; (எ - று).

(வி - ரை.) கீள் - அரைஞாண் கயிற்றுக்குப் பதிலாக அரையில் கட்டப்படும் கிழிந்த துணித்துண்டு. முருகு அலர் என்பதற்கு, தெய்வத்தன்மை பொருந்திய என்பதும் பொருளாம். வாய் - தலையை புணர்த்தலின், சினையாகு பெயராம்; உடம்பை நோக்கத் தலை சினையாயினும், அதுவாயை நோக்க முதலாம். வருகின்ற என்பது அன்சாரியை பெறாத வினை முற்று. எ - ஈற்றசை. இச்செய்யுள் இறைவனது சகளத்திருவுருத் தியானத்தின் தோற்றக்கிரமம் கூறியதாம்.

"சங்கையி லாவகை யமபட ராலுயிர் தளர்பொழு தத்தருகே
மங்கையர் சூழ விருந்தழு துள்ள மயக்கினும் யான்மறவேன்
சங்கையு நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணையுந் திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமு நேமியு மஞ்சன மேனியுமே."

என்னும் வில்லிபுத்தூராழ்வார் பாரதச் செய்யுளும் இங்குணர் தற்பாலதாம். (20)

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்று மாற்றகில் லேன்பொடி பூசிவ
அருகொன்றி நிற்க வருளுகண் டாயழல் வாயரவம் [ந்துன்
வெருகொன்றவெண்மதிசெஞ்சடைமேல்வைத்தவேதியனே.

(இ - ள்.) அழல்வாய் அரவம் - தீயை ஒத்த விஷம்பொருந்திய பாம்பிற்கு, வெரு - அஞ்சுதலை, கொன்ற - நீக்கிய, வெண்மதி - வெண்மை நிறம்பொருந்திய பிறைச் சந்திரனை, செஞ்சடைமேல் வைத்த வேதியனே - சிவந்த சடாபாரத்திற்றரித்த சிவபெருமானே! வருகின்ற - (யௌவனப் பருவத்தைத் தொடர்ந்து) வருகின்ற, மூப்பொடு - கிழப்பருவத்தோடு, தீப்பிணி - கொடிய நோயாகிய, கூற்றம் - இயமன், வைகற்கு வைகல் - நாளுக்குநாள், பொருகின்ற - போர்செய்கின்ற, போர்க்கு - சண்டைக்கு, ஒன்றும் - சிறிதும், ஆற்றகில்லேன் - (நான்) சகிக்க முடியாதவனா யிருக்கின்றேன், (ஆதலால்), பொடிபூசிவந்து - (நான்) திருநீறு அணிந்துவந்து, உன்அருகு - உன் சமீபத்தில், ஒன்றி நிற்க - பொருந்தியிருக்க, அருளு - (எனக்கு நீ) அருள்செய்வாயாக; (எ - று).

(வி - ரை.) தீ - கொடுமை. போர்க்கென்றும் (சண்டைக்கு எப்போதும்) என்றும் பாடமுண்டு. வெரு - முதனிலைத் தொழிற்பெயர். வேதியன் - வேதத்தைக் கூறியவன். வேதியன் வெண்மதியைச் செஞ்சடைமேல் வைத்தமையால், அஃது ஐவாயரவிற்கு வெருவுதலொழிந்த தென்பது ஈற்றடியின் கருத்தாம். இது நானும் உன் அருகொன்றி நிற்பின் பயமொழிவேன் என்னும் பொருளைத் தருதலின், கருத்துடையடையணி

யாம். கண்டாய் - முன்னிலை யசை யிடைச்சொல். கூற்றம் ஒத்த தீப்பிணி என்னுது தீப்பிணிக் கூற்றம் என்றமையால், அஃது உருவகமாம். கூற்றம் என்பதில் அம் சாரியையாம். (21)

வேதியன் பாதம் பணிந்தேன் பணிந்துமெய்ஞ் ஞான
மென்னும், சோதியென் பால்கொள்ள வுற்றுநின் றேற்கின்று
தொட்டிதுதான், நீதியென் ருன்செல்வ மாவதென் றேன்மே
னினைப்புவண்டேர், ஓதிநின் போல்வகைத் தேயிரு பாலு
மொழித்ததுவே. (உஉ)

(இ - ள்.) வண்டு - வண்டுகள் (பொருந்திய), ஏர் - அழகமைந்த, ஓதி - கூந்தலையுடைய பெண்ணே !, வேதியன் பாதம் பணிந்தேன்-(நான்)வேதியனுகிய பரமனது திருவடியை வணங்கினேன், பணிந்து - வணங்கி, மெய்ஞ்ஞானமென்னும் - தத்துவ ஞானமென்று சொல்லப்படும், சோதி - சோதி சொரூபம், என் பால் கொள்ள - என்மனத்தின்கண் அமைந்துநிற்க, உற்று - பொருந்தி, நின்றேற்கு - நின்றவனுகிய எனக்கு (அவன்), இன்று தொட்டு - இன்று முதற்கொண்டு (உனக்கு), நீதி இது தான் என்ருன் - முறை இதுதான் என்று சொன்னுன், செல்வம் ஆவது என்றேன் - (அதற்கு யான் இது எனக்குச்) செல்வமாவதாமென்று கூறினேன், மேல் - (அதற்கு) மேல் (என்னிடத்துண்டாகிய), நினைப்பு - (அந்த மெய்ஞ்ஞான சோதி சொரூப) சிந்தனை, இருபாலும் - (காணப்படும் இவ்வுலகம் கேட்கப்படும் அவ்வுலகம் என்னும்) இரண்டுலகத்திலும், நின் போல்வ (ன) - உன்னைப்போன்ற சிற்றின்ப சாதனங்களை, கைத்து ஒழித்தது - வெறுத்துத் தள்ளிவிட்டது; (எ - று).

(வி - ரை.) நினைப்பு ஒழித்தது என்புழி நினைப்பு, கருவிக் கர்த்தாவாம். என் என்பது இடவாகு பெயர். இருபால் -

இரண்டு பக்கம்; அவை இவ்வுலகும் அவ்வுலகுமாம். அவ்வுலகு - சுவர்க்கலோகம். தத்துவஞான சிலர் எதிலும் பற்றின்றி யிருப்பரென்பது இச்செய்யுளின் கருத்தாம். தத்துவஞானம் - சிவஞானம். இது காமக்கடலை விவேகப் புணையால் கடந்த தத்துவஞானி கூற்றும். கைத்தே என்னும் ஏகாரம் அசை நிலையாம். 'நின் போல்வ கைத்தே யிருபாலு மொழித்ததுவே' என்பதனை நின்போல் + வகைத்தே + இருபாலும் + ஒழித்ததுவே எனப்பிரித்து அதற்கு, (பெண்பாலாகிய அவளென்னும்) உன்னை (வெறுத்து ஒழித்தமை) போல, திறமையுடையதாகவே (ஆண்பாலாகிய அவன், ஒன்றன்பாலாகிய அது என்னும்) இரண்டு பால்களையும் (வெறுத்து) ஒழித்துவிட்டது என்றும் பொருள் கூறலாம். (22)

ஒழித்தேன் பிறவியை யூர்ந்தே னறுபகை யோங்கிற்றுள்ளம்
இழித்தே னுடம்பினை யேலேன் பிறரிடை யிம்மனையும்
பழித்தேன் பழியே விளக்கும்பஞ் சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தே னினிமிகத் தெள்ளியனே.()

(இ - ள்.) அறுபகை - (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும்) ஆறுவகைப்பகைக் குணங்களையும், ஊர்ந்தேன் - (நான்) அடக்கிவிட்டேன் (அதனால்), உள்ளம் - (எனது) மனம், ஓங்கிற்று - உயர்ந்த நிலையை அடைந்தது (அதனால்), உடம்பினை இழித்தேன் - உடம்பைப் பழித்து ஓம்புதலொழிந்தேன், (அதனால்), பிறரிடை ஏலேன் - பிறரிடத்தில் (சென்று இனி ஒன்றையும் யாசித்து) ஏற்கமாட்டேன், இம்மனையும் - இவ்வில்வாழ்க்கையையும், பழித்தேன் - (சாரமற்றதென்று) பழித்து நீக்கினேன், பழியே விளக்கும் - பழிக்கேதுவாகிய பாவங்களையே யுண்டாக்கும், பஞ்சேந்தியக் குஞ்சரமும்-

ஐந்து இந்திரியங்களாகிய யானைகளையும், தெழித்தேன்-(விவேக மென்னும் அங்குசத்தால் அடக்கி) அதட்டி ஓட்டினேன், சிவனடிசேர்ந்தேன் - சிவபெருமானது திருவடிகளைத் (தஞ்சமாக) அடைந்தேன், பிறவியை ஒழித்தேன் - (அதனால் யான்) பிறப்பை ஒழித்துவிட்டேன், இனி மிகத் தெள்ளியன் - இப்பொழுது மிகவும் தெளிவடைந்தவனானேன்; (எ - று).

(வி - ரை.) ஒழித்தேன் பிறவியை என்பதற்கு, பிறப்பிற்குக் காரணமாயுள்ள அஞ்ஞானத்தைத் தத்துவ ஞானத்தால் ஒழித்து விட்டேனென்று பொருளுரைத்துக் கொள்க. அறுபகை - தொகைக் குறிப்புச்சொல். பஞ்சேந்தியக் குஞ்சரம் என்பது மெய்ஞ்ஞானமென்னும் சோதி என்பது போல உருவகமாம். இந்தியம் இந்திரிய மென்பதன் விகாரமாம். இச்செய்யுள் காரணமாலை யணியாம். பழி என்பது காரிய வாகு பெயர். பஞ்சேந்தியம் என்பது பஞ்ச + இந்திரியம் எனப் பிரிபடுவதாம்.

தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன் தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்பெறேனுரைத்தாருரைத்த
கள்ளிய புக்காற் கவிகளொட் டாகட னஞ்சயின்றாய்
கொள்ளிய வல்லகண்டாய் புன்சொலாயினுங்கொண்டருளே.

(இ - ள்.) கடல் நஞ்சு அயின்றாய் - திருப்பாற்கடலிலுண்டாய விஷத்தை உண்டவனே, தெள்ளிய மாந்தரை - (கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களால்) தெளிந்த அறிவுடையவரை, சேர்ந்திலன் - சேர்ந்தேனில்லை, (சேராதிருந்தும்), தீங்கவி - இனியபாடல்களை, பாடல் உற்றேன்- (உன்மீது) பாடத்தொடங்கினேன் (ஆனால்), ஒள்ளிய சொல்லும் பொருளும் பெறேன் - (தீங்கவிபாடுதற்குரிய) சிறந்த சொற்களையும் பொருள்களையும் பெறாதவனா யிருக்கின்றேன், உரைத்தார் - புலவர், உரைத்த -

பாடிய பாடல்களின் சொற்களையும் பொருள்களையும், கள்ளிய - களவுசெய்து (பாடல்கள்) பாட, புக்கால் - தொடங்கினால், கவிகள் ஒட்டா - அப்பாடல்கள் (சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள்) பொருந்தமாட்டா, கொள்ளிய அல்ல - (அதனால், என் பாடல்கள்) கொள்ளத்தக்கன வன்றாம், புன்சொல்லாயினும் - (அவை) புன்சொற்களை யுடையனவாயினும், கொண்டு - (அவற்றை) ஏற்றுக்கொண்டு, அருள் - (எனக்கு நீ) அருள்செய்வாயாக; (எ - று).

(வி - ரை.) உரைத்தார் (நூலுரைத்த புலவர்) என்பது வினையாலணையும் பெயர்; உரைத்த என்பது அன்சாரியை பெறாத வினையாலணையும் பெயர். கண்டாய் என்பது முன்னிலை யசை யிடைச்சொல். இறைவனே! நீ வெறுக்கத்தக்க நஞ்சை யேற்றுக்கொண்டாற்போல, என்புன் கவிகளையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பது இச்செய்யுளின் கருத்தாம். இது கருத்துடை யடைகொளியணி. கவிகளொட்டார் என்றும் பாடமுண்டு; அதற்குப் பொருள் (அப்பாடல்களைப்) பாவலர் ஏற்றுக்கொள்ளாரென்பதாம். (24)

அருளால் வருநஞ்ச முண்டுநின் றாயை யமரர்குழாம் [றேன்
பொருளார் கவிசொல்ல யானும்புன் சொற்கள்புணர்க்கலுற்
இருளா சறவெழின் மாமதி தோன்றவு மேன்றமதென்ன
வெருளா தெதிர்சென்று மின்மினி தானும் விரிகின்றதே. ()

(இ - ள்.) இருள் ஆசு - இருளாகிய குற்றம், அற - ஒழிய, எழில் மாமதி - அழகிய சிறந்த சந்திரன், தோன்றவும் - உதயமாகவும், மின்மினிதானும் - மின்மினிப் பூச்சியும், என்றமது என்ன - (தன் வடிவம் சந்திரனை) ஒத்திருக்கின்றதென்று (எண்ணி), வெருளாது - அஞ்சாமல், எதிர்சென்று - (அச்சந்தி

ரன்) எதிரேசென்று, விரிகின்றது - பிரகாசிக்கின்றது; (அது போல), வரும் - (திருப்பாற்கடலினின்றும்) தோன்றி வந்த, நஞ்சம் - விஷத்தை, அருளால் - (விண்ணவர் மீது வைத்த) கருணையால், உண்டு நின்றாயை - உண்டுநின்ற பரமனாகிய உன்னை, அமரர்குழாம் - தேவகணங்கள், பொருள்சூர் - நற்பொருள்கள் நிறைந்த, கவி-பாடல்களால், சொல்ல - துதிக்க, யானும் - நானும், புன்சொற்கள் - புன்சொற்களால், புணர்க்கலுற்றேன் - பாடல்கள் செய்து துதிக்கத்தொடங்கினேன்; (எ - று).

(வி - ரை.) இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி; இதன் பின்னிரண்டடி தற்குறிப்பேற்றவணி. புன்சொற்கள் - இலக்கணப் பொருத்தங்கடந்த சொற்கள். மின்மினிப் பூச்சி சந்திரனைப்போலப் பிரகாசிக்க விரும்பி அவன் முன் வந்து பிரகாசிப்பதுபோல, நானும் இறைவனை அமரர் குழாம் பாடல்களால் துதிப்பதுபோலத் துதிக்க விரும்பி அவன் முன் வந்து பாடல்களால் துதிக்கத் தொடங்கினேன் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம். கணம் - கூட்டம். (25)

விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடை யச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப் [யே.
புரிகின்ற வெண்முகில்போன்றுள தாமெந்தை பொன்பொடி

(இ - ள்.) எந்தை - எமது சுவாமியினது, மேனி - திருமேனியானது (செந்நிறத்தால்), விரிகின்ற - (கிரணங்களால்) பரவுகின்ற, ஞாயிறு போன்றது - சூரியனைப் போன்றதாம், செஞ்சடை - செம்மையாகிய சடாபாரமானது (மின்னல் நிறத்தால்), அஞ்ஞாயிறு - அந்தச் சூரியனை, சூழ்ந்து எரி

கின்ற - சூழ்ந்து பிரகாசிக்கின்ற, வெம்கதிர்ஒத்தது - வெப்பமாகிய கிரணங்களைப் போன்றதாம், அச்சடைக்கீழ் கண்டம் - அந்தச் சடாபாரத்தின் கீழேயுள்ள ஸ்ரீகண்டமானது (கருமை நிறத்தால்), சரிகின்ற கார் இருள்போன்றது - தவழ்கின்ற கரிய இருளைப்போன்றதாம், பொன்பொடி - அழகிய விபூதிப் பொடியானது (வெண் ணிறத்தால்), அக்கார் இருள் கீழ்புரிகின்ற - அந்தக் கரிய இருளின் கீழே அமைந்திருக்கின்ற, வெண்முகில் போன்று உளது - வெண்மையான மேகத்தைப் போன்றிருப்பதாம்; (எ - று).

(வி - ரை.) இச்செய்யுள் பண்புவமை யணியாம்; பலவயிற் போலியுவமை யணியுமாம். 'பொன்வண்ண மெவ்வண்ணம்' என்னுஞ் செய்யுளினுவமைப் பொருத்தமு மிங்குணர்தற்பாலதாம்.

"மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பில்
தொக்க பேரிருள் மாதரொத் தணவுதெ் தோற்றம்
செக்க ரீசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே"

என்னும் கந்தபுராணச் செய்யுள் இங்கு அணிநோக்கி யுணரத் தக்கதாம். (26)

பொடிக்கின் றிலமுலை போந்தில பற்சொற் பொருடெரியா, முடிக்கின் றிலள்குழ லாயினுங் கேண்மின்கண் மூரிவெள்ளம், குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங் கண்டன்மெய்க் கொண்டணிந்த, கடிக்கொன்றை நாறுகின் றுளறி யேன்பிறர் கட்டுரையே. (உஎ)

(இ - ள்.) முலை பொடிக்கின்றில - (இவளுக்கு) முலைகள் (திரண்டு) தோன்றவில்லை, பல்போந்தில - (கடைவாய்ப்) பற்

கள் முளைக்கவில்லை, சொல்பொருள் தெரியா - (இவள் கூறும்) சொற்களின் பொருள்கள் விளங்காதனவா யிருக்கின்றன, குழல் முடிக்கின்றிலள் - (இவள்) கூந்தலைமுடிக்கத் தெரியாதவளாயிருக்கின்றாள், ஆயினும் - ஆனாலும், கேண்மின்கள் - (எனக்கு நண்பாயுள்ள பெண்களே! நான் சொல்வதை நீங்கள்) கேளுங்கள், மூரிவெள்ளம் - பெரிய வெள்ளமாகிய கங்கை, குடிகொண்ட - குடியாக இருத்தலைக்கொண்ட, செஞ்சடை - செம்மையாகிய சடாபாரத்தையுடைய, கொண்டல்-(நீருண்ட) மேகத்தை யொத்துக் கறுத்த, அம் - அழகிய, கண்டன் - ஸ்ரீகண்டமூர்த்தி, மெய் - (தனது) சரீரத்தில், கொண்டு அணிந்த - (அன்பாகக்) கொண்டு தரித்த, கடிகொன்றைநாறுகின்றாள் - சிறப்பமைந்த கொன்றைப்பூவின் வாசனையுடையவளா யிருக்கின்றாள் (இஃதொன்றே நான் அறிவேன்), பிறர் கட்டுரை - பிறர் கூறும் உறுதிச்சொற்களை, அறியேன் - அறியமாட்டேன்; (எ - று).

(வி - ரை.) கொன்றை நாறுகின்றாள் என்பதற்கு, கொன்றைப் பூவை விரும்புகின்றாள் என்றும், கொன்றைப் பூவின் மணம் வீசுகின்றவளாயிருக்கின்றாள் என்றும் பொருள்கூறலாம். அறியாள் பிறர் கட்டுரை என்றும் பாடமுண்டு. அதற்கு, பிறர் சொல்லும் உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்ளா திருக்கின்றாள் என்று பொருளுரைத்துக்கொள்க. இது நற்றாய் கூற்று.

"முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங் குழல்குறிய
கலையோ வரையில்லை நாவோ குழறுங் கடன்மண் ணெல்லாம்
விலையோ வெனமிளி ருங்கண் ணிவள்பர மேபெருமான்
மலையோ திருவேங் கடமென்று கற்கின்ற வாசகமே."

என்று நம்மாழ்வார் கூறுவதும் இங்குணர்தற்பாலதாம். (27)

உரைவளர் நான்மறை யோதி யுலகமெ லாந்திரியும்
விரைவளர் கொன்றை மருவிய மார்பன் விரிசடைமேல்
திரைவளர் கங்கை நுரைவளர் தீர்த்தஞ் செறியச்செய்த
கரைவளர் வொத்துள தாற்சிர மாலையெங் கண்டனுக்கே. ()

(இ - ள்.) உரைவளர்-புகழ்பெருகுகின்ற, நான்மறை ஓதி-நான்கு வேதங்களையுங்கூறி, உலகம் எல்லாம் திரியும் - உலகம் எங்கும் திரிகின்ற, விரைவளர் - வாசனைவீசுகின்ற, கொன்றை மருவிய - கொன்றைப்பூமாலை பொருந்திய, மார்பன் - மார்பை யுடையவனுகிய, எம்கண்டனுக்கு - எமது ஸ்ரீகண்டத்தையுடைய பரமனுக்கு, சிரமாலை - (அவன் தலையில் தரித்துள்ள) தலைமாலையானது, விரிசடைமேல் - பரந்த சடாபாரத்தின்மீது (இருக்கின்ற), திரைவளர் - அலைகள்பெருகுகின்ற, கங்கை - கங்கையாற்றினது, நுரைவளர் தீர்த்தம் - நுரைகள் அமைந்த நீரை, செறியச்செய்த - அடங்கச்செய்த, கரைவளர்வு ஒத்துளது - கரையின் வளர்ச்சியை ஒத்திருக்கின்றது; (எ - று).

(வி - ரை.) ஆல் - அசைநிலை. 'தீர்த்தம் செறியச் செய்த' என்பதற்கு, நீர் அடங்குதற்காகக் கட்டிய என்று பொருள் கூறுதலும் பொருந்துவதாம்.

சிவபெருமான் தன்தலைமீ தணிந்துள்ள தலைமாலை, தன் சடையின்மீதுள்ள கங்கையாறு வழிந்து போகாவாறு அதற்குக் கரைகட்டினது போலிருக்கின்றதென்பது இச்செய்யுளின் திரண்டபொருளாம்.

"தலையே நீவணங்காய் தலை - மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்." (28).

என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கு இங்குணர்தற் பாற்றும்.

கண்டங் கரியன் கரியீ ருரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான் சிறுமான் றரித்தபிரான்
பண்டம் பரம சிவனோர் பிரமன் சிரமரிந்த
புண்டங் கயிலன் பயிலார மார்பனெம் புண்ணியனே. (உகூ)

(இ - ள்.) எம்புண்ணியன் - எமது புண்ணிய சொரூபி யாகிய பரமன், கண்டம் கரியன் - ஸ்ரீகண்டத்தில் கருமை நிறம் உடையவன், கரி - யானையினின்றும், ஈர் - உரித்த, உரியன் - தோலையுடையவன், விரிதரு - (நாமரூப வடிவமாகப்) பரவிய, சீர் - சிறப்பினையுடைய, அண்டம்கடந்த பெருமான் - உலகத்தைக்கடந்த பெருமான், சிறுமான் தரித்தபிரான் - (வலக்கரத்தில்) சிறிய மானை ஏந்திய பரமன், பண்டு - பழமையான, அம்-அழகிய, பரமசிவன்-(யாவர்க்கும்) மேலாயுள்ள சிவன், ஓர் பிரமன் - ஒப்பற்ற பிரமதேவனது, சிரம் அரிந்த - தலையை யரிந்ததனால் ஒட்டிய, புண்தங்கு - மாமிசம் பொருந்திய, அயிலன் - சூலப்படையையுடையவன், ஆர்பயில் - ஆத்தி மலர்மாலை பொருந்திய, அம்மார்பன் - அழகிய மார்பை யுடையவன் (ஆவன்) ; (எ - று).

(வி - ரை.) பயிலாரமார்பன் என்பதனை ஆர்பயில் அம் மார்பன் எனப்பிரித்துக்கொள்க. அண்டங்கடந்த என்பதை அண்டங்கள் தந்த எனப்பதப் பிரிவுசெய்து அதற்கு, உலகங்களைப் படைத்த என்றும், பயிலாரமார்பன் என்பதை ஆரம்பயில் மார்பன் என அந்வயஞ்செய்து அதற்கு, கொன்றை மலர்மாலை பொருந்திய மார்பை யுடையான் என்றும் பொருள்கூறலாம். ‘பெருமான் சிறுமான்’ என்னுந்தொடர் சொல்முரணணியாம். புண்ணியனென்பதன் பொருள் விபூதியுடையவன் என்றுமாம்; புண்ணியம் - விபூதி. (29)

புண்ணியன் புண்ணியல் வேலையன் வேலைய நஞ்சனங்கக்
கண்ணியன் கண்ணிய னெற்றியன் காரணன் காரியங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன் பாணி கொளவுமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடல னாடல் பசுபதியே. (௩0)

(இ - ள்.) பசுபதி - ஆன்மாக்களுக்குத் தலைவனாகிய இறைவன், புண்ணியன் - அறவடிவினன், புண் - மாமிசம், இயல் - பொருந்திய, வேல் ஐயன் - (முத்தலை) வேலையுடைய கடவுள், வேலைய (திருப்பாற்) கடலில் உண்டான, நஞ்சன் - விஷத்தைக் கண்டத்திலுடையவன், அங்கக்கண்ணியன் - எலும்புமாலையுடையவன், கண் இயல் நெற்றியன் - (அக்கினிக்) கண்பொருந்திய நெற்றியையுடையவன், காரணன் - (எல்லாப் பொருள்களுக்குங்) காரணமாயிருப்பவன், கார் இயங்கும் - மேகம் தவழுகின்ற, விண்ணியன் - ஆகாய சொரூபமானவன், விண் இயல் - ஆகாயத்தில் பொருந்திய, பாணியன் - கங்கையாற்றினை (ச்சடையில்) உடையவன், உமையாள் - பார்வதி தேவியின், பாணிகொள - கையைப்பிடிப்பதற்கு (உமாதேவியை மணம்செய்து கொள்வதற்கு), பண்ணியன் - தகுதியுடையவன், பண் இயல் - இசைபொருந்திய, பாடலன் - (தோத்திரப்) பாடல்களையுடையவன் (ஆவன்), நாடல் - (அவனை மனமே! நீ) நாடுவாயாக; (எ - று).

(வி - ரை.) நாடல் என்பது அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று. ஆடல் பசுபதி எனப்பிரித்து, அதற்கு, சிற்சபையில் நடனம் செய்கின்ற இறைவன் என்றும் பொருள் கூறலாம். வேலை - கடல்; அங்கம் - எலும்பு; கண்ணி - மாலை; பாணி - நீர்; பசு - சீவன். (30)

பதியார் பலிக்கென்று வந்தா ரொருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடையுண்டு கண்மூன் றுளகறைக் கண்டமுண்டு
கொதியார் மழுவுண்டு கொக்கரை யுண்டிறை கூத்துமுண்டு
மதியார் சடையுள மாலுள தீவது மங்கையர்க்கே. (௩௧)

(இ - ள்.) பாவைநல்லீர் - (வடிவத்தால்) பாவைபோன்ற தோழிகளே, பலிக்கென்று - பிச்சையெடுப்பதற்கென்று, வந்தார் - வந்தவராகிய, பதியார் ஒருவர்க்கு - தலைவர் ஒருவருக்கு, கதி - விரைவாகச் செல்லுதல், ஆர் - பொருந்திய, விடையுண்டு - (வாகனமாக ஒரு) ரிஷபம் உண்டு, கண் மூன்று உள - மூன்று கண்களுண்டு, கறைக்கண்டம் உண்டு - விஷம் பொருந்திய மிடறு (ஒன்று) உண்டு, கொதி - கொதித்தல், ஆர் - பொருந்திய, மழுவுண்டு - மழுவாயுதம் (ஒன்று) உண்டு, கொக்கரை உண்டு - கொக்கரை யென்னும் வாத்தியம் (ஒன்று) உண்டு, (அவையேயுமன்றி), இறை - சிறிது, கூத்துமுண்டு - கூத்தாடலும் உண்டு, மதி ஆர் - பிறைச்சந்திரன் பொருந்திய, சடை (உம்) உள(து) - சடையும் உண்டு, மங்கையர்க்கு - மங்கைப்பருவமுள்ள பெண்களுக்கு, ஈவது - கொடுப்பதாகிய, மால் (உம்)-(காம) மயக்கமும், உளது - உண்டு; (எ-று).

(வி - ரை.) கொதித்தல் - கொழுந்துவிட்டெரிதல். சடையும் மாலும் என்னும் எண்ணும்மைகள் தொக்குநின்றன. இச்செய்யுளின் ஈற்றடியில் உளது என்பது கடைக்குறைந்து உளஎன வந்தது. இது, பிட்சாடன மூர்த்தியாய்ப் பலிக்குவந்த இறைவனைக்கண்டு காமமயக்கங்கொண்ட ஒருத்தி, அவனது நிலைமையைத் தன்னோடுள்ள மங்கையரை நோக்கிக் கூறியதாம். (31)

மங்கைகொங் கைத்தடத் திங்குமக் குங்குமப் பங்கனுங்கி
அங்கமெங் குங்நெகச் சங்கமங் கைத்தலத் துங்கவர்வான்
கங்கைநங் கைத்திரை பொங்குசெங் கண்ண ர வங்கள்பொ
பங்கிதங்கும்மலர்த்திங்கடங்கும்முடிப்பண்டங்கனே. [ங்கிப்

(இ - ள்.) கங்கை நங்கை - கங்காநதியென்னும்தேவியின், திரை - அலைகள், பொங்கு(தல்) - பொங்கியெழுந்து விழுவதும், செங்கண் அரவங்கள் - சிவந்த கண்களையுடைய பாம்புகள், பொங்கி - விளங்கி, பங்கிதங்கும் - (சடைக்கற்றையின்) மயிர்களினிடையே தங்குவதும், மலர்திங்கள் தங்கும் - கொன்றை மலர்மாலையும் பிறைச்சந்திரனும் பொருந்துவதும் (நிகழுமிடமாகிய), முடி - சடாமுடியையுடைய, பண்டங்கனே - பழமையான முழுவெலும்பணிந்த சிவனே, இங்கும் - இவ்விடத்தும், மங்கை - (இப்) பெண்ணனவள், கொங்கைத் தடத்து - கொங்கையினிடத்து(ப்பூசிய), அக்குங்குமப் பங்கு - (முன்குளிர்ந்திருந்த) அக்குங்குமச் சேற்றால், அனுங்கி - வருந்தி, அங்கமெங்கும் - உடம்புமுழுதும், நெக - உருக, அம்கைத்தலத்து - (அவளது) அழகிய கையிலுள்ள, சங்கமும் - சங்குவளையல்களையும், கவர்வான் - கவர்கின்றவனானன்,(வேறொருவரன்று); (எ - று).

(வி - ரை.) ‘இங்கும்’ என்பதற்குப் பொருள் தாருகவனத்திலே யல்லாமல் இவ்வூரிலும் என்பதாம்; உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. அங்கைத்தலத்துச் சங்கமும் என உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. பொங்கு, தங்கும், தங்கும் என்பன தொழிற்பெயர்ப் பொருளில் வந்தன; இங்ஙனமன்றி, பொங்குமுடி, தங்கும்முடி, தங்கும்முடி என்றும் முடிவு கொள்ளலாம். பண்டங்கனே என்னும் ஏகாரம் பிரிநிலைப்பொருளில் வந்தது. பண்டங்கன் என்பது பண்டு அங்கன் எனப் பிரி

படும். பண்டு - பழமை; அங்கம் - முழுவெலும்பு; அங்கன் - முழுவெலும்புடையவன். முழுவெலும்பு கங்காள மெனப்படும். இதனைப் பரமன் அணிந்திருப்பதன் காரணம்,

“நங்காயி தென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமா(று)கேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ”

என்னும் இத் திருவாசகச் செய்யுளால் விளங்குவதாம். பங்கி என்பதற்குப் பக்கத்திலே என்றும் பொருள் கூறலாம். பங்க மென்பது கடைக் குறைந்து பங்கு என வந்தது. பங்கம் - சேறு. இது நற்றாய் கூற்றும்; அல்லது செவிலி கூற்றும். (32)

பண்டங்கன் வந்து பலிதாவென் றான்பக லோற்கிடென் றேன், அண்டங் கடந்தவ னன்னமென் றானய னூர்தியென் றேன், கொண்டிங்கு னையம்பெய் யென்றான் கொடித்தே ரனங்கனென் றேன், உண்டிங் கமைந்ததென் றாற்கது சொல்ல வுணர்வுற்றதே. (௩௩)

(இ - ள்.) பண்டங்கன் - சிவபெருமான், வந்து - (என்னிடத்துப் பிட்சாடன மூர்த்தியாக எழுந்தருளி) வந்து, பலிதா என்றான் - (என்னை நோக்கி எனக்கு நீ) பலிதா என்று கூறினான், (நான் பலிதா என்பதனைப் பல் இ(ந்)தா எனப் பிரித்துக்கொண்டு, அவனை நோக்கி அதனை நீ பல்லில்லாத), பகலோற்கு - சூரியனுக்கு, இடு என்றேன் - கொடு என்று கூறினேன், (பின்), அண்டங்கடந்தவன் - உலகாதீதனாகிய சிவன், அன்னமென்றான் - (யான் விரும்பியது) அன்னமென்று கூறினான், (யான் அவ்வன்னமென்னும் பதத்திற்கு மற்றொரு பொருள் கற்பித்துக்கொண்டு அது), அயனூர்தி யென்றேன் -

பிரமனது வாகனமாகிய அன்னப்பறவையாம் (அதனை யான் உனக்குத் தருவது முடியாது) என்று கூறினேன், (அப்பாலவன்), இங்கு - இப்போதே, கொண்டு உன் ஐயம் பெய் - (நீ) கொண்டு (வந்து என்பாத்திரத்தில்) உன் ஐயம் பெய், என்றான் - என்று கூறினான், (யான், கொண்டு உன் ஐயம் பெய் என்பதனை உன் ஐயம்புகொண்டு எய் என்றன்வயஞ்செய்து அதற்கு உன் பஞ்சபாணங்களைக்கொண்டு என்னையடி எனப்பொருள் கற்பித்துக்கொண்டு), கொடித்தேர் அனங்கன் என்றேன் - (ஐயம்பு எய்வது யானன்று, ஐயம்பு எய்பவன்) மீனக் கொடி கட்டிய தேரையுடைய மன்மதன் என்று கூறினேன், (அதற்கு மேலவன்), இங்கு - இவ்விடத்து, அமைந்தது - (எனக்குப்) பொருந்தியது, உண்டு - இருக்கின்றது (என்றான்), என்றாற்கு - என்று (இவ்வாறு) கூறிய அவனுக்கு, அதுசொல்ல - (யான் உனக்கு இங்கு அமைந்தது உண்டு என்று) அதனைக்கூற, உணர்வுற்றது - (அதனாலவனுக்குத் தெளிவாகிய) அறிவு உண்டாவதாயிற்று; (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் தலைமகன் வினவியதற்குத் தான் விடை கூறியதைத் தோழியோடு கூறிய கூற்றும். பண்டங்கன் அமைந்தது என்று கூறியதன்பொருள் பொருந்திய புணர்ச்சியென்பதாம்; தலைமகள் அமைந்தது என்று கூறியதன் பொருள் பொருந்திய வுணவு என்பதாம். இச்செய்யுள் மடங்குதல் நவிற்சியணியாம். பண்டங்கன் என்பது பாண்டரங்கன் என்னும் சொல்லின் திரிபாமெனக்கொண்டால், அதற்கு, பாண்டரங்கமென்னும் கூத்தினைச் செய்பவனென்பது பொருளாம்.

'பலிதா' என்பதற்கு, பிச்சைகொடு, பல்இந்தா என்றும்; 'அன்னம்' என்பதற்கு, சோறு, அன்னப் பறவை என்றும்; 'ஐயம் பெய்' என்பதற்கு, பிச்சைபோடு, ஐந்து அம்பு எய்

என்றும்; 'அமைந்தது' என்பதற்கு, பொருந்திய புணர்ச்சி, பொருந்திய வுணவு என்றும் பொருள்கொள்க. (33)

உற்றடி யாருல காளவோ ரூணு முறக்குமின்றிப்
பெற்றம தாவதென் றேறும்பி ரான்பெரு வேனெடுங்கண்
சிற்றடி யாய்வெண்பற் செவ்வா யிவள்சிர மாலைக்கென்றும்
இற்றிடை யாம்படி யாகவென் னுக்கு மெலிக்கின்றதே.(௩௪)

(இ - ள்.) பெருவேல் நெடுங்கண் - (வடிவத்தால்) பெரிய வேலை யொத்த நீண்ட கண்களோடு, சிற்றடியாய் - சிறிய அடியையுடையவளே, வெண் பல் - வெண்மையான பற்களையும், செவ்வாய் - சிவப்பாகிய வாயையுமுடைய, இவள் - இப்பெண், உற்று - (மேன்மை) பொருந்தி, அடியார் உலகாள - அடியவர்கள் உலகத்தை ஆள, ஓர் ஊணும் உறக்குமின்றி - சிறிதும் உணவும் தூக்கமுமில்லாமல், ஆவது பெற்றம் என்று - (யான் ஏறிச் செல்லத்தக்க வாகனம்) ஆவது இடபமென்று (தீர்மானித்து அதன்மேல்), ஏறும்பிரான் - ஏறிச்செல்லும் பரமனது, சிரமாலைக்கு - தலைமாலையைப் (பெறவிரும்பி), என்றும்- எப்போதும், இற்று - (மனம்) முரிந்து, இடையாம்படி ஆக - (உடம்பு) இடை துவண்டு வாடுந் தன்மைபோல் வாட, மெலிகின்றது - வருந்துகின்றது, என்னுக்கு - எதற்காக, (அஃதவளுக்கு ஒருபயனும் தாராது); (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் நிலைமையைக் கண்ட செவிலி அதனை அவள் தோழிக்குக் கூறிய கூற்றும். ஓரென்பது ஒன்றென்பதன் விகாரமாம்; அஃதிங்குச் சிறிதென்னும் பொருளில் வந்தது.

பெற்றமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதியாம். சிரமாலைக்கு என்னும் நான்கனுருபு இரண்டனுருபின் பொருளில்

வந்தது. உறக்கு என்பது உறக்கமென்பதன் விகாரமாம். மெலி கின்றது என்பது வல்லொற்றுமிக்கு மெலிக்கின்றது என அந்தாதித்தொடை நோக்கி வந்தது.

"தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத்
தவரை விண்ணோர், சூழச் செய்தான்"

என்று திருக்கோவையார் கூறுவதிங் குணர்தற்பாற்றும். (34)

மெலிக்கின்ற வெந்தீ வெயில்வா யிழுதழல் வாய்மெழுகு
கலிக்கின்ற காமங் கரதல மெல்லி துறக்கம் வெங்கூற்
றொலிக்கின்ற நீருறு தீயொளி யார்முக்க ணத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றைசூடிய பல்லுயிரே. ()

(இ - ள்.) உறுதீ ஒளியார் - மிக்க அக்கினியின் செந்நிறம் போன்ற செந்நிறமுடையாராகிய, முக்கணத்தர் - மூன்று கண்களையுடைய தலைவர், கடிக்கொன்றை சூடிய - நறுமணமுடைய கொன்றைப்பூமாலை சூடி, மிக்க பலிக்கென்று வந்தார் - மேலான பிச்சை எடுத்தற்கென்று வந்தார், (அதனால்), கலிக்கின்ற காமம் - (அவரைக்கண்ட மடவார்க்குப்) பெருகுகின்ற காமம், கரதலம் - (அவரது) கையிலிருக்கின்ற, மெலிக்கின்ற வெந்தீ - (உயிர்களை) வாட்டுகின்ற கொடிய நெருப்பு (ஒப்பதாம்), உறக்கம் மெல்லிது - (அதனால் அவர் தமக்குத்) தூக்கம் மென்மையதாயிற்று, ஒலிக்கின்ற நீர் - சப்திக்கின்ற கடல், வெங்கூற்று - கொடியயமன் (ஒப்பதாம்), பல்லுயிர் - (அவர்களது) பலவாகிய உயிர்கள், வெயில்வாய் இழுது - வெயிலில் வைத்த வெண்ணெயும், அழல் வாய் மெழுகு - நெருப்பிலிட்ட மெழுகும் (ஒப்பனவாம்); (எ-று).

(வி - ரை.) மென்மையதாதல் - குறைவாதல். இது தலைமகள் தன்னைப் பிறர்போல் வைத்துத் தோழிக்குக் கூறிய கூற்

ளும். உயிரென்றது இங்கு உயிர் விளங்குதற்குக் காரணமாயுள்ள மனத்தை. காமம் வெந்தீயொக்கும்; நீர் (கடல்) வெங்கூற்றொக்கும்; உயிர் (மனம்) வெயில்வாயிழுதும் அழல்வாய் மெழுகும் ஒக்கும் என்று கொள்க. என்னைக் காமம் வருத்துகின்றது; கடல் கொல்லுகின்றது; என்மனம் வெண்ணெய் போலும் மெழுகுபோலும், உருகுகின்றது; எனக்குத் தூக்கங் குறைகின்றது என்று தலைமகள் தன்னனுபவங் கூறினளென்க. இச்செய்யுள் கொண்டு கூட்டுப்பொருள் கோளாம். சூடிய என்னும் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், சூடி எனச் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சப் பொருளில் வந்தது; இவ்வாறு வருவது எச்சத் திரிபெனப்படும். (35)

பல்லுயிர் பாக முடறலை தோல்பக லோன்மறல்பெண்
வில்லியோர் வேதியன் வேழ நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டு மறுத்து முரித்துங்கொண் டான்புகழே
சொல்லியும் பாடியு மேத்தக் கெடுநங்கள் சூழ்துயரே. (௩௬)

(இ - ள்.) நிரையே-முறையாக, பகலோன் - சூரியனது, பல் - பல்லை, பறித்தும் - பிடுங்கியும், மறல் - எமனது, உயிர்-உடம்பை, உதைத்தும் - உதைத்துத்தள்ளியும், பெண் - உமாதேவியை, பாகம்-இடப்பாகத்தில், புல்லியும் - (வைத்துத்) தழுவியும், வில்லி - மன்மதனது, உடல் - உடம்பை, சுட்டும் - சுட்டெரித்தும், ஓர் வேதியன்-ஒப்பற்ற பிரமனது, தலை - தலையை, அறுத்தும் - அறுத்துத் தள்ளியும், வேழம் - யானையினது, தோல் - தோலை, உரித்தும் - உரித்தும், கொண்டான் - (புகழைக்) கொண்ட சிவபெருமானது, புகழே - புகழையே, சொல்லியும் பாடியும் - (உரையால்) சொல்லியும் (பாடலாற்) பாடியும், எத்த - (நாம்) துதிப்போமாயின், நங்கள் சூழ்துயர்

கெடும் - நம்மைச் சூழ்ந்துள்ள துன்பமானது கெட்டுவிடும்; (எ - று).

(வி - ரை.) "கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்கள்
இறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்றொழிலால் நயனத்தால் விரலால் கற்றைக்
கதிர்முடியால் கரதலத்தால் கணையால் பின்னும்
ஊற்றழிய வுதைத்தெரித்து நெரித்துச் சூடி
உரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே"

என்னும் யாப்பருங்கலக்காரிகை உரைச்செய்யுள் இங்குணர்தற் குரியதாம்.

பகலோன் பல் பறித்தும், மறல் உயிர் உதைத்தும், பெண் பாகம் புல்லியும், வில்லி உடல் சுட்டும், வேதியன் தலை அறுத்தும், வேழம் தோல் உரித்தும் கொண்டான் (பரமன்) என்றன்வயஞ் செய்து கொள்க. இது முறை நிரல் நிறைப் பொருள் கோளாம். பறித்தும் உதைத்தும் என்னும் எண்ணும்மைகள் தொக்கு நிற்கின்றன.

இங்கு உயிரென்னும் தானியின் பெயர் அதற்குத் தானமாகிய உடம்பினை உணர்த்தி நிற்றலின், தானியாகு பெயராம்.

துயருந் தொழுமழுஞ் சோருந் துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்று நகும்வெய் துயிர்க்கும் பெரும்பிணிகூர்ந்
தயரு மமர்விக்கு மூரி நிமிர்க்குமந் தோவிங்ஙனே
மயரு மறைக்காட் டிறைக்காட் டகப்பட்ட வாணுதலே. ()

(இ - ள்.) மறைக்காடு - திருமறைக் காட்டி லெழுந்தருளி யுள்ள, இறைக்கு - இறைவனுக்கு, தக - தகுதியாக, ஆள்

பட்ட - அடிமைப்பட்ட, வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றியையுடைய இவள், துயரும்-(அவ்விறைவன் வாராமை நோக்கி) வருந்துவள், தொழும் - (அவன் வரும் திக்கை நோக்கித்) தொழுவாள், அழும் - அழுவாள், சோரும் - சோர்வடைவாள், துகிலும் - ஆடையும், கலையும் - மேகலாபரணமும், செல்ல - கழுவி விழ, பெயரும் - நடப்பாள், பிதற்றும் - (எதைஎதையோ கூறிப்) பிதற்றுவாள், நகும் - சிரிப்பாள், வெய்துயிர்க்கும் - பெருமூச்சு விடுவாள், பெரும்பிணி கூர்ந்து - பெரிய நோய் பொருந்தி, அயரும் - தளர்வாள், அமர்விக்கும் - மிகுதியாக விக்குவாள், மூரிநிமிர்க்கும் - திமிர் விடுவாள், அந்தோ - ஐயோ, இங்ஙனே - இவ்விதமாக, மயரும் - மயக்க மடைவாள், (இங்ஙனமுள்ள இவளை யான் தேற்றுவதெப்படியாம்); (எ - று).

(வி - ரை.) மறைக்காட் டிறைக்காட் டகப்பட்ட என்பதற்கு, திருமறைக் காட்டுக்கு (அருகேயுள்ள) சிறு காட்டில் அகப்பட்டுக்கொண்ட என்றும், அமர்விக்கும் என்பதற்கு, (தன்னைத் தானே) தணிவித்துக் கொள்ளுவாள் என்றும் பொருள் கூறலாம். இது செவிலி கூற்று; நற்றாய் கூற்றுமாம். வாணுதல் என்பது அடையடுத்த சினையாகுபெயர்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையுமாம். கலை - மேகலாபரணம்; மூரி - திமிர். இறைக்காடு - சிறுகாடு. (37)

வாணுதற் கெண்ணநன் றன்று வளர்சடை யெந்தைவந்தால்
நாணுதற் கெண்ணாள் பலிகொடு சென்று நகுநயந்து
பேணுதற் கெண்ணும் பிரமன் றிருமா லவர்க்கரிய
தாணுவுக் கென்னே விராப்பக லேந்திவ டாழ்கின்றதே. ()

(இ - ள்.) வாள்நுதற்கு - ஒளி பொருந்திய நெற்றியையுடைய இவளது, எண்ணம் - எண்ணமானது, நன்றன்று -

நன்மை தருவதன்று, வளர் சடை - (நீண்டு) வளர்ந்துள்ள சடாபாரத்தையுடைய, எந்தை வந்தால்-எமது சுவாமி வந்தால், நாணுதற்கு எண்ணுள் - (இவள் அவரைக்காண) நாணுதற்கு எண்ணுகின்றாளில்லை, பலிகொடு சென்று - பிச்சையை (எடுத்துக்) கொண்டு (அவர் முன்) சென்று, நகும் - சிரிப்பாள், நயந்து - விரும்பி, பேணுதற்கு எண்ணும் - (அவரை) உபசரித்துக் கூடுவதற்கு எண்ணுகின்றாள், பிரமன் திருமால் அவர்க்கு-பிரமனும் விஷ்ணுவுமாகிய அவர்களுக்கு, அரிய - (காண்பதற்கு) அரிய, தாணுவுக்கு - அந்தச் சுவாமியை யடைதற் பொருட்டு, இவள் - இப்பெண், இராப்பகல் - இரவும் பகலும், நைந்து - இளைத்து, தாழ்கின்றது - சோர்வடைகின்றது, என்னே - யாதுகாரணமோ ; (எ - று).

(வி - ரை.) இது செவிலி கூற்று ; நற்றாய் கூற்றுமாம். அயனார்க்கும் அரியார்க்கும் காண்டற்கரிய சிவபெருமானை இவள் காதலித்தடைய விரும்பி வருந்துதல் இவளுக்குத் தகாது என்பது செவிலி அல்லது நற்றாயின் கருத்தாமென்பதிங்கு உணர்தற்பாற்றாம். வாணுதற்கென்பது உருபுமயக்கம்.

தாணு - என்ஞான்றும் ஒருதன்மையனாய், நிலைபெற்றிருப்பவன். (38)

தாழுஞ் சடைசடை மேலது கங்கையக் கங்கைநங்கை
வாழுஞ் சடைசடை மேலது திங்களத் திங்கட்பிள்ளை
போழுஞ் சடைசடை மேலது பொங்கர வவ்வரவம்
வாழுஞ் சடைசடை மேலது கொன்றையெம் மாமுனிக்கே.()

(இ - ள்.) எம்மாமுனிக்கு - எமது முனிவர் தலைவனாகிய பரமனுக்கு, சடைதாழும் - சடை தாழ்ந்திருப்பதாம், சடைமேலது - அந்தச் சடையின் மேலிருப்பது, கங்கை-கங்கையாம்,

அக்கங்கை நங்கை - அந்தக்கங்காதேவி, சடைவாழும் - அச் சடையின்மீது வாழ்கின்றாள், சடைமேலது திங்கள் - அந்தச் சடையின் மேலிருப்பது இளமதியாம், அத்திங்கட்பிள்ளை-அந்த இளமதி, சடைபோழும்-அச்சடையைப் பிளந்து செல்லும், சடைமேலது - அச்சடையின் மேலிருப்பது, பொங்கு அரவு - விளங்குகின்ற பாம்பாம், அவ்வரவம் - அப்பாம்பானது, சடை வாழும் - சடையில் வாழ்வதாம், சடைமேலது - அச்சடையின் மேல் இருப்பது, கொன்றை-கொன்றை மலர்மாலையாம்; (எ-று).

(வி - ரை.) இச்செய்யுள் இறைவனது சடையின் சிறப்புக் கூறியவாறறிக. திங்கட்பிள்ளை-திங்களாகிய பிள்ளை. கொன்றை-பொருளாகுபெயர். சடையென்பது பொருள் வேற்றுமையின் றிப் பலவிடத்து வந்தமையின், இச்செய்யுள் சொற்பொருட்பின் வருநிலையணியாம். (39)

முனியேன் முருகலர் கொன்றையினுயென்னைமூப்பொழித்த
கனியே கழலடி யல்லாற் களைகண்மற் றொன்றுமிலேன்
இனியே லிருந்தவஞ் செய்யேன் றிருந்தவஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கட மார்க்கினிச் சாற்றுவனே. (சO)

(இ - ள்.) முருகுஅலர் கொன்றையினாய் - வாசனை வீசு கின்ற கொன்றைமலர் மாலையையணிந்தவனே (நீ), என்னை- (அடியேனாகிய) என்னை, முனியேல் - கோபியாதே, மூப் பொழித்த - (எனது) கிழத்தன்மையை நீக்கிய, கனியே - (கற் பகக்) கனியே, கழலடியல்லால் - (யான் உனது) வீரக்கழலை யணிந்த திருவடிகளை யல்லாமல், களைகண் - பற்றுக்கோடு, மற்றொன்றும் இலேன் - வேறொன்றும் இல்லாதவனாய் இருக் கின்றேன், இனி - இனியாவது, ஏல் - (என்னை) ஏற்றுக் கொள்வாயாக, திருந்த - (யான்) திருந்தும்படி, இரும் தவம்

செய்யேன் - பெரிய தவத்தைச் செய்யமாட்டாதவனுயிருக்கின்றேன், அஞ்சே நினைந்து - (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும்) ஐந்து விஷயங்களையே நினைந்து, தனியேன் - அடியனாகிய நான், படுகின்ற சங்கடம் - அனுபவிக்கின்ற துன்பத்தை, இனி யார்க்குச் சாற்றுவன் - இனி (உன்னையன்றி வேறு) யாரிடத்தில் சொல்லுவேன், (சொல்வதற்குரியனல்லேன்); (எ - று).

(வி ரை.) அஞ்சு - எண்ணலளவையாகுபெயர்; தொகைக் குறிப்புச்சொல்லுமாம். அஞ்சு என்பது ஐந்து என்பதன் போலியாம்; இதில் முதல், இடை, கடை என்னும் மூன்றெழுத்தும் போலியாயிருப்பதறிக. தனியேன்-தனித்தவன்; அஃதாவது துணையின்றியவன். மூப்பொழித்த கனியே என்பதன் குறிப்புப்பொருள் (எனது) பிறவித்துன்பத்தை யொழித்த இன்பவடிவினனே என்பதாம். முனியே என்றும் பாடமுண்டு. (40)

சாற்றுவன் கோயிற் றலையு மனமுந் தவமிவற்றால்
ஆற்றுவ னன்பெனு நெய்சொரிந் தாற்றியஞ் சொன்மலரால்
ஏற்றுவ னீசன்வந் தென்மனத் தானென் றெழுந்தலரே
தூற்றுவன் றோத்திர மாயின வேயினிச்சொல்லுவனே. (சக)

(இ - ள்.) கோயில் - (யான்) சிதம்பரத்தை, சாற்றுவன் - துதிப்பேன், தலையும் மனமும் இவற்றால் - தலையும் மனமுமாகிய இவற்றால், தவம் - தவமாகிய யாகத்தை, அன்பெனும் நெய் சொரிந்து - அன்பென்கிற நெய்யை வார்த்து, ஆற்றுவன் - செய்வேன், ஆற்றி - செய்து, அம் - அழகிய, சொல்மலரால் - பாடலாகிய மலர்களினால், ஏற்றுவன் - அர்ச்சிப்பேன், ஈசன் - பரமன், வந்து - (எழுந்தருளி) வந்து, என்மனத்தான் என்று - என்மனத்திலே குடிகொண்டிருக்கின்றான் என்று, எழுந்து -

எழுந்து (நின்று), அலர் தூற்றுவன் - பலர் அறியச் சொல்லு வேன், தோத்திரம் ஆயினவே - (பரமனே! உன்னைத்) தோத் திரஞ்செய்வதற்கு உரியவையான சொற்களையே, இனி - இனி மேல், சொல்லுவன் - கூறுவேன்; (எ - று).

(வி - ரை.) தலையென்றது இங்கு மெய், வாய், கண், மூக்கு, செவியென்னு மிந்திரியங்களை. மனத்தையும் இந்திரியங் களையும் அடக்குதல் தவமெனப்படுதலின், தலையு மனமு மிவற் றால் தவம் ஆற்றுவனென்றார். அன்பை நெய்யாக உருவகஞ் செய்ததற்கியையத் தவத்தை யாகமென உருவகஞ் செய்யாமை யின், இஃது ஏகதேச வுருவக வணியாம். சொன்மலர்-உருவகம். பால் என்பது பசுவின் பாலையே குறிப்பிப்பது போல, கோயி லென்பது சிதம்பரத்தையே குறிப்பித்து நின்றது. அலர் தூற்றல்- (ஒருவன் தானறிந்த தொன்றைப்) பலரறியக்கூறுதல். அலர் தூற்றுவன் என்பதற்கு, மகிழ்ச்சியோடு கூறுவேன் என்றும் பொருள் கூறலாம். அலர் - மகிழ்ச்சி. (41)

சொல்லா தனகொழு நாவல்ல சோதியுட் சோதிதன்பேர்
செல்லாச் செவிமரந் தேறித் தொழாதகை மண்டிணிந்த
கல்லா நினையா மனம்வணங் காத்தலை யும்பொறையாம்
அல்லா வவயவந் தானு மனிதர்க் கசேதனமே. (சஉ)

(இ - ள்.) மனிதர்க்கு - மக்களுக்கு, சோதியுள் சோதி தன் பேர் - பிரகாசப் பொருள்களுள் மிக்க பிரகாசப் பொரு ளாயுள்ள பரமேசுவரனது திருநாமங்களை, சொல்லாதன - சொல்லாதனவாகிய நாக்கள், நாவல்ல - நாக்கல்ல, கொழு- இருப்புக்காறுகளாம், செல்லாச் செவி - (அவனது திரு நாமங்கள்) நுழையாத செவிகள் (செவிகளல்ல), மரம்-மரமாம்,

தேறி - (அவனது பெருமையைத்) தெளிவாக வறிந்து, தொழாத கை - (அவனது திருவடிகளை) வணங்காத கைகள் (கைகளல்ல), மண் - மண்ணும், நினையா மனம் - (அவனைத்) தியானஞ்செய்யாத மனம் (மனமல்ல), திணிந்த கல்லாம்-உறுதியுள்ள கல்லாம், வணங்காத்தலையும் - (அவனை) வணங்காத தலையும் (தலையல்ல), பொறையாம் - சலதாரை யடைக்கும் கல்லாம், அல்லா அவயவந்தானும் - (இவ்வாறு இறைவனது விஷயத்தில் உபயோகம்) ஆகாத மற்ற அவயவமனைத்தும் (அவயவமன்றும்), அசேதனம்-சடப்பொருள்களாம் (இழிந்தவையாம்); (எ - று).

(வி - ரை.) தலையும், தானும் என்னும் உம்மைகள் இறந்தது தழீஇய எச்ச உம்மைகளாம். கொழு, மரம், மண், அசேதனமென்பவற்றை யடுத்து ஆம், ஆம் என்னும் ஆக்கவினைகள் தொக்கு நின்றன. இஃது ஏதுவுருவக வணியாம்; என்னே! சோதிதன்பேர் சொல்லாமையால் நா கொழுவாம் என்றற்றொடக்கத்தனவாக நா முதலியவற்றைக் கூறுதலின். (42)

தனக்குன்ற மாவையஞ் சங்கரன் றன்னரு ளன்றிப்பெறற்
றால், மனக்கென்று நஞ்சிற் கடையா நினைவன் மதுவிரியும்,
புனக்கொன்றை யானரு ளாற்புழு வாகிப் பிறந்திடினும்,
எனக்கென்றும் வானவர் பொன்னுல கோடொக்க வெண்ணுவனே. (சங)

(இ - ள்.) தனக்குன்றம் - திரவியக் குவியலையும், மாவையம் - பெரிய பூமியையும், சங்கரன் தன் அருளன்றிப் பெற்றால்- சங்கரனாகிய பரமனது அருளாலன்றி (வேறோராற்றாற்) பெறுவேனாயின் (அவற்றை), என்றும் - எப்போதும், மனக்கு-மனத்தின்கண், நஞ்சில் - நஞ்சைப் பார்க்கிலும், கடையா(க) - கீழ்ப்

பட்டவையாக, நினைவன் - (யான்) நினைப்பேன், மது விரியும் - தேன் சிந்துகின்ற, புனம் - கொல்லை நிலத்தில் (உள்ள), கொன்றையான் அருளால் - கொன்றை மலர் மாலையணிந்த பரமசிவனது திருவருளால், புழுவாகிப்பிறந்திடினும் - புழுவாகப் பிறந்தேனாயினும், எனக்கு-யான், என்றும்-எப்போதும், வானவர் பொன்னுலகோடு ஒக்க எண்ணுவன் - (அப்பிறப்பை) தேவர்களிருக்கும் சுவர்க்கலோகத்திற் றோன்றியதொரு பிறப்பிற்குச் சமமாக நினைப்பேன்; (எ - று).

(வி - ரை.) மனக்கு, எனக்கு, பொன்னுலகோடு என்னும் வேற்றுமையுருபுகள் தமக்குரிய பொருளை விட்டு வேறு வேற்றுமையுருபுகளின் பொருளில் வந்தமையின், உருபு மயக்கமாம். மனத்திற்கு என்பது அத்தும் இன்னும் குறையப் பெற்று மனக்கு எனவந்தது. பொன்னுலகு - இடவாகுபெயர். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என்மனத்தே, வழுவாதிருக்க வரந்தரவேண்டும்" என்று பெரியா ரருளியிருப்பதும் இங்கு உணர்தற்பாற்றும். வானவரென்பதன் பொருள் வானுலகத்தில் வசிப்பவரென்பதாம். (43)

எண்ண மிறையே பிழைக்குங் கொலாமிமை யோரிறைஞ்சும்
தண்ணம் பிறைச்சடைச் சங்கரன் சங்கக்குழையன்வந்தென்
உண்ணன் குறைவ தறிந்து மொளிமா நிறங்கவர்வான்
கண்ணு முறங்கா திராப்பக லெய்கின்ற காமனுக்கே. (சச)

(இ - ள்.) இமையோர் இறைஞ்சும் - தேவர்கள் துதிக்கின்ற, தண் அம் பிறை - குளிர்ந்த அழகிய பிறைச் சந்திரனைத் தரித்த, சடை சங்கரன் - சடாபாரத்தையுடைய பரமசிவன், சங்கக் குழையன் - சங்காலாகிய குண்டலங்களை யணிந்த பர

மன், வந்து - (எழுந்தருளி) வந்து, என் உள் நன்கு உறைவது அறிந்தும் - என்மனத்தின்கண் நன்ருகத் தங்கி யிருப்பதைத் தெரிந்து வைத்தும், (எனது), ஒளி-விளக்கம் வாய்ந்த,மாநிறம் - பெருமை பொருந்திய நிறத்தை, கவர்வான் - கிரகிக்கும்படி, கண்ணும் உறங்காது - கண்ணுறக்கமுஞ் செய்யாது, இராப் பகல் - இரவும் பகலும், எய்கின்ற காமனுக்கு-(என்மீது மலர்க் கணைகளை) விடுகின்ற மன்மதனுக்கு, எண்ணம் - ஞாபகசக்தி யானது, இறை-சிறிது, பிழைக்குங்கொல் - தவறி யிருக்கின்றது போலும்; (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் கூற்று. மன்மதன் தன்னை முன்னெரித்த ஈசன் என்மனத்திருப்ப தறிந்திருந்தும், என் மீது அம்பெய்கின்ருன்; அதனுல், அவன் புத்தி மயங்கியிருக் கின்ற தென்பதுணர்கின்றே னென்பாள் 'எண்ண மிறையே பிழைக்குங் கொல்' என்ருள். கொல் - ஐயப்பொருளது. ஆம் - சாரியை. காமன் - (சீவர்களுக்குக்) காம விருப்பத்தை யுண்டாக்குகின்றவன்; காமவிருப்பம்-சிற்றின்பப்பிரியம். இமை யோர் என்பதன் பொருள் (கண்) இமைத்தலில்லாதவரென்ப தாம். இமையோரென்பது சொல்வகையால் உடன்பாடாம்; பொருள்வகையால் எதிர்மறையாம்.

"காமனினை வென்றேன் கண்ணுதலோ னென்மனத்தின், மீமருவு கின்ருன் விடாது" என்னும் அணியிலக்கணச் செய் யுளும் இங்குணர்தற் பாலதாம். (44)

காமனை முன்செற்ற தென்ரு ளவளிவள் காலனென்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற தென்றுதன் கையெறிந்தாள்
நாமுனஞ் செற்றதன் ருரையென் றேற்கிரு வர்க்குமஞ்சி
ஆமெனக் கிற்றில ரன்றெனக் கிற்றில ரந்தணரே. (சரு)

(இ - ள்.) அவள்-(என்தோழிகளுள் ஒருத்தியாகிய) அவள், முன்செற்றது - (பரமன்) முன்னே அழித்தது, காமனை - மன் மதனை, என்ருள் - என்று கூறினுள், இவள் - (மற்றொரு தோழியாகிய) இவள், முன்செற்றது - முன்னே அழித்தது, காலன் என்னும் - எமன் என்று சொல்லப்படுகின்ற, நல்தாமம் மார்பனை - நல்ல மலர் மாலையணிந்த மார்பையுடையவனை, என்று - என்று (கூறி), தன்கை எறிந்தாள் - தன்கையை வீசினுள், (பரமனை நோக்கி இச்சந்தேகம் தீர்வதற்காக), நாம் - நீங்கள், அன்று முன்னம் செற்றது - அக்காலத்தில் முதலில் அழித்தது, ஆரை - (காமன் காலனென்னும் அவ்விருவருள்) எவரை (கூறுங்கள்), என்றேற்கு - என்று வினவிய எனக்கு, அந்தணர் - அழகிய கருணையுடைய பரமர், இருவர்க்கும் அஞ்சி - (அத்தோழியர்) இருவர்க்கும் பயந்து, ஆம் எனக்கிற்றிலர் - (காமனைச் செற்றது காலனைச் செற்றதற்கு முன்) ஆம் என்றும் கூற மாட்டாதவராயினர், அன்று எனக்கிற்றிலர் - (காமனைச் செற்றது காலனைச் செற்றதற்கு முன்) அன்று என்றும் கூறமாட்டாதவராயினர், (இஃதென்ன வியப்பு !) ; (எ-று).

(வி - ரை) இது தலைமகள் கூற்று. நாம் என்பது இங்குத் தன்மைக்கண் வாராது முன்னிலைக்கண் வந்தது ; இங்ஙனம் வருவது இடவழுவமைதியென்று கூறப்படும். இறைவன் காமனைச் செற்றபின் காலனைச் செற்ருன் என்பதும் காலனைச் செற்றபின் காமனைச் செற்ருன் என்பதும் கற்பபேதத்தால் மாறுபடுதலின், அதுபற்றி அந்தணர் ஆமென்றும் அன்றென்றும் கூறவியலாதவராயினர் என்க. அந்தணர் காமனையும் காலனையும் செற்ருரென்பதனுல், அவர் வேண்டலென்னும் விருப்பற்றவர், வேண்டாமையென்னும் வெறுப்பற்றவர் என்பதும், 'இருவர்க்கும் அஞ்சி' என்பதனுல், அஞ்சத்தக்கவிடத்து,

அஞ்சுவது அவ்வந்தணருக்கு ஒன்றுமில்லையாம்; ஆயினும், அவர் அத்தோழியர் இருவருக்கும் தம்முள் பிணக்குவாரா திருத்தற்பொருட்டு, அவர்தமக்கு அஞ்சினவர்போல் வாளா விருந்தனர் என்பதும் குறிப்புப்பொருளாம். (45)

அந்தண ராமிவ ராரூ ருறைவதென் றேனதுவே
சந்தணை தோளியென் றார்தலை யாய சலவரென்றேன்
பந்தணை கையா யதுவுமுண் டென்று ருமையறியக்
கொந்தணை தாரீ ருரைமினென் றேன்றுடி கொட்டினரே.

(இ - ள்.) அந்தணராம் இவர் - அந்தணராகியஇப்பரமர், உறைவது - வசிப்பது, ஆர்ஊர் - யாருடைய ஊர் (எவ்வூர்), என்றேன் - என்றுகேட்டேன், (அதற்கவர்), சந்து அணை தோளி - சந்தனக்குழம்பு பூசிய தோளையுடைய பெண்ணே, அதுவே - (ஆரூரென்னும்) அதுவே (யாம் வசிப்பது), என்றார்-என்றுசொன்னார், (அதற்கு யான்), தலையாயசலவர் - (இவர்) முதன்மையான சலம் பேசுகின்றவர், என்றேன் - என்று கூறினேன், (அதற்கவர்), பந்துஅணை கையாய் - பந்து பொருந்திய கையை உடையவளே, அதுவும் - அதுவும் (தலையில் பொருந்திய நீரும்), உண்டுஎன்றார்-(எம்மிடத்து) இருக்கின்றது என்று கூறினார், (அதற்குயான்), உமை அறிய - உம்மை (நான்) அறிந்துகொள்ளும்படி, கொந்து அணைதாரீர் - பூங்கொத்துக்கள் பொருந்திய மாலையையுடையவரே, உரைமின் - (நீங்கள்) சொல்லுங்கள், என்றேன் - என்று கேட்டேன், (அதற்கவர் எனக்கு உமையாள் சாட்சியாக, உமது பூங்கொத்துக்கள் பொருந்திய படுக்கையைத் தாரீரோ? நீங்கள் சொல்லுங்கள் என்று யான் வேண்டிக்கொண்டதாக உட்கொண்டு சந்தோஷத்தால்), துடிகொட்டினர் - உடுக்கையடித்தார்; (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் கூற்று. ஆரூர் என்பதன் பொருள் யாருடையவூர்; திருவாரூரென்னும் ஊர் என்பதாம்; இதன்கண் முதலிற்கொண்ட பொருளுக்கு ஆர் என்பது யார் என்பதன் மரூஉமொழியாம். தலையாயசலவர்என்பதன் பொருள் முதன்மையான சலம் பேசுகின்றவர்; தலையில் பொருந்திய நீரை யுடையவர் என்பதாம். சலமாவது ஒருவன் ஒருபொருள் குறித்துக்கூறிய வசனத்திற்கு மற்றொருவன் வேறுபொருள் கற்பித்துக்கூறி, அவனைப் பழிப்பதாம். உமையறியக்கொந்தணைதாரீர் உரைமின் என்பதன் பொருள் பூங்கொத்துக்கள் பொருந்திய மாலையை உடையவரே! உம்மை நானறிந்து கொள்ளும்படி நீங்கள் கூறுங்கள்; உமையாள் சாட்சியாக உமது பூங்கொத்துக்கள் பொருந்திய படுக்கையைத் தாரீரோ? நீங்கள் கூறுங்கள் என்பதாம். அணைதருதலாவது புணர்ச்சி தருதலாம். (46)

கொட்டுஞ் சிலபல சூழநின் றார்க்குங்குப் புற்றெழுந்து
நட்ட மறியுங் கிரீடிக்கும் பாடு நகும்வெருட்டும்
வட்டம் வருமருஞ் சாரணை செல்லு மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக் காட்டரன் பூதங்களே. ()

(இ - ள்.) மலர் தயங்கும்-(அன்றலர்ந்த)மலர்கள் விளங்குகின்ற, புள் தங்கு(ம்)-பறவைகள் தங்கியிருக்கும், இரும் பொழில் சூழ்-பெரியசோலைகள் சூழ்ந்துள்ள,மறைக்காடு-திருமறைக்காட்டில் (எழுந்தருளியுள்ள), அரன்-சிவபெருமானது, பூதங்கள்-பூதங்களுள்,சில-சிலபூதங்கள், கொட்டும்-கைகொட்டும், பல-பலபூதங்கள்,சூழநின்று ஆர்க்கும்-(தம்முள் தாம்) நெருங்கநின்று சப்திக்கும், குப்புற்று எழுந்து-குதித்தெழுந்து, நட்டம் மறியும்-நடனம் செய்யும், கிரீடிக்கும் - விளையாடும், பாடும் - பாடும், நகும்-சிரிக்கும், வெருட்டும் - பயமுறுத்தும், வட்டம்வரும் - வட்டமாகச்

சுற்றிவரும், அரும் சாரணை செல்லும் - அருமையாக வரிசை வரிசையாய் உலாவிவரும்; (எ - று).

(வி - ரை.) சிவபெருமானது பூதங்களுள், சில கொட்டும்; பல (ஏனையவை) ஆர்க்கும், நட்டம் மறியும், கிரீடிக்கும், பாடும், நகும், வெருட்டும், வட்டம் வரும், சாரணை செல்லும் என்று கொள்க. சாரணை செல்லல் - வரிசைவரிசையாய் உலாவி வருதல். இச்செய்யுள் பூதகணங்களின் தன்மையைக் கூறினமையின், தன்மைநவிற்சியணியாம். (47)

பூதப் படையுடைப் புண்ணிய ரேபுறஞ் சொற்களும்மேல்
ஏதப் படவெழு கின்றன வாலிளை யாளொடும்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட காமனைக் கண்மலரால்
சேதப் படுத்திட்ட காரண நீரிறை செப்புமினே. (சஅ)

(இ - ள்.) பூதப்படையுடை(ய) - பூதங்களைச் சேனைகளாகவுடைய, புண்ணியரே - புண்ணிய சொரூபராயுள்ள பரமரே, நும்மேல் - உம்மீது, புறஞ் சொற்கள் - பழிச்சொற்கள், ஏதம்பட - குற்றமுண்டாக, எழுகின்றன - தோற்றுகின்றன, இளையாளொடு - இளமைப்பருவமுடையவராகிய பார்வதியாரோடு, உம்மை - தேவரீரை, காதற்படுப்பான் - விருப்பமாகச் சேர்க்கும்படி, கணைதொட்ட - (உம்மீது) மலர்க்கணைகளையெய்த, காமனை-மன்மதனை, கண்மலரால் - (நெற்றிக்) கண்ணாகிய மலரால், சேதப்படுத்திட்ட - அழித்துவிட்ட, காரணம் - காரணத்தை, நீர் - தேவரீர், இறை செப்புமின் - சிறிது சொல்வீராக; (எ - று).

(வி - ரை.) ஆல், ஏ - அசை. புறஞ்சொல் - புறத்தார் (கூறும் பழி) மொழி; புறம் இடவாகுபெயர். உடைய என்பதன்

அகரவீறு தொக்கு நின்றது. புண்ணியரே! உமது தேவியோடு உம்மைச் சேர்க்குமாறு உம்மீது கணைதொட்ட மன்மதனை நீர் நெற்றிக்கண்ணைத் திறந்தெரித்தமை உம்மைப் பிறர் பழித்துக் கூறுதற்குக் காரணமாயிருக்கின்றது; நீர்அஃதொழிய, அவனை யெரித்தமைக்குக் காரணங்கூறல் வேண்டுமென்று பரமனை விரும்பிய பாவை யொருத்தி கூறினளென்பது இச்செய்யுளின் கருத்தாம்.

தன்மீது மலர்க்கணை யெய்தகாமனைப் பரமன் கண்மலரால் எரித்தானென்பது போர்வீரர் தம்முள் போர்செய்யுங் காலத்தில், ஒருவர் ஒருபடை விட்டபோது, மற்றொருவர் அப் படையை மாற்றுதற்குரியதொரு படையை விடவேண்டுமே யன்றிவேறுபடையை விடுதல் கூடாதென்பதை விளக்குவதாம். கண்மலர் - உருவகம்; இருபெயரொட்டுப் பண்புத் தொகையுமாம். கண்மலரென்பது கண்ணாகிய மலர் என விரியும். (48)

செப்பன கொங்கைக்குத் தேமலர்க் கொன்றை நிறம் பணித்தான், மைப்புரை கண்ணுக்கு வார்புனற் கங்கை வைத் தான்மனத்துக், கொப்பன வில்லா வொளிகிள ருன்மத் தமுமமைத்தான், அப்பனை யம்மனை நீயென் பெறுது நின் றார்க்கின்றதே. (சகூ)

(இ - ள்.) செப்பு அன்ன கொங்கைக்கு - (என் அன்பிற் குரியவளே! இறைவன் உன்னுடைய) செப்புக்கிண்ணத்தை யொத்த ஸ்தனங்களுக்கு, தே(ன்) கொன்றை மலர் - (தான் சூடுகின்ற)தேன் ஒழுகுகின்ற கொன்றைப்பூவினது, நிறம்பணித் தான் - நிறத்தைக் கொடுத்தான், மைப்புரை - மைபூசிய, கண் ணுக்கு - (உன்)கண்களுக்கு, வார் - பெருகுகின்ற, கங்கை

புனல் - கங்கையாகிய சலத்தை, வைத்தான் - (உண்டாக்கி) வைத்தான், மனத்துக்கு - (உன்) மனதிற்கு, ஒப்பன-(தனக்கு) ஒப்பாகும் பொருள்கள், இல்லா(மல்) - (சிறிதும்) இல்லாமல், ஒளிகிளர் - பிரகாசிக்கிற, உன்மத்தமும் - (தான் அணியும்) ஊமத்தைப் பூவின் மயக்கத்தையும், அமைத்தான்-(உண்டாக்கி) வைத்தான், (இங்ஙனம் அவன் உனக்குச் செய்திருக்கவும் அவனை வெறுத்து); நீ அப்பனை அம்மனை பெறாது - நீ தந்தை யையும் தாயையும் சென்றடையாமல், நின்று ஆர்க்கின்றது - (அவனை நினைத்து ஓயாது) நின்று கதறியழுவது, என் - என்ன காரணம், (அக்காரணத்தைக் கூறுவாயாக) ; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. தலைமகள் பசலை நிறம் அடைந்திருத்தலின், 'செப்பன கொங்கைக்குத் தேமலர்க் கொன்றை நிறம் பணித்தான்' என்றும், அவள் அழுதுகொண் டிருத்தலின், 'மைப்புரை கண்ணுக்கு வார்புனற் கங்கைவைத் தான்' என்றும், கரையற்ற காமமயக்க முடையவளாயிருத் தலின், 'மனத்துக் கொப்பன வில்லா வொளிகிள ருன்மத் தமு மமைத்தான்' என்றும் தோழி கூறினளென்க. இல்லா என் பது மல்லீறு கெட்ட வினையெச்சம் ; அதனைப் பெயரெச்சமாக வும் கொள்ளலாம். உன்மத்தமும் என்னு மும்மை இறந்தது தழீ இய எச்சவும்மை. 'அப்பனை யம்மனை நீயென் பெறாதுநின் றார்க்கின்றதே' என்பது அவனிடத்துக் கொன்றையும், கங்கை யும், ஊமத்தைப்பூவும் பெற்ற நீ, அவன் இயல்பிலே தந்தையுந் தாயுமில்லாதவனாக இருத்தல் போல, தந்தையையும் தாயையும் விட்டு நீங்கித் தந்தையுந்தாயுமில்லாதவளாயிருக்க விரும்புகின் றனையோ என்னும் குறிப்புப்பொருளையுந் தருவதாம். ஊமத் தைப்பூவின் மயக்கம் - ஊமத்தைப் பூவை யுண்டவர்க்குண் டாகும் மயக்கம். (49)

ஆர்க்கின்ற நீரு மனலு மதியுமை வாயரவும்
ஓர்க்கின்ற யோகு முமையு முருவு மருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையு மானும் பகலு மிரவுமெல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குட னாகிக் கலந்தனவே. (ருO)

(இ - ள்.) ஆர்க்கின்ற நீரும் - சப்திக்கின்ற நீரும், அனலும் - (அதனை வற்றச்செய்கின்ற) நெருப்பும், மதியும் - சந்திரனும், ஐவாய் அரவும் - (அவனை விழுங்குகின்ற) ஐந்துதலைகளையுடைய பாம்பும், ஓர்கின்றயோகும் - (அறிஞர்) ஆராய்ந்து செய்கின்ற யோகமும், உமையும் - (அவ்யோகத்துக்கு விரோதமாய் நிற்கும் மனைவியாகிய) உமாதேவியும், உருவும் - உருவப் பொருளும், அருவும் - (அதற்கு முரணான) உருவமில்லாத பொருளும், வென்றி பார்க்கின்ற வேங்கையும் - (தனக்கு) வெற்றியை நோக்குகின்ற புலியும், மானும் - (அதனால் கொல்லப்படுகின்ற) மானும், பகலும் - பகற்காலமும், இரவும் - (அதற்கு மாறாகிய) இராக்காலமும், எல்லாம் - (ஆகிய) இவை எல்லாம், கார்கொன்றை மாலையினார்க்கு - அழகாகிய கொன்றைப் பூவாலாகிய மாலையையுடைய பரமனிடத்து, உடனாகி - (பகையின்றிச்) சேர்ந்து, கலந்தன - கலந்திருக்கின்றன; (எ - று).

(வி - ரை.) ஓர்கின்ற என்பது எதுகை நோக்கி விரித்தல் விகாரம் பெற்று ஓர்க்கின்ற எனவந்தது. வாய் சினையாகு பெயர். உடனாதல் - நட்பாதல். உமை என்னும் உயர்திணைப் பெயர் அஃறிணைப்பெயர்களின் மிகுதிபற்றிக் கலந்தன என அஃறிணை முடிவு பெற்றது. நீரும் அனலும், மதியும் அரவும், யோகும் (யோகாப்பியாசமும்) உமையும் (பெண்ணும்), உருவும் அருவும், வேங்கையும் மானும், பகலும் இரவும் தம்முள் மாறு

பட்டிருப்பனவாம்; ஆயினும், அவை இறைவனிடத்து மாறுபாடின்றி நட்பாயிருக்கின்றன என்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

பரமனது சகளவடிவம் உருவாம்; நிஷ்களவடிவம் அருவாம். பகலும் இரவும் என்பன சூரியனும் சந்திரனுமாம். பரமனது வலக்கண் சூரியனும்; இடக்கண் சந்திரனும். யோக தருமத்தை அனுஷ்டிக்கின்றவர் முன்னர்த் தம்முள் விரோதமாயுள்ள பிராணிகளும், தமது விரோதத்தை விட்டுத் தம்முள் அன்புபாராட்டி இருப்பனவாம். உதாரணம்:—பசு, புலி; பாம்பு, கீரி; எலி, பூனை முதலியனவாம். மகாதேவரது குடும்பத்தில் சிங்கமும், எருதும்; பாம்பும், சந்திரனும்; நீரும், நெருப்பும்; சூரியனும், சந்திரனும்; வேறு பிறவும் விரோதமில்லாதிருக்கின்றன என்று யோக சாஸ்திரமுணர்ந்தவர் கூறுகின்றனர். இதுவும் இங்கு அறிதற்குரியதாம். (50)

கலந்தனக் கென்பலர் கட்டவிழ் வார்கொன்றை கட்டரவார்
சலந்தனக் கண்ணிய கானக மாடியோர் சாணகமும்
நிலந்தனக் கில்லா வகதிய னாகிய நீலகண்டத்
தலந்தலைக் கென்னே யலந்தலை யாகி யழிகின்றதே. (ருக)

(இ - ள்.) தனக்கு - (பரமனாகிய அவன்) தனக்கு, கலம் - ஆபரணம், என்பு - எலும்பாம், அலர் - (அணிவதற்குரிய) மலர் மாலை, கட்டுஅவிழ் - முறுக்குவிரிகின்ற, வார்கொன்றை - நீண்ட கொன்றைப்பூமாலையாம், கட்டு - (கைகளிற்றரிக்கும்) கங்கணம், அரவு - பாம்பாம், (அவனே), ஆர்சலந்தனக்கு - நிறைந்த வெள்ளப்பெருக்கிற்கு, அண்ணிய கானகம் - நெருங்கியுள்ள மயானத்தில், ஆடி - ஆடுகின்றவன், தனக்கு நிலம் -

(அவன்) தனக்குரிய நிலமாக, ஓர்சாண் அகமும் - ஒருசாண் அளவு பூமியும், இல்லா(த) - இல்லாத, அகதியன் - திக்கற்றவன், ஆகிய - (இப்படிப்பட்டவன்) ஆகிய, நீலகண்டத்து - நீலகண்டத்தையுடைய, அலந்தலேக்கு - துக்கமுடையவனே யடைதற்பொருட்டு, அலந்தலேயாகி - (நீ) துக்கமுடையவளாகி, அழிகின்றது - இளேக்கின்றது, என்னே - யாதுகாரணம் (சொல்வாயாக) ; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. ஏ - ஈற்றசை. அலந்தலே என்பதன்பொருள் துக்கமுடையவன் ; துக்கமுடையவள் என்பதாம். என்பாபரணமும் கொன்றைமலர்மாலேயும் சர்ப்ப கங்கணமுமுடையவனும், சுடுகாட்டில் நடனமாடுபவனும், தனக்கென ஒருசாணளவு நிலமும் இல்லாதவனும், திக்கற்றவனும், நீலகண்டமுடையவனும், துக்கமுடையவனும் இருக்கின்ற பரமனே யடைதற்கு நீ துக்கமடைவதேன் ; அவனே நீ அடைய விரும்புதல் கூடாதென்று தோழி தலேமகளே நோக்கிக் கூறினுளென்பது இச்செய்யுளின் கருத்தாம். கட்டு என்பது கட்டுதற்குக் கருவியாகிய கங்கணத்தை யுணர்த்தி நிற்றலின், கருவியாகு பெயராம். 'அலந்தலேக்கு' என்பதற்கு, நீரைத் தலேயிலே சுமப்பவனுக்கு என்றும் பொருள்கொள்ளலாம் ; அலம் - நீர். (51)

அழிகின்ற தாருயி ராகின்ற தாகுல மேறிடுமால்
இழிகின்ற சங்க மிருந்த முலேமேற் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணிர் புலர்ந்தது வாய்கலே போனவந்தார்
மொழிகின்ற தென்னினி நான்மறை முக்கண் முறைவனுக்கே.

(இ - ள்.) நான்மறை - நான்கு வேதங்களேயும், முக்கண் - மூன்று கண்களேயும் உடைய, முறைவனுக்கு - பரமன்

பொருட்டு, (என்மகளுக்கு), ஆர்உயிர் அழிகின்றது - அருமை யான உயிர் வருந்துகின்றது, ஆகுலம் ஆகின்றது - கவலை உண்டாகிறது, மால் எறிடும் - மயக்கம் அதிகரிக்கின்றது, சங்கம் இழிகின்ற(ன) - சங்கு வளையல்கள் (கரங்களிலிருந்து) நழுவி விழுகின்றன, இருந்த முலைமேல் - (முத்துமாலை பொருந்தி) இருக்கின்ற தனங்களின்மீது, பீர்கிடந்தன - பசலைகள் நிரம்பிக் கிடக்கின்றன, கண் நீர் பொழிகின்ற(ன) - கண்கள் நீர் சொரி கின்றன, வாய் புலர்ந்தது-வாய் உலர்ந்திருக்கின்றது, கலைபோன (து)-ஆடை நழுவிப்போய்விட்டது, இனி-இப்போது, வந்தார்- (அப்பரமனிடத்துத் தூதுசென்று) வந்தபெண்கள், மொழிகின் றது - (அவளுக்குச்) சொல்வது, என் - யாது (ஒன்றுமில்லை யாம்); (எ - று).

(வி - ரை.) இது செவிலி கூற்று; நற்றாய் கூற்றுமாம். மயக்கம் - காமவெறி. முறைவன் - நீதியையுடையவன்; முறை- நீதி. இழிகின்ற, பொழிகின்ற என்பன அன்சாரியை பெறாத வினைமுற்றுக்கள். போனது என்பது செய்யுள் விகாரத்தால் போன என வந்தது. பீர் - பசலை; நிறவேறுபாடு. 'அழிகின்ற தாருயிர்' என்பதற்கு, உயிர் போய்க்கொண்டிருக்கிறது என் றும் பொருள் கொள்ளலாம். நான்குவேத முணர்ந்தவனும் மூன்றுகண்ணுடையவனும் நீதிமானுமாயிருக்கும் பரமன் அறி யாதவனும் கண்ணில்லாதவனும் நீதியுணராதவனும் போல இருந்து, இப்பெண் இங்ஙனம் வருந்தி யழிதற்குக் காரணமாயி னனே என்பது இச்செய்யுளின் குறிப்புப் பொருளாம். (52)

முறைவனை மூப்புக்கு நான்மறைக் கும்முத லேழ்கடலம்
துறைவனைச் சூழ்கயி லாயச் சிலம்பனைத் தொன்மைகுன்றா
இறைவனை யெண்குணத் தீசனை பேத்தினர் சித்தந்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை யென்சொல்லி யோதுவதே.

(இ - ள்.) முறைவனை - நீதியுடையவனை, மூப்புக்கும் - முதுமைக்கும், நான்மறைக்கும் - நான்கு வேதங்களுக்கும், முதல்(வனை) - முதல்வனுயுள்ளவனை, எழ் - எழாகி யிருக்கின்ற, அம் - அழகிய, கடல் - கடலினது, துறைவனை - துறையை யுடையவனை, சூழ் - (வளப்பங்கள் பலவும்) சூழ்ந்துள்ள, கயிலாயச் சிலம்பனை - கயிலைமலையையுடையவனை, தொன்மை - பழமை, குன்று (த)-குறையாத, இறைவனை - தலைவனை, எண் குணத்தீசனை - எட்டுக்குணங்களுடைய பரமனை, எத்தினர் - (தன்னைத்) துதிக்கின்றவர்களுடைய, சித்தம்தம்பால்-மனத்தின் கண், உறைவனை - பொருந்தியிருப்பவனை, பாம்பனை - சர்ப்பாபரணமுடையவனை (என்று கூறிப் பரமனைத் துதிப்பதன்றி), யாம் - நாம், பின்னை - வேறு, என்சொல்லி ஓதுவது - எதைச் சொல்லித்துதிப்பது ; (எ - று).

(வி - ரை.) பழமை - உற்பத்தியின்மை ; அஃதாவது அநாதி. தம் - சாரியை. முதல்வனை என்பது செய்யுள் விகாரத்தால் முதல் எனவந்தது. எண்குணமாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவேபாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம்.

“முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே,
உன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோம் [வோம்,
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்,

இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்."
என்னும் திருவாசகச் செய்யுள் இங்குணர்தற்குரியதாம். (53)

ஓதவ னுமமுரையவன் பல்குண முன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கைதிருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்ன னதுகொண் டொழியினி யாரணங்கே. ()

(இ - ள்.) ஆரணங்கே - (பெறுதற்கு) அரிய தெய்வப் பெண் போன்றவளே, அவன் நாமம் ஓது - (நீ) அப்பரமனது திருநாமத்தைச் சொல்லக்கடவாய், அவன் பல்குணம் உரை - அவனது குணங்கள் பலவற்றையும் உரைக்கக்கடவாய், உன்னை விட்டேன் - உன்னை (அவனிடத்து) விட்டுவிட்டேன், அவன் பின்னே போது - அவன் பின்னே செல்லக்கடவாய், அவன் வாழ்க்கை பொருந்து - அவனோடு இல்லற வாழ்க்கையில் பொருந்தக் கடவாய், திருந்தச்சென்று - (அவ்வாழ்க்கையிலே) திருத்தமாகச் சென்று (ஒழுகி), மாதவம் ஆகிடு - சிறந்ததவமுடையவளா யிருக்கக்கடவாய், மாதவம் ஆ(க) - மிகப்பெரியதாக, வள்ர் - வளர்கின்ற, புல் - நெருங்கிய, சடையான் அவன்- சடையையுடைய அப்பரமன், யாது சொன்னான் - (உனக்கு) யாது கூறினானோ, அதுகொண்டு - அதனைக் கைக்கொண்டு, இனி - இனிமேல், ஒழி - (மற்றவற்றை) ஒழித்துவிடக் கடவாய்; (எ - று).

(வி - ரை.) இது நற்றாய் கூற்று. நற்றாய் தலைவிக்கு இல்லறத்தொழுகும் ஒழுக்கத்தை முறையாக வகுத்துக் கூறினாளென்பது இச்செய்யுளின் கருத்தாம். பெண்களுக்குத் தவமாவது கணவனை வழிபட்டு, அவன்வழி நின்று, புலன்கள் புறத்

திற் செல்லாவாறு, அவற்றைக் காத்தலாமாகலின், 'மாதவ மாகிடு' என்றாள். 'மாதவமாவளர்' என்பதில் மாதவமென்பது ஒருபொருட் பன்மொழியாம்; தவம் ஈண்டுப் பெரியது என்னும் பொருளில் வந்தது. ஆரணங்கு என்பது அடையடுத்த உவமையாகுபெயர். (54)

ஆரணங் கின்முக மைங்கணை யானக மவ்வகத்தில்
தோரணந் தோளவன் றேரக லல்குறொன் மைக்கண்வந்த
பூரண கும்ப முலையிவை காணப் புரிசடையெம்
காரணன் றடொழு மன்போ பகையோ கருதியதே. (ருரு)

(இ - ள்.) ஆர் அணங்கின்முகம் - (பெறுதற்கு) அரியதெய்வப்பெண் போன்றவளது முகமானது, ஐங்கணையான் அகம் - மன்மதனது வீடாம், தோள் - (இவளது) தோள்கள், அவ்வகத்தில் தோரணம் - அவ்வீட்டில் (கட்டிய) தோரணங்களாம், அகல் அல்குல் - (இவளது) அகன்ற அல்குல், அவன்தேர் - அம்மன்மதனது தேராம், முலை - (இவளது) ஸ்தனங்கள், தொன்மைக்கண்வந்த - (அவனுக்குப்) பழமையாகப்பொருந்தி வருகின்ற, பூரணகும்பம் - பூரணகும்பங்களாம், புரிசடை எம் காரணன் - நெருங்கிய சடையையுடைய எமது பரமன், இவை காண - இவற்றைக் காணும்படி, தாள்தொழும் - (இவள் அவனது) பாதங்களை வணங்குகின்றாள், கருதியது - (இங்ஙனம் வணங்குகின்ற இவள் தனக்குக் கிடைக்குமென்று) எண்ணியது, அன்போ - (தான் அவனது தாளைத் தொழுவதனாலும் தன் அழகிய அங்கங்களை அவன் காண்பதனாலும் தன்னிடத்து அவனுக்குண்டாகக் கூடிய) அன்பையோ, பகையோ - (தன் அங்கங்கள் மன்மதனை நினைப்பூட்டுவதனால் தன்னிடத்து அவனுக்குண்டாகக் கூடிய) பகையையோ (யானறியேன்); (எ - று).

(வி - ரை.) இது செவிலி அல்லது நற்ருய் கூற்ரும். 'தொன்மைக்கண் வந்த' என்பதற்கு, அநாதிகாலத்திலிருந்து வந்துள்ள என்பது பொருளாம். ஐங்கணையான் - ஐந்து வகையாகிய புஷ்பபாணங்களையுடைய மன்மதன்; ஐங்கணைகள்- தாமரைமலர், மா மலர், அசோக மலர், முல்லை மலர், நீலமலர் என்பனவாம். பரமன் தன் அவயவங்களி னழகைக்கண்டும் தான் வணங்குவதற் கிரங்கியும் தன்மீது அன்பு கொள்வானென்று இவள் கருதுகின்ருள்; அவன் இவளது அங்கங்கள் தனக்கு மன்மதனை நினைப்பூட்டுவதால், இவள்மீது வெறுப்புக்கொண்டால் என்செய்வது என்று ஐயுற்று இரங்கினுள் செவிலி அல்லது நற்ருய் என்க. காரணன் - காணப்படுவனவனைத்திற்கும் மூலகாரணனு யிருப்பவன். இச்செய்யுள் இயைபுருவக வணியாம்.

"கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன்றுங் கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியலவ் வயிறுகுற் ருலம்
செங்கை யேடக மேனியே பூவணந் திரடோள்
பொங்கர் வேய்வனந் திருமுக மதுரையாம் புரமே"

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளும் அணிநோக்கி, இங்குணர்தற்குரியதாம். (55)

கருதிய தொன்றில்லை யாயினுங் கேண்மின்கள் காரிகையாள், ஒருதின மும்முள ளாகவொட் டாதொடுங் காரொடுங்கப், பொருதநன் மால்விடைப் புண்ணியன் பொங்கிளங் கொன்றை யின்னே, தருதிர்நன் ருயிடுந் தாரா விடிற்கொல் லுந் தாழிருளே. (ருசு)

(இ - ள்.) கருதியது - (நான்) நினைக்கின்றது, ஒன்றில்லை. ஒன்றுமில்லை, ஆயினும் - ஆனுலும், கேண்மின்கள் - (தோழிகளே! நீங்கள் நான் சொல்வதைக்)கேளுங்கள், தாழ் இருள் - நிரம்பிய

இருளானது, காரிகையாள் - இப்பெண், ஒருதினமும் - ஒரு நாளாயினும், உளள் ஆக ஒட்டாது - (உயிருடன்) இருப்பவளாக விடாது (இவளை வருத்துகின்றது), ஒடுங்கார் - பகைவர், ஒடுங்க - ஒடுங்கும்படி (அவரை), பொருத - போர்செய்தழித்த, நல்மால் விடைப் புண்ணியன்-சிறந்த பெரிய ரிஷபவாகனத்தை யுடைய புண்ணிய சொரூபனது, பொங்கு - விளங்குகின்ற, இளமை - இளமைபொருந்திய, கொன்றை - கொன்றை மலர்மாலையை, இன்னே - இப்பொழுதே, (நீங்கள் இவளுக்கு) தருதிர் - (கொண்டுவந்து) கொடுங்கள், நன்றாயிடும் - (அதனு லிவள்) சுகமாய்விடுவள், தாராவிடில் - (கொண்டுவந்து) கொடுக்காவிட்டால், கொல்லும் - (அவ்விருளானது இவளைக்) கொன்றுவிடும்; (எ - று).

(வி - ரை.) இது நற்றாய் கூற்று. கொன்றை மலர் மாலையை நீங்கள் பரமனிடத்துச்சென்று கேட்டு வாங்கிவந்து இவளிடத்துக் கொடுங்கள்; கொடுத்தால், இவள் பிழைப்பாள்; கொடாவிட்டால் இருட்போது (இராக்காலம்) இவளைக் கொன்றுவிடுமென்று நற்றாய் தன்தோழிகளை நோக்கிக் கூறினு ளென்பது இச்செய்யுளின் கருத்தாம். காரிகையாள் - அழகுடையவள். (56)

இருளார் மிடற்று லிராப்பக றன்னால் வரைமரையால்
பொருளார் கமழ்கொன்றை யான்முல்லை புற்றர வாடுதலால்
தெருளார் மதிவிசும் பாற்பௌவந் தெண்புன ருங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு மாலர னாயினனே. (௫௭)

(இ - ள்.) மால் - பெருமை பொருந்திய, அரன் - பரமன்; மிடற்றால் - கண்டத்தால், இருள்ஆயினன் - இருள் வடிவமாயினன், இராப்பகல் தன்னால் - இராப்பகல்களால், ஆர்

ஆயினன் - பூமி வடிவமாயினன், மறையால் - மானிருப்பதால், வரை ஆயினன் - மலை வடிவமாயினன், பொருள்ஆர் - பொன்னிறம் பொருந்திய, கமழ் கொன்றையால் - வாசனை வீசுகின்ற கொன்றைப்பூவைத் தரித்திருத்தலால், முல்லை ஆயினன் - முல்லைநில வடிவமாயினன், அரவு ஆடுதலால் - பாம்பு (படம் விரித்து) ஆடுதலால், புற்று ஆயினன் - புற்று வடிவமாயினன், தெருள்ஆர் - விளக்கம் பொருந்திய, மதியால் - சந்திரனைச் சடையில் தரித்திருத்தலால், விசும்பு ஆயினன் - ஆகாயவடிவமாயினன், தெள் - தெளிவான, புனல் தாங்குதலால் - கங்கை நீரைத்தாங்கியிருத்தலால், பௌவம் ஆயினன் - கடல் வடிவமாயினன், அருளால் - கருணையினால், பலபல வண்ணமும் ஆயினன் - (இவையல்லாத) பற்பலவகையான நிறமுள்ள பொருள்களும் ஆயினன்; (எ - று).

(வி - ரை.) ஆயினன் என்பது இருள், ஆர், வரை, முல்லை, புற்று, விசும்பு, பௌவம், பலபலவண்ணம் என்பவற்றோடு சென்றியைந்து நிற்றலின், கடைநிலைத் தீவகமாம். விசும்பால்என்பதன்கணுள்ள ஆல் மதி என்பதனோடு சென்றியைந்து நின்றது. இச்செய்யுள் "விழியாற் பிணையாம்" என்னும் திருக்கோவையார்ச் செய்யுளைப்போல ஏது உருவகவணியாம். இராப்பகல்களுக்குக் காரணமாகிய சந்திரசூரியர்களைப் பரமன் விழியாகப் பெற்றிருத்தலின், இராப்பகல் தன்னால் ஆர் ஆயினன் என்றார். இராப்பகல்தன்னாலென்பது பன்மை யொருமை மயக்கமாம். பொருள்-பொன். பரமன் சர்வப் பிரபஞ்சமுமாயிருக்கின்றான்; அவனுக்கு வேறாக ஒன்றுமில்லை; பிரபஞ்சப்பொருள்களுள் ஒவ்வொன்றும் அவனது அவயவ வடிவமாக விருக்கின்றது; அதனால், சர்வப் பிரபஞ்சத்தையும் பரமனது வடிவமாகக் கண்டு வணங்கல் வேண்டுமென்பது இச்செய்யுளின் உள்ளுறைப்பொரு

ளாம். அரன் என்பதன் பொருள் (தன்னையடைக்கலமாக அடைந்தவரது துன்பத்தை) ஒழிப்பவனென்பதாம்.

"உயிர்ப்பரு மறைக ளோவிவ் வுலகெலாஞ் செய்ய பொற்றாள்
பயிர்ப்பறு நிலநின் சென்னி பரமவா காய மாகும்
வியப்புறு சுழிகொ ளுந்தி நடுவெளி யாகு மெய்யின் [மால்"
மயிர்த்தொகை யனைத்து மெண்ணில் வான்றருக் குலங்க ளா

என்று காசிகாண்டம் கூறுவது மிங்குணர்தற்பாலதாம். (57)

ஆயின வந்தணர் வாய்மை யரைக்கலை கைவளைகள்
போயின வாணிகர் கண்ணுறு மைந்நீர் முலையிடையே
பாயின வேள்கைக் கரபத் திரத்துக்குச் சூத்திரம்போல்
ஆயின பல்சடை யார்க்கன்பு பட்டவெம் மாயிழைக்கே. (ருஅ)

(இ - ள்) பல் சடையார்க்கு - பலபிரிவினதாகிய சடையை யுடைய பரமரிடத்து, அன்புபட்ட-அன்புகொண்ட, எம் - எமது, ஆயிழைக்கு - சிறந்த ஆபரணங்களையுடைய பெண்ணுக்கு, அந்தணர்-அந்தணர் (கூறிய), வாய்மை - உண்மையுரைகள், ஆயின - பலித்துவிட்டன, அரைக்கலை கைவளைகள் - (அவளது)அரையிலுள்ள ஆடையும் கையிலுள்ள வளையல்களும், போயின - (அவிழ்ந்தும் கழன்றும்) போயின, வாள்நிகர் (வடிவத்தால்) வாளையொத்த, கண் உறு - கண்களில் பொருந்திய, மைந்நீர் - மையோடு கூடிய நீர்த்தாரைகள், முலையிடையே - (அவளது) தனங்களினிடத்து, பாயின - ஒழுகிப்பாய்ந்தனவாய், வேள்கை - மன்மதனது கையிலுள்ள, கரபத்திரத்துக்கு - ஈர் வாளுக்கு, சூத்திரம் போல் ஆயின-கயிறுபோலாயின; (எ - று).

(வி - ரை.) இது செவிலி அல்லது நற்றாய் கூற்றாம். கரபத்திரம் - ஈர்வாள் ; அஃதாவது அறுக்கும் வாள். தலைமக

ளது முலையிடையே ஒழுகிப் பாய்ந்துள்ள அவளது கண்ணீர்த் தாரைகள், மன்மதன் தன் ஈர்வாளால் அவளது மார்பை யறுப்பதற்குச் சுண்ணந்தீற்றித் தட்டிய கயிற்றினடையாளம்போன்று அம்முலை யிடையே விளங்கியிருந்தனவென்பது 'வாணிகர் கண்ணுறு......ஆயின' என்பதன் திரண்ட பொருளாம். ஆயிழை யென்பது அடையடுத்த தானியாகுபெயராம்; வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயருமாம். அந்தணர் வாய்மைஆயின என்பதன் விரிவுரை (சோதிட சாஸ்திரத்தில் வல்ல) அந்தணர் (சோதிடநூல் ஆராய்ச்சிசெய்து கூறிய) உண்மை மொழிகள் (இப்போது) பலித்துவிட்டன என்பதாம்.()

இழையார் வனமுலை வீங்கி யிடையிறு கின்றதிற்றால்
பிழையா ணமக்கிவை கட்டுண்க வென்பது பேச்சுக்கொலாம்
கழையார் கழுக்குன்ற வாணனைக் கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக் கயற்கண்கள் கூடியதே. (ருகூ)

(இ - ள்.) கழை - மூங்கிற்புதர்கள், ஆர் - நிறைந்துள்ள, கழுக்குன்ற வாணனை - திருக்கழுக்குன்றத்தில் வாழுகின்ற கடவுளை, கண்டனை - நீலகண்டத்தை யுடையவனை, காதலித்தாள் - விரும்பிய இவளது, கோலம் - அழகிய, கயல் - (பிறழ்ச்சியால்) கயல் மீன்போன்ற, கண்கள் - கண்களானவை, குழைஆர் செவியொடு - (இரத்தின) குண்டலம் பொருந்திய செவிகளோடு, கூடியது - (சென்று) கூடியிருத்தல், இழைஆர் - (முத்துமாலை, இரத்தினமாலை முதலிய) ஆபரணங்கள் பொருந்திய, வனம் - அழகிய, முலை - தனங்கள், வீங்கி - பூரித்து (வளர்வதனால்), இடை - (இவளது) இடை, இறுகின்றது - முரியுந்தன்மையதாயிருக்கின்றது, இற்றால் - (இடை) முரியுமாயின், பிழையாள் - (இவள்) பிழைக்கமாட்டாள், நமக்கு - நம்

பொருட்டு, இவை கட்டுண்க - இத்தனங்கள் (கச்சால்) கட்டுப் படுக, என்பது பேச்சுக்கொலாம் - என்பதாகிய பேச்சு (அக்கண் கள் அச்செவிகளோடு பேசுதற்குப்) போலும் ; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. கழுக்குன்ற வாணனாகிய நீலகண்டனைக் கண்டு காதலித்த தலைமகளியல்பைத் தோழி கூறினாளென்பது இச்செய்யுளின் கருத்தாம். கண்கள் செவிக ளோடு கூடியிருத்தற்குக்காரணம் அக்கண்கள் அச்செவிக ளோடு தலைமகளது இடையிறுதற்குக் காரணமாகப் பூரிக்கின்ற முலைகள் அவள் உயிர் வாழ்தற்பொருட்டுக் கச்சால் கட்டுப் படவேண்டும் என்று பேசுவதற்காகவாம் என்பதாம். இச்செய் யுள் தற்குறிப்பேற்றவணியாம். கட்டுண்க என்பது செயப் பாட்டுவினைவியங்கோள்முற்று. வாணன் என்பது வாழ்நன் என்பதன் மரூஉமொழி. இடை - இடுப்பு. ஆம் - சாரியை. கூடியது என்பது துவ்வீற்று இறந்தகாலத் தொழிற் பெயர். (59)

கூடிய தன்னிடத் தானுமை யாளிடத் தானையையா
றீடிய பல்சடை மேற்றெரி வண்ண மெனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது கூற்றைப் படர்புரஞ்சுட்
டாடிய நீறுசெஞ் சாந்திவை யாமெம் மயனெனவே. (௬௦)

(இ - ள்.) எம்மயன் - எம் ஐயன் ஆகிய பரமன், உமை யாள் கூடிய - உமாதேவி கூடியிருக்கும், தன் இடத்தான் - தனது இடப்பாகத்தையுடையவன், ஐ ஐயாறுஇடத்தான் - அழ கிய திருவையாற்றை(த் தனக்கு)இடமாக உடையவன், மேற்று - (அவன் தலை) மீதிருப்பது, ஈடிய பல்சடை - நெருங்கிய பல வாகிய சடையாம், வண்ணம் - (அவனது) நிறம், எரி - தீ வண்ணமாம், என - எனவும், பாடிய(ன) - (அவன்) பாடியன, நான்மறை - நான்கு வேதங்களாம், பாய்ந்தது - உதைத்துத்

தள்ளியது, கூற்றை - யமனையாம், படர் - (ஆகாயத்தில்) சஞ்சரிக்கவல்ல, புரம் - திரிபுரத்தை, சுட்டு - (கணையொன்ருல்) எரித்தழித்து, ஆடியநீறு - தரித்த சாம்பல், செஞ்சாந்து - (அவன் பூசுதற்குரிய) செவ்விய சாந்தாம், இவை ஆம் - இவை (அப்பரமனுக்கே தகுதியானவை) ஆம், என - எனவும் (வாழ்த்தி), பணிமின் - (அவனை நீங்கள்) வணங்குங்கள் ; (எ-று).

(வி - ரை.) 'கூடிய.....மேற்று' என்பதனை, கூடிய தன் இடத்தான், உமையாள் இடத்தான், ஐ, ஐஆறு ஈடிய பல்சடை மேற்று எனப்பிரித்து, அதற்கு முறையே (தான்) எழுந்தருளியுள்ள தனது இடமாகிய கைலைமலையை யுடையவன், உமையாளை இடப்பாகத்துடையவன், தலைவன், அழகிய கங்கை நதி (அவனது) நெருங்கிய பலவாகிய சடைமீதிருப்பது எனப் பொருள்கொள்ளுதலும் பொருந்தும். எம்மையன் என்பது சந்தவின்ப நோக்கி 'எம்மயன்' எனக்கூறப்பட்டது. 'கூடிய தன்னிடத்தான்' என்பதிலுள்ள தன் என்பதனைச் சாரியையாகவுங் கொள்ளலாம். ஈண்டிய என்பது எதுகை நோக்கி, ஈடிய என வந்தது. எனவும்எனவும் என்னும்எண்ணும்மைகள் தொக்கு நின்றன.

உமை என்பதன் பொருள் உ-பெண்ணே ! மா-வேண்டாம் என்பதாம் ; அஃதாவது மேனையால் தவத்தினின்றும் தடுக்கப்பட்டவளென்பதாம். உமை என்பதன் பூர்வவடிவம் உமா என்பதாம். (60)

அயமே பலியிங்கு மாடுள தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி யேறெம்மைப் பாய்ந்திடுமால்
புயமேய் குழலியர் புண்ணியர் போமி னிரத்தல்பொல்லா
நயமே மொழியினு நக்காம மாவும்மை நாணுதுமே. (௬௧)

(இ - ள்.) புயம் ஏய் குழலியர் - (அவிழ்ந்து) புயத்தில் வீழ்ந்து புரளும் கூந்தலையுடைய பெண்களே !, இங்கு - இவ்விடத்தில் (பிச்சைக்குவந்த), மாடு உள்ள தாணு - இடபவாகனமுடைய பரமனாரது: ஓர் - ஒப்பற்ற, குக்கிக்கு - வயிற்றிற்கு, அயம் - புண்ணியம் (உண்டாதற்பொருட்டு), பலியிட - பிச்சையிடுமாறு (நாங்கள் சென்றால்), பசுபதி - பசுபதியாகிய அவர், பயமே மொழியும் - பயத்தைத் தரத்தக்க சொற்களையே கூறுகின்றார், ஏறு - (அவர் ஏறிவந்த) ரிஷபம், எம்மைப் பாய்ந்திடும் - எங்களைப் பாயவருகின்றது, புண்ணியர் - புண்ணிய சொருபராகிய அவர், இரத்தல் - (இங்குவந்து) யாசித்தல், பொல்லா(து) - மிகக் கொடியதா யிருக்கின்றது, நயமேமொழியினும்-(அவர் பயத்தைத் தரத்தக்க சொற்களைக் கூறாது) இனிமையைத் தரத்தக்க வார்த்தைகளையே கூறினாலும், நக்கு ஆம் - நக்கராய் இருக்கின்றார், ஆல் - ஆதலால், போமின் - (நீங்கள் அவரைவிட்டு நீங்கிச்) செல்லுங்கள், உம்மை - (நாங்கள்) உமது நிலைமையை (நோக்கி யஞ்சி வருந்தி), நாணுதும் - வெட்கமடைகின்றோம் ; (எ - று).

(வி - ரை.) இது பிச்சாடன மூர்த்தியாய் வந்த இறைவனைக் கண்டு மயங்கி, அவனைச் சூழ்ந்துகொண்ட பெண்களின் நிலைமையைக் கண்ட மற்றப் பெண்கள் அவர்களை வெறுத்திகழ்ந்து கூறியதாம். அயம்-புண்ணியம்; பலி - பிச்சை; குக்கி - வயிறு ; பசுபதி - பசுக்களுக்குத் தலைவர் ; பசு-சீவன். தாணு-நிலைபெற்று இருப்பவர் ; புயம் - தோள். அயமே என்னும் ஏகாரம் அசைநிலையாம். பயமே, நயமே என்னும் ஏகாரங்கள் பிரிநிலைப்பொருளில் வந்தன. பொல்லாது என்பது பொல்லா எனக் கடைக்குறைந்து வந்தது. நக்கராவர் என்பது சந்தவின்பம் நோக்கி நக்காம் எனவந்தது. நக்கர் - நிர்வாணமா

யிருப்பவர், உம்மை - பொருளாகுபெயர். அம்ம என்பது செய்யுள் விகாரத்தால் அமா எனவந்தது; அது வியப்புக் குறிப்பிடைச் சொல்லாம். புயமேய் குழலியர் என்பது அண்மைவிளி. பயம், நயமென்பன காரியவாகு பெயர். (61)

நாணு நடக்க நலத்தார்க் கிடையில்லை நாமெழுக
எணு ரிருந்தமி ழான்மற வேனுந் நினைமினென்றும்
பூணுர் முலையீர் நிருத்தன் புரிசடை யெந்தைவந்தால்
காணு விடேன்கண் டிரவா தொழியேன் கடிமலரே. (சுஉ)

(இ - ள்.) பூண் ஆர் முலையீர் - (முத்துமாலை, இரத்தினமாலை முதலிய) ஆபரணம் பொருந்திய ஸ்தனங்களையுடைய பெண்களே, நாம் - நாம், நாள் - தினந்தோறும், நடக்க - நடந்து சென்று தரிசிக்க (எண்ணுவோமாயின்), நலத்தார்க்கு - நன்மையையுடைய சிவபெருமானைக் கண்டு தரிசிப்பதற்கு, இடை இல்லை - (நமக்குச்) சமயம் (வாய்ப்பது) இல்லை, நாம் - நாம், எழுக - (எவ்வாருவது அவரைக்கண்டு தரிசித்து அதனுல்) மேன்மை யடைவோமாக, நும் - நீயிர், எண் ஆர் - மேன்மை பொருந்திய, இருந்தமிழால் - சிறந்த தமிழ்ப்பாடல்களால், மறவேல் (மின்)-(அவரை) மறவாமல் பாடுங்கள், என்றும் - எப்போதும், நினைமின் - தியானியுங்கள், (யானே), நிருத்தன் - நடனஞ் செய்பவராகிய, புரிசடை - நெருங்கிய சடையையுடைய, எந்தை வந்தால் - எமது சுவாமி வந்தால், காணு(ம்ல்) விடேன் - (அவரைப்) பார்க்காது விடமாட்டேன், கண்டு - (அவரைக்) கண்டு, கடிமலர் - வாசனைபொருந்திய கொன்றை மலர் மாலையை, இரவாது ஒழியேன் - (அவரிடத்து) யாசியாது இருக்கமாட்டேன்; (எ - று).

(வி - ரை.) இது தலைமகள் தன்தோழிகளை நோக்கிக் கூறியதாம். இது மாலை வேண்டலாம். இடை - சமயம், மற வேன்மின் என்பது மின் மிகுதி குறைந்து மறவேல் எனவந்தது. எந்தை என்பது இங்கு எனது தலைவர் என்னும் பொருளதாய் வந்தது. நும் என்னுஞ்சொல் அல்வழிக்கண் வருமிடத்து நீயிர் என வருவதாம். இங்கு நும் என்பது நீயிர் என்னும் பொருளில் வந்தது. (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளி மயங்கியல் 31-வது சூத்திரம் பார்க்க). 'நாணுநடக்க' என்பதை நாள் நாம் நடக்க எனப் பிரித்துக்கொள்க.

இச்செய்யுளுக்கு, பூணர் முலையீர் நடக்க நாணும் - ஆபரணம் பொருந்திய ஸ்தனங்களையுடையவர்களே ! (என்பொருட்டு அவரிடத்து) நடந்து செல்வதற்கு (உங்களுக்கு) வெட்கமுண்டாகும், நலத்தார்க்கு இடை இல்லை - அழகுபொருந்திய உங்கட்கு (நடப்பதற்குரிய வலிமைபொருந்திய) இடையுமில்லை, நாம் எழுக - நீங்களே உயர்வடையுங்கள், என்றும் நும்நினைமின் - எப்பொழுதும் உங்கள் நன்மையையே (நீங்கள்) நினைத்துக்கொள்ளுங்கள் (என்னை மறந்து விடுங்கள்), (நானே) எண் ஆர் இருந் தமிழால் மறவேன் - மேன்மை பொருந்திய சிறந்த தமிழ்ப் பாடல்களால் (சிவனை) மறவாது துதிப்பேன், நிருத்தன்புரிசடை எந்தைவந்தால் காணு(மல்) விடேன், கண்டு கடிமலர் இரவாது ஒழியேன் என்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருளில், நலத்தார்க்கு என்பது முன்னிலையில் படர்க்கை வந்த இடவழுவமைதியாம்; நாமெழுக என்பதன்கண் நாம் என்பது முன்னிலையிற் றன்மைவந்த இடவழுவமைதியாம். இது தலைமகள் தனக்காகப் பரமரிடத்துச்சென்று மாலை வாங்கி வாராத தோழிகளை முனிந்து கூறியதாம். நலத்தார்க்கிடையில்லை என்பதற்கு, நன்மைபொருந்திய சிவபெருமானிடம் செல்வதற்கு (எனக்கு

வேறு) வழியும் இல்லை என்றும் பொருள் கொள்ளலாம். இடை - வழி. (62)

கடிமலர்க் கொன்றை தரினும்புல் லேன்கலை சாரவொட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன் முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவ ரேத்தநின் ருய்க்கழ கல்லவென்பன்
தொடிமலர்த் தோடொடு மேற்றிரு வாணை தொடங்குவனே.

(இ - ள்.) கடிமலர் கொன்றைதரினும் - (பரமர் வந்து) வாசனையுள்ள கொன்றைமலர் மாலையை (எனக்குக்) கொடுத்தாலும், புல்லேன் - (நான் அவரைத்) தழுவமாட்டேன், கலை சாரவொட்டேன் - (எனது) ஆடையை (அவர்மீது) படவிட மாட்டேன், முடிமலர் தீண்டின் - (என்) தலையிலுள்ள மலர் மாலையை (அவர்) தொடுவாராயின், முனிவன் - (அவரைக்) கோபிப்பேன், முலைதொடுமேல் - (அவர் என்) ஸ்தனத்தைத் தொடுவாராயின், கெடுவன்-அழுதுசாவேன், அடிமலர் - (உமது) திருவடித்தாமரைமலரை, வானவர் ஏத்த - தேவர்கள் துதிக்க, நின்ருய்க்கு - (பெருமையோடு) இருக்கும் உமக்கு, அழகல்ல என்பன் - (இவ்வாறு செய்வது) அழகல்ல என்று சொல்வேன், தொடிமலர்தோள்-பொன்னரிமாலையும் பூமாலையும் பொருந்திய (என்) தோளை, தொடுமேல் - (அவர்) தொடுவாராயின், திரு ஆணை - (உமது அப்பன்மீது ஆணைப்படி நீர் என்னைத்தொட வேண்டாம் என்று) நல்ல ஆணைச்சொற்களை, தொடங்குவன் - (சொல்லத்) தொடங்குவேன் ; (எ - று).

(வி - ரை.) இது பாங்கிக்குத் தலைவி கூறியதாம். இது காறும் கருணைசெய்யாதிருந்த தலைவர் வரின், அவரோடு யான் பிணங்காதிருக்கமாட்டேன் என்று தோழிக்குத் தலைமகள்

கூறினுளென்பது இச்செய்யுளின் கருத்தாம். கலை - ஆடை. பொன்னரிமாலை - இங்குத் தோளணிகளுள் ஒன்றும். (63)

தொடங்கிய வாழ்க்கையை வாளா துறப்பர் துறந்தவரே
அடங்கிய வேட்கைய ரன்பா லிலராறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண ஞர்க்கன்றி யிங்குமன்றிக்
கிடங்கினிற் பட்ட கராவனே யார்பல கேவலரே. (கூச)

(இ - ள்.) பலகேவலர் - கீழ்மக்களாகிய பலர், தொடங்கிய வாழ்க்கையை - (தாம் அறத்தைச் செய்தற்பொருட்டுத்) தொடங்கிய இல்வாழ்க்கையை, வாளாதுறப்பர் - (அவ்வாழ்க்கையின் பயனையடையாது) வீணுக ஒழித்துவிடுவர் (அவர்), அறு காற்பறவை - ஆறுகால்களையுடைய வண்டுகள், முடங்கிய - மொய்த்து நெருங்கியுள்ள, செஞ்சடை - சிவந்த சடாபாரத்தையுடைய, முக்கணஞர்க்கன்றி - திரியம்பகராகிய பரமர்க்கு (ஆட்பட்டுய்தலுடையவர்) ஆகாதும், இங்கும் அன்றி - இவ்வுலகத்திலும் (ஐம்புல இன்பங்களை நுகர்தலுடையவர்) ஆகாதும், கிடங்கினிற்பட்ட - அகழியிலகப்பட்டுள்ள, கரா அனையார் - முதலையை ஒத்தவராவர், (ஆனுல்), அன்பால் - (திரியம்பகர்மீது மாருதுவைத்துள்ள) அன்பு காரணமாக, துறந்தவர் - (யானெனது என்னும் இருவகைச் செருக்கையும்) விட்டவர், அடங்கிய வேட்கையர் - (காணப்படும் இவ்வுலக போகத்திலும் கேட்கப்படும் அவ்வுலக போகத்திலும்) ஆசை யொழிந்தவராவர், (அதனுல்), இலர் - (சம்சாரபந்தம்) இல்லாதவராவர்; (எ - று).

(வி - ரை.) தொடங்கிய என்பதன் பொருள் எற்றுக்கொண்ட என்பதாம். வாளா என்பது சும்மா அல்லது வீணுக என்னும் பொருள்தரும் ஓரிடைச் சொல்லாம். " அருங்கேடன் " என்பது கேடரியன் எனப் பொருள்தந்து நிற்றல்

போல, ‘அடங்கிய வேட்கையர்’ என்பது வேட்கையடங்கியவர் எனப் பொருள்தந்து நின்றது. அன்றியும் அன்றியும் என்னும் எண்ணும்மைகள் தொக்குநின்றன. வேட்கை - எனக்கிது வேண்டுமென்னும் இச்சை. கிடங்கு (அகழி) - கோட்டைமதிலைச் சூழ்ந்துள்ள நீர்நிலை. கேவலர் - இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்னும் உணர்வில்லாத கயவர். தொடங்கிய வாழ்க்கையை வாளாதுறந்து துறவுகொண்டிருப்பவர் கிடங்கினிற்பட்ட கரா கரையேறியுய்ய நெறியறியாது துன்புறுதல் போல, பரமனடியை யடைந்துய்ய நெறியறியாது துன்புறுவர்; தாம் தொடங்கிய வாழ்க்கையை வாளாதுறவாது, நெறியறிந்து துறந்து பரமனது திருவடியை மறவாதிருப்பவர் சம்சாரபந்தமில்லாது பேரின்பமடைதற்குரியவராவரென்பது இச்செய்யுளின் திரண்ட பொருளாம்.

> “வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
> கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்—கீளாடை
> அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற
> கண்ணப்ப ராவார் கதை ”

என்று கைலைபாதி காளத்திபாதி அந்தாதி கூறுவதும் இங்குணர்தற்பாற்றும். (64)

வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே
கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடம்
சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ் சங்கரற்கே. (கூரு)

(இ - ள்.) சங்கரற்கு - பரமசிவனுக்கு, வலம் - வலப்பக்கத்துக் காலில், கழல் - வீரக்கழலாம், இடம் - இடப்பக்கத்துக் காலில், பாடகம் - பாடகமாம், வலம் - வலப்பக்கத்து மார்பில்,

பாம்பு - சர்ப்பாபரணமாம், இடம் - இடப்பக்கத்து மார்பில், கலம் - பொன்னுபரணமாம், வலம் - வலப்பக்கத்து நெற்றியில், நீறு - விபூதியாம், இடம் - இடப்பக்கத்து நெற்றியில், சாந்து- சாந்தாம், வலம் - வலப்பக்கத்துக் கையில், எரி - மழுவாம், இடம் - இடப்பக்கத்துக் கையில், பந்து - பந்தாம், வலம் - வலப்பக்கத்துத் தோளில், அலம் என்பு தார் - அசைகின்ற எலும்பு மாலையாம், இடம் - இடப்பக்கத்துத்தோளில், ஆடகம்- பொன்னரிமாலையாம், வலம் - வலப்பக்கத்துக் கையில், வேல் - சூலாயுதமாம், இடம் - இடப்பக்கத்துக் கையில், ஆழி - சக்கரப் படையாம், வலம் - வலப்பக்கத்துச் சிரசில், சலம் தாழ்சடை - கங்கைதங்கிய சடாபாரமாம், இடம் - இடப்பக்கத்துச் சிரசில், தண் அம் குழல் - குளிர்ந்த அழகிய கூந்தலாம் ; (எ - று).

(வி - ரை.) இது அர்த்தநாரீசுவர வர்ணனை. இது இந் நூல் ஆறுவது செய்யுளின் சங்கரநாராயண வர்ணனையோடு ஒத் திருப்பதறிக. அலம் - அசைதல் ; ஆடகம் - பொன். என்பலந் தார் என்பதை என்பு, அலம், தார் எனப் பிரித்துக்கொள்க. தான் தான் என்னும் இரண்டும் சாரியையாம். பரமனது வடி வம் திருமால் வடிவமாகவும், உமாதேவி வடிவமாகவும் இருக் கின்ற தென்பதாக அற்புதத் திருவந்தாதி

“ ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால்—இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து ”

என்று கூறுவது மிங்குணர்தற் பாற்றும். (65)

சங்கரன் சங்கக் குழையன் சரணா விந்தந்தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட் படுமின்றொண் டீர்நமனார்

கிங்கரர் தாஞ்செய்யுங் கீழா யினவிறை கேட்டலுமே
இங்கர மாயிர மீரவென் னெஞ்ச மெரிகின்றதே. (சுசு)

(இ - ள்.) தொண்டீர் - தொண்டர்களே! (நீங்கள்), சங்கரன் - பரமனாகிய, சங்கக்குழையன் - சங்குக் குண்டலத்தை யுடையவனது, சரணாரவிந்தந்தன்னை - திருவடித்தாமரைமலர்களை, அம்கரம் கூப்பி - (உமது) அழகிய கைகளைக் குவித்து, தொழுது - வணங்கி, ஆட்படுமின் - (அவனுக்கு) அடிமைப் படுங்கள், நமனார் - எமனது, கிங்கரர்தாம் செய்யும் - வேலைக் காரர்கள் செய்யும், கீழாயின - இழிவானவையான இம்சைகளை, (நான் சாத்திரப் பிரமாண வாயிலாக), இறைகேட்டலுமே - சிறிது கேட்ட அளவிலே, (அதனால்), இங்கு - இவ்வுலகத்தில், என்நெஞ்சம் - என்மனம், ஆயிரம் அரம் - ஆயிரம் அரங்கள், ஈர - அராவ, (அதனால் உடம்பு எரிவதுபோல), எரிகின்றது - எரிகின்றது ; (எ - று).

(வி - ரை.) சங்கக்குழை - சங்காலாகிய குண்டலம். சரணாரவிந்தமென்பது சரண அரவிந்தம் எனப்பிரிபடும். சரணம் - திருவடி, அரவிந்தம் - தாமரைமலர். இங்கு அரவிந்தம் முதலாகுபெயராம். நமனார் என்பதன்கண் ஆர்விகுதி இழித்தற் பொருளில் வந்தது. சங்கரன் - சுகத்தைச் செய்பவன் ; சம் - சுகம், கரன் - செய்பவன். கிங்கரர் - வேலைசெய்பவர் ; கிம் - வேலை, கரர் - செய்பவர். கீழாயின - வினையாலணையும் பெயர். எரிகின்றதென்பதன் கருத்துப் பொருள் வருந்துகின்றது என்பதாம். நம்மனோர் யமதூதர் செய்யும் துன்பத்தினின்றும் நீங்க விரும்புவாராயின், விரைந்து பரமசிவனது திருவடிகளை வணங்கி, அவனுக்கு அடிமையாதல் வேண்டுமென்பது இச்செய்யுளின் கருத்தாம். அரம் - இரும்பு முதலியவற்றை யராவுதற் குரிய ஒரு கருவி.

"தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதில்லாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக வென்று"

என்று கைலைபாதி காளத்திபாதி யந்தாதி கூறுவதிங்குணர்தற் பாற்றும். (66)

எரிகின்ற தீயொத் துளசடை யீசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது சூழ்புன லப்புனலில்[பான்
சரிகின்ற திங்களோர் தோணியொக் கின்றதத் தோணியுய்ப்
தெரிகின்ற திண்கழை போன்றுள தாலத் திறலரவே. (சுஎ)

(இ - ள்.) ஈசற்கு - பரமனுக்கு, சடை - சடாபாரமானது, எரிகின்ற தீ ஒத்துள(து) - (கொழுந்துவிட்டு) எரிகின்ற தீயை யொத்திருக்கின்றது, சூழ்புனல் - (அச்சடாபாரத்தைச்) சூழ்ந் திருக்குங் கங்கையாறானது, அத்தீக்கு - அந்தத் தீயை யவிப்ப தற்கு, இமையோர் - தேவர்கள், சொரிகின்ற - வார்க்கின்ற, பால்கடல் போன்றது - (திருப்)பாற்கடலை யொத்திருக்கின் றது, அப்புனலில் - அந்தக் கங்கையாற்றில், சரிகின்ற - ஒதுங் கிச் செல்லுகின்ற, திங்கள் - இளம்பிறையானது, ஓர் தோணி ஒக்கின்றது - ஒருதோணியை யொத்திருக்கின்மது, அத்திறல் அரவு - அந்த வெற்றியையுடைய பாம்பு, அத்தோணி உய்ப் பான் - அந்தத் தோணியைச் செலுத்த, தெரிகின்ற - ஆராய்ந்து எடுக்கின்ற, திண்கழை - கெட்டியான மூங்கிலை, போன்றுளது- ஒத்திருக்கின்றது ; (எ - று).

(வி - ரை.) ஆல் - அசைநிலை. ஈசன் என்பதன் பொருள் சர்வப் பிரபஞ்சத்தையும் நியமிப்பவனென்பதாம். சடை செந் நிறத்தால் தீயையும், புனல் வெண்ணிறத்தால் பாற்கடலையும்,

திங்களும் அரவும் வடிவத்தால் முறையே தோணியையும் கழையையும் ஒப்பனவாயினவென்க. தோணி - சிறுமரக்கலம். இச்செய்யுள் இந்நூலின் 26-வது செய்யுள்போல, பண்புவமையணியும் பலவயிற்போலியுவமையணியுமாம். திறல் என்பதன் பொருள் வலிமையுமாம். (67).

அரவ முயிர்ப்ப வழலுமங் கங்கை வளாய்க்குளிரும்
குரவங் குழலுமை யூடற்கு நைந்துரு கும்மடைந்தோர்
பரவும் புகழண்ண றீண்டலும் பார்வா னவைவிளக்கும்
விரவு மிடரின்ப மெம்மிறை சூடிய வெண்பிறையே. (சுஅ)

(இ - ள்.) எம் இறை - எமது இறைவன், சூடிய - (சடாமுடியின்கண்) தரித்துள்ள, வெண்பிறை - வெண்பிறையானது, அரவம் உயிர்ப்ப - பாம்பு மூச்சுவிடுதலினால், அழலும் - வெம்மையடையும், அம்கங்கைவளாய் - அழகிய கங்கைநீர் கலத்தலினால், குளிரும் - குளிர்ச்சியடையும், அம் குரவு குழல் - அழகிய குராமலரை யணிந்த கூந்தலையுடைய, உமை ஊடற்கு - உமாதேவியார் ஊடுதலினால், நைந்து உருகும் (தன்னுடம்பு) கசிந்து உருகும், அடைந்தோர் பரவும் - (தமது துன்பம் நீங்குமாறு) அடைந்த அடியவர்கள் துதிக்கின்ற, புகழ் அண்ணல் - கீர்த்தியையுடைய சிவபெருமான், தீண்டலும் - (அவ்வூடல் நீங்குதற்பொருட்டு உமாதேவியாரது திருவடிகளைத் தொட்டு வணங்கும்போது தன்னையும்) தொடுதலினால், பார்வான் அவை - (தான் விளங்குதலே யன்றிப்) பூமியும் ஆகாயமும் ஆகிய அவற்றையும், விளக்கும் - விளங்கச்செய்யும், இடர் இன்பம் விரவும் - (இவ்வாறு) துன்பத்தையும் இன்பத்தையும் (மாறி மாறி) அடையும்; (எ - று).

(வி - ரை.) இச்செய்யுள் சிவபெருமானது சடாபாரத்திலுள்ள வெண்பிறை அரவமுயிர்த்தல் முதலியவற்றாலடையும்

வேறுபாட்டைக் கூறுகின்றமையால், ஏதுவணியாம். உயிர்த்தல் - மூச்சுவிடல் ; வளாவுதல் - கலத்தல். பார்வான் என்பன உம்மைத்தொகை. ஊடல் - பிணக்கு; வெண்பிறை - வெண்மையாகிய பிறைச்சந்திரன். ஊடற்கு என்பது உருபுமயக்கமாம். தீண்டலும் என்னும் உம்மை சாரியையாம். உயிர்ப்ப, வளாய் என்னும் வினையெச்சங்கள் காரணப்பொருளில் வந்தன. பார் வானவையும் என்னும் இறந்தது தழீஇய வெச்சவும்மை தொக்கு நின்றது. (68)

பிறைத்துண்டஞ் சூடலுற் றோபிச்சை கொண்டன லாடலுற்றோ, மறைக்கண்டம் பாடலுற் றோவென்பு நீறு மருவலுற்றோ, கறைக்கண்டம் புல்லலுற் றோகடு வாயர வாட்டலுற்றோ, குறைக்கொண் டிவளரன் பின்செல்வ தென்னுக்குக் கூறுமினே. (கூகூ)

(இ - ள்.) இவள் - இப்பெண், அரன்பின்-பரமன் பின்னே, குறைக்கொண்டு செல்வது - (அவனிடத்துத் தன்) குறையைக் கூறிக்கொண்டு செல்வது, பிறைத்துண்டம் சூடல் உற்றோ - (அப்பரமன்போலத் தான்) பிறைச்சந்திரனைத் தரித்தலை விரும்பியோ, பிச்சைகொண்டு - பிச்சை ஏற்று, அனல் ஆடலுற்றோ - (சுடுகாட்டிலுள்ள) அக்கினியில் ஆடுதலை விரும்பியோ, கண்டம்-கண்டத்திலிருந்து, மறை - வேதங்களை, பாடல் உற்றோ - பாடுதலை விரும்பியோ, என்பும் நீறும் மருவல் உற்றோ-எலும்பு மாலையும் விபூதியும் தரித்தலை விரும்பியோ, கறைக்கண்டம் புல்லல் உற்றோ - நீலகண்டத்தை அடைதலை விரும்பியோ, கடுவாய் அரவு - விஷம்பொருந்திய பற்களையுடைய பாம்பை, ஆட்டல் உற்றோ - ஆட்டுதலை விரும்பியோ, என்னுக்கு - (வேறு) எதற்காகவோ, கூறுமின் - (மங்கைமீர்! நீங்கள் அதனைச்) சொல்லுங்கள் ; (எ - று).

(வி - ரை.) குறைக்கொள்ளலாவது ஒருவர் மற்றொருவ ரிடத்துத் தாம் விரும்பிய தொன்றனைப்பெற யாசித்தல். என்னுக்கோ என்னும் ஒகாரம் தொக்கு நின்றது. ஒகாரங்கள் ஐயப் பொருட்கண் வந்தன. பிறைத் துண்டம் - பிறையாகிய துண்டம்; துண்டம் - துண்டு. உற்றோ உற்றோ என்பன விரும்பியோ என்னும் பொருளில் வந்தன. சூடலுற்றோ என்றற்றொடக்கத்தன வற்றைச் சூடலுறுதற்கோ என்றற்றொடக்கத்தனவாக விரித்துப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். உறுதல் ஈண்டு அடைதலாம். வாய் - ஆகுபெயர். இது செவிலி கூற்று. (69)

கூறுமி னீசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமி னவல மிவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தா விமையவர்க்கே. (எ0)

(இ - ள்.) ஈசனைக் கூறுமின் - (தொண்டர்களே! நீங்கள்) பரமனைத் துதியுங்கள், குற்றேவல் செய்மின் - (அவனுக்குச்) சிறு தொண்டுகளைச் செய்யுங்கள், கண்கள் குளிர்மின் - (அவனைத் தரிசித்து அதனால்) கண்கள் குளிர்ச்சியடையுங்கள், சித்தம் தேறுமின் - (அவனைத் தியானஞ் செய்வது வாயிலாகச்) சித்தந்தெளியுங்கள், சிவனைத் தெளிமின் - சிவனை (கடவுளாக) நிச்சயம் செய்யுங்கள், செற்றம் செறுமின் - கோபத்தை யடக்குங்கள், வேட்கை ஆறுமின் - ஆசை தணியுங்கள், அவலம் அறுமின் - பயனில் செய்கையை யொழியுங்கள். இவை - இவற்றை, நெறியா(க) - வழியாக(க் கொண்டு), வானத்து ஏறுமின் - சிவலோகத்திற்குச் செல்லுங்கள், இமையவர்க்கு விருந்தா(க) - (அங்குள்ள) தேவர்க்கு விருந்தினராக, இருமின் - இருங்கள்; (எ - று).

(வி - ரை.) சித்தந் தெளிதல் - மனத்தமோற்ற மொழிதல். சிவலோகத்துள்ள தேவர்கள் - நந்தி, மாகாளர், ஆலால சுந்தரர் முதலியோராவர். கூறுமின் என்றற்றொடக்கத்தன முன்னிலைப் பன்மை யுடன்பாட்டேவல்வினைமுற்றுக்கள். நீங்கள் கண்கள் குளிர்மின், சித்தம் தேறுமின், வேட்கை ஆறுமின் என்பன முன்னிலை எழுவாயோடு படர்க்கை யெழுவாய் வந்து கூடி, முன்னிலைப்பயனிலையைக் கொண்டு முடிந்த வழுவமைதி வாக்கியமாம். (70)

இமையோர் கொணர்ந்திங் கிழித்திட நீர்மைகெட் டேந்தல்பின்போய், அமையா நெறிச்சென்றோ ராழ்ந்த சலமகளாயணைந்தே, எமையா ளுடையான் றலைமக ளுவங் கிருப்பவென்னே, உமையா ளவள்கீ ழுறைவிடம் பெற்றோ வுறைகின்றதே. (எக)

(இ - ள்.) (ஆகாயகங்கையானவள்), இமையோர்-தேவர்கள், கொணர்ந்து - (விண்ணுலகத்தினின்றும்) கொண்டு வந்து, இங்கு இழித்திட - இம்மண்ணுலகத்திலே இறங்கச் செய்ய, நீர்மைகெட்டு - (தன்) தன்மை கெட்டு, ஏந்தல் பின் போய் - பகீரதனென்னும் வேந்தன் பின்னே சென்று, அமையா நெறிச்சென்று - பொருந்தாத வழியிலே போய், ஓர் ஆழ்ந்த சலமகளாய் - ஒப்பற்ற ஆழமுள்ள கங்கை என்னும் பெண்ணாய், எமை ஆளுடையான் - எங்களை யடிமைகொண்ட பரமனை, தலைமகனு(க) - கணவனாக, அணைந்து - கூடி, இருப்ப - (அவனது தலைமகளாக) இருக்கவும், உமையாள் - பார்வதி, அவள்கீழ் - அக்கங்கையின் கீழே, உறைவிடம் பெற்று - (அவனது இடப் பாகத்தில்) பொருந்துமிடத்தையடைந்து, உறைகின்றது - தங்கியிருப்பது, என்னே - என்ன வியப்பு, (இதற்குக்காரணம் யாதோ); (எ - று).

(வி - ரை.) இமையோர் - பிரமன் முதலாயினோர். இழித்திடல் - பகீரதனுக்காக இமையவர் கங்கையை இம்மண்ணுலகத்திற்கு விண்ணுலகத்தினின்றும் இறங்கிவரச்செய்தல். நீர்மை கெடல் - வேகங்குறைதல். அமையாநெறி - மேடுபள்ளமான வழி. அவள்கீழுறைவிடம்பெறல் - உமையாள், கங்கை சிவபெருமான் தலைமீதிருக்கவும் தான் அவள் கீழே அப்பெருமானது இடப் பாகத்தில் எழுந்தருளியிருத்தல். கங்கை தேவர்களாலிழித்துரைக்கப்பட, தன் பெண்தன்மைகெட்டுப்போக, ஒரு அரசன் பின்சென்று, தகாதவழியிற்போய், பெரிய வஞ்சகமுள்ளவளாய் இருந்துகொண்டு, சிவபெருமானைக் கணவனாக அடைந்திருக்கவும், சிறந்தவளாகிய உமாதேவி பராதீனத் தன்மையுள்ளவளாய், அக்கங்கைக் கடங்கி அவள்கீழ் இருக்குமிடத்தைப் பெற்று வாழ்வது அவ்வுமாதேவிக்கு மேன்மை தருவதாகாது என்பது இச் செய்யுளின் குறிப்புப் பொருளாம். சலமகள் - நீர் வடிவமாகிய பெண், வஞ்சகமுள்ள பெண்; சலம் - நீர், வஞ்சகம். அங்கு, ஓ, ஏ மூன்றும் அசை நிலைகளாம். இருப்பவும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்குநின்றது. உமாதேவி கங்கையின்கீழ் உறைவிடம் பெற்றிருப்பதன் காரணம் பரமன் கங்கையைத் தன் சடையில் ஏற்றுக்கொள்ளாவிட்டால், உலகம் அழிந்துபோமென்பதே யாம். இதனை,

"மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ"

என்று திருவாசகங் கூறுவதாலுமறிக.

'தலைமகனை' என்பதற்குப் பிரதியாகத் தலைமகளா என்றும் பாடமுண்டு; அதற்கு, (எமையாளுடையானது) தலையில் வசிக்கும் மனைவியாக என்பது பொருளாம். (71)

உறைகின் றனரைவ ரொன்பது வாயிலோர் மூன்றுள
தால், மறைகின்ற வென்பு நரம்போ டிறைச்சி யுதிரமச்சை,
பறைகின்ற தோல்போர் குரம்பை பயனிலைப் போயடைமின்,
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக் கொண்டோன் மல
ரடிக்கே. (எஉ)

(இ - ள்.) ஐவர் உறைகின்றனர் - (இவ்வுடம்பின்கண் இந்திரியங்களாகிய) ஐவர் வசிக்கின்றனர், ஒன்பது வாயில் - ஒன்பது வழிகளையும், ஓர் மூன்று - ஒப்பற்ற மூன்று பிணிகளையும், உளது - (இவ்வுடம்பு) பெற்றிருக்கின்றது, என்பு நரம்போடு இறைச்சி உதிரம் மச்சை - எலும்பும் நரம்பும் மாமிசமும் இரத்தமும் கொழுப்பும் (சுவேதநீரும் ஆகிய தாதுக்களெல்லாம்), மறைகின்ற(ன) - (இதனுள்ளே) மறைந்துகிடக்கின்றன, (இது), பறைகின்ற - (இழித்துச்) சொல்லப்படுகின்ற, தோல்போர் குரம்பை - தோலால் போர்க்கப்பட்ட சிறுகுடிசையாம், பயன் இல்லை-(மக்களே! உங்களுக்கு இதனால்) ஒரு பயனுமில்லையாம், (அதனால், நீங்கள்), அறைகின்ற - சப்திக்கின்ற, தெண்புனல் - தெளிவான நீரையுடைய கங்கையை, செம்மைசடை - சிவந்த நிறமுடைய சடையிலே, கொண்டோன்-கொண்டவனாகிய பரமனது, மலரடிக்கு - செந்தாமரை மலர்போன்ற பாதங்களை, போய் அடைமின் - (அடைக்கலமாகச்) சென்றடையுங்கள், (அடைந்தால், உங்களுக்குப் பயனுண்டு); (எ - று).

(வி - ரை.) ஐவர், மூன்று என்பன தொகைக் குறிப்புச் சொற்கள். ஆல் - அசை. மறைகின்ற என்பது அன்

சாரியை பெறாத பலவின்பால் வினைமுற்று; அன்சாரியை பெறின், மறைகின்றன எனவரும். நரம்போடு என்னும் ஒடு இசை நிறைத்தற்கண் வந்தது. மலரடிக்கு என்பது உருபு மயக்கமாம். ஒன்பது வாயில் - கண்ணிரண்டு, காதிரண்டு, மூக்கிரண்டு, வாய் ஒன்று, மலம்விடும் வழியொன்று, சலம் (மூத்திரம்) விடும் வழியொன்று என்பனவாம். மூன்றுபிணிகள் - வாதம், பித்தம், சிலேத்துமம் என்பனவாம். மூன்று என்பதற்கு, காமம், வெகுளி, மயக்கமென்னும் முக்குற்றங்கள் என்றும் பொருள் கூறலாம். பயன் - துக்கக்கேடும் சுகப்பேறுமாம். பரமனை நினையாது உடம்பையே போற்றி வருகின்றவர்க்கு அதனால் பயனுண்டாகா தென்பது இச்செய்யுளின் கருத்தாம்.

"பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய
பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படு
வேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
அத்த னண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே."

என்று மணிவாசகர் திருவாய்மலர்ந்தருளியிருப்பதும்,

"புழுப்பெய்த பண்டிதன்னைப் புறமொரு தோலால்மூடி
ஒழுக்கறா வொன்பதுவா யொற்றுமை யொன்றுமில்லை
சழக்குடை யிதனுள்ளவர் சங்கடம் பலவுஞ்செய்ய
அழிப்பனாய் வாழமாட்டே னாரூர்மூ லட்டனீரே"

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதும் இங்குணர்தற்பாலனவாம். (72)

அடிக்கண்ணிக் கைதொழு தார்க்ககன் ஞாலங் கொடுத்தடி நாய்,வடிக்கண்ணி நின்னைத் தொழவிளை கொண்டனை வண்டுண்

கொன்றைக், கடிக்கண்ணி. யாயெமக் கோரூ ரிரண்டகங் காட்டினையால், கொடிக்கண்ணி மேனல்ல கொல்லே றுயர்த்த குணக்குன் றமே. (எங)

(இ - ள்.) கண்ணி-கயிற்றால் (கட்டப்பட்ட), கொடிமேல்-கொடியின்மீது, நல்ல - சிறந்த, கொல் ஏறு - (பகைவரைக்) கொல்லுகிற ரிஷபவுருவத்தை (எழுதி), உயர்த்த- (அதனை) உயர்த்திய, குணக்குன்றமே - குணமலையே, வண்டு உண்-வண்டுகள் (தேனை) உண்ணுதற்கிடமாகிய, கடி - வாசனையமைந்த, கொன்றைக் கண்ணியாய் - கொன்றைமலர்மாலையை யுடையவனே ! (நீ), அடிக்கு அண்ணி-(உன்) திருவடிகளையடைந்து, கைதொழுதார்க்கு - கைகுவித்து வணங்கினவர்க்கு, அகல் ஞாலம் கொடுத்து - (இடம்) அகன்றவுலகத்தை (ஆளக்) கொடுத்து, அடிநாய் - கீழ்மையான நாயைப்போன்ற, வடிக்கண்ணி - (வடிவத்தால்) மாவடு வகிர்போலும் கண்களையுடைய இப்பெண், நின்னைத் தொழ - உன்னை (அடைக்கலமாக அடைந்து) வணங்க, வளைகொண்டனை - (இவளது கை) வளையல்களைக் கொண்டாய், எமக்கு - எங்களுக்கு, ஓர் ஊர் - ஓர் ஊரிலே, இரண்டகம் காட்டினை - (நம்பிக்கைத் துரோகம் என்னும்) வஞ்சனை (யைச்செய்து) காண்பித்தாய், (இஃது உனக்கு நியாயமாகாது); (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. அடிக்கு என்னும் நான்கனுருபு அடியை என இரண்டனுருபின் பொருளில் வந்தது. இரண்டகஞ் செய்தலாவது ஒருவர் தாம் சமமாக நடந்து கொள்ளத்தக்கவருள், ஒருவரிடத் தொருவாறாகவும் மற்றொருவரிடத்து மற்றொருவாறாகவும் நடத்தலாம். குறைவிலா நிறைவாயுள்ள பரமனுக்குச் சலித்தல் உண்மையில் என்றும் இன்றும்; அதனால், அவன் அசலனும்; அதனால், குணக்குன்றமே என்று

கூறப்பட்டானென்க. அசலம் - மலை. குணக்குன்றம் என்பது உருவகமாம். இறைவன் தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல் முதலிய குணங்களால் மலைபோலத் தோற்றப் பொலிவுள்ளவனாயிருத்தலின், அவன் குணக்குன்றம் என்று கூறப்பட்டானென்றும் கூறலாம். தோற்றப் பொலிவு - கம்பீரம். (73)

குன்றெடுத் தான்செவி கண்வாய் சிரங்க ணெரிந்தலற
அன்றடர்த் தற்றுகச் செற்றவ னற்றவர்க் காரமுதன்
மன்றிடைத் தோன்றிய நெல்லிக் கனிநிற்ப மானுடர்பொய்
ஒன்றெடுத் தோதிப் புகுவர் நரகத் துறுகுழியே. (எச)

(இ - ள்.) குன்று எடுத்தான் - கைலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இராவணன், செவி கண் வாய் சிரங்கள் - (தனது) காதுகளும் கண்களும் வாய்களும் தலைகளும், நெரிந்து அலற - நசுங்கிக் கதறியழ, அன்று - அக்காலத்திலே, அற்று உக - (அவன் தனது வலிமை) கெட்டழிய, அடர்த்துச் செற்றவன் - (அவனை) நெருக்கி வருத்தியவன், நல் தவர்க்கு - சிறந்த தவமுடையவர்க்கு, ஆர் அமுதன் - உண்ணுதற்குரிய அமுதம் போன்றவன், மன்றிடைத் தோன்றிய - பொன்னம்பலத்திலே விளங்குகின்ற, நெல்லிக்கனி - கருநெல்லிக்கனி போல்பவன், நிற்ப - (யாவர்க்கும் வரையாது அருள் செய்பவனாய்) இருக்க, மானுடர் - மனிதர்கள், பொய் - பொய்ம்மொழிகளை, ஒன்ற எடுத்து ஓதி - (யுத்தியோடு) பொருந்த எடுத்துக் கூறி (அதனால்), நரகத்து உறுகுழியே புகுவர் - நரகத்திலுள்ள பெரிய பள்ளத்திலேயே விழுந்து வருந்துகின்றனர், (இவர்களது அறியாமை இருந்தவா றென்னே !); (எ - று).

(வி - ரை.) ஆரமுதன் என்பதற்கு, கிடைத்தற்கரிய அமுதம் போன்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். நற்றவர்க்

காரமுதன் என்னும் பாடத்திற்குப்பிரதியாக அற்றவர்க்கற்ற சிவன் என்றும் பாடபேதம் காணப்படுகின்றது; அதற்கு, (யானெனதென்னுஞ் செருக்கு) அற்றவர்க்கே (உரியவனென்று) வரையறுக்கப்பட்ட சிவனென்பது பொருளாம். இப்பொருளில் அற்ற என்பது செயப்பாட்டுவினைப் பொருளில்வந்த செய்வினையாம். அமுதமும் கருநெல்லிக்கனியும், தம்மையுண்டவரது பிணி மூப்புக்களை யொழித்து அவர்க்கு நீண்ட வாழ்நாளைத் தந்து நன்மை புரிதலின், அவை சிவபெருமானுக்கு உவமானப் பொருள்களாயின. இறைவன் பொன்னம்பலத்திலே யாவர்க்கும் அனுக்கிரகஞ் செய்தற்பொருட்டெழுந்தருளியிருக்கவும், மக்கள் அறியாமையால், கடவுட்டன்மை யில்லாதவரைக் கடவுட்டன்மை யுடையரென்று தீர்மானித்து, அதுகாரணமாக, பொய்ம்மொழி புகன்று, அது காரணமாக நரகமடைகின்றனர் என்பது இச்செய்யுளின் கருத்தாம். நெல்லிக்கனி உள்ளங்கையிலே ஐயந்திரிபின்றிப் பிரத்தியட்சமாக விளங்குதல்போல, பரமன் பொன்னம்பலத்திலே ஐயந்திரிபின்றிப் பிரத்தியட்சமாக விளங்குகின்றா னென்பதும் இங்குணர்தற்பாற்றும். ஒன்ற என்பதன் அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. செற்றவன், அமுதன், நெல்லிக்கனி என்பன ஒருபொருள்மேல் வந்த பலபெயர்களாம்.

“பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யனைச்சுடர் வெண்மழு வேந்திய
கையனைக்கச்சி யேகம்ப மேவிய
ஐயனைத்தொழு வார்க்கில்லை யல்லலே”

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதும்,

"செறிபொழில் நிலவு தி(ல்)லையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி யருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே"

என்று பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதும்,

"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே"

என்று தாயுமானசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதும் இங்குணர்தற்பாலனவாம்.

பொய் என்பதற்குப் பிரதியாகப் போய் என்றும் பாடமுண்டு; அதற்கு, (கயவரிடத்துச்) சென்று, (இரப்புரையை) என்பது பொருளாம். (74)

குழிகட் கொடுநடைக் கூன்பற் கவட்டடி நெட்டிடையூன் [த்
உழுவைத் தழைசெவித் தோன்முலைச் சூறைமயிர்ப்பகுவாய்
தெழிகட் டிரைகுரற் றேம்பல் வயிற்றுத் திருக்குவிரல்
கழுதுக் குறைவிடம் போற்கண்ட ணுடுங் கடியரங்கே. (எரு)

(இ - ள்.) கண்டன் - நீலகண்டத்தை யுடைய பரமன், ஆடும் - நடனம் செய்கின்ற, கடியரங்கு - சிறந்த நடனசாலையானது, குழிகண் - ஆழமாகிய கண்ணும், கொடுநடை - விரைவாகிய நடையும், கூன்பல் - வளைவாகிய பல்லும், கவடு அடி - பிளப்பாகிய பாதமும், நெடு இடை - நீளமாகிய இடுப்பும், ஊன் உழுவை-மாமிசத்தையுண்ணும்புலியினது (செவிபோன்ற), தழைசெவி - தழைத்த செவியும், தோல்முலை - (மாமிசம்வற்றிய) தோல்முலையும், சூறை மயிர் - சுருளுதலாகிய மயிரும், பகுவாய் - பிளப்பாகிய வாயும், கட்டு - மிகுதியும், தெழி இரை - அதட்டிக் கூவுகின்ற, குரல் - குரலும், தேம்பல் வயிறு -

வாடிய தாகிய வயிறும், திருக்குவிரல் - முறுக்காகிய விரல்களும் (உடைய), கழுதுக்கு - பேய்களுக்கு, உறைவிடம் - வசிக்கும் இடமாம்; (எ - று).

(வி - ரை.) போல் - ஒப்பில் போலி. அரங்கு உறைவிடம் என் றன்வயஞ்செய்து கொள்க. குழி - ஆழம்; கொடுமை - விரைவு; கூன் - வளைவு; கவடு - பிளப்பு; சூறை - சுருளுதல்; தேம்பல் - வாடுதல்; திருக்கு - முறுக்கு; தோல்முலை - மாமிசம் வற்றி வெறுந்தோலாகத் தொங்கும்முலை. இச்செய்யுள் பேயின் தன்மையைக் கூறினமையின், தன்மை நவிற்சி யணியாம். பேயின்றன்மையை விரிவாக வறிய விரும்புவோர், அதனைக் காரைக்காலம்மையார் திருவாய்மலர்ந்தருளியுள்ள திருவாலங் காட்டு மூத்ததிருப்பதிகத்துள் காண்க. அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, கலிங்கத்துப்பரணி என்பனவற்றுள்ளும் பேயின்தன்மையை விரிவாயறியலாம். (75)

அரங்கா மணியன்றி றென்றலோர் கூற்ற மதியமந்தீ
சரங்காம னெய்யஞ்சு சந்துட் பகைபா லிவடளர்ந்தாள்
இரங்கா மனத்தவ ரில்லை யிரங்கா னிமையவர்தம் [கே.
சிரங்கா முறுவா னெலும்புகொள் வானென்றன் றேமொழிக்

(இ - ள்.) காமன் - மன்மதன், அஞ்சுசரம் - ஐந்துவித மான மலரம்புகளை, எய் - (தம் நாயகரைப் பிரிந்துள்ள மங்கையர்மீது) எய்தற்குரிய, சந்துள் - மாலைக்காலத்தில், கா - சோலையிலுள்ள, மணி - அழகுடைய, அன்றில் - அன்றிற் பறவையானது, அரம் - (இப்பெண்ணினுயிராகிய இரும்பை அராவுதற்குரிய) அரமாம், தென்றல் - தென்றற்காற்ருனது, ஓர் கூற்றம் - (இவளுயிரைக் கொள்ளுதற்குரிய) ஒப்பற்ற எமனும், மதியம் - சந்திரன், அம்தீ - (இவளைச் சுடுதற்குரிய)

பெருந்தீயாம், பகையால் - இப்பகைப் பொருள்களால், இவள் தளர்ந்தாள் - இப்பெண் தளர்ச்சியடைந்தாள், இரங்காமனத் தவர் இல்லை - (இவள் விஷயத்தில்) மனம் இரங்காதவர் (இவ் வூரில் ஒருவரும்) இல்லை, (ஆயினும்), இமையவர்தம் - தேவர்க ளது, சிரம் காமுறுவான் - தலைகளை (மாலைகளாகத் தரிக்க) விரும்புகின்றவனாய், எலும்பு கொள்வான் - எலும்பு மாலையைத் தரிக்கும் பரமன், என்தன் தே(ன்) மொழிக்கு - எனது தேன் போலும் (இனிய) சொற்களையுடைய இப்பெண்ணுக்கு, இரங் கான் - (சிறிதும் மனம்) இரங்காதவனா யிருக்கின்றான், (இஃ தென்னகொடுமை) ; (எ - று).

(வி - ரை.) இது செவிலி கூற்றும். சிரங்கா முறுவான் என்னும் வினைமுற்று இங்கு வினையெச்சப் பொருளில் வந்தது ; இவ்வாறு வருவது முற்றெச்ச மெனப்படும். அன்றில் அரமாம்; தென்றல் கூற்றமாம்; மதி தீயாம் என்று இச்செய்யுள் பொருந்து மாறு கூறினமையின், இயைபுருவகவணியாம். தென்றல் - தெற்கிலிருந்துவரும் காற்று. தேமொழி யென்பது உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயராம். இமையவரென்றது இங்கு அரியையும் அயனையும்.

"முத்துங் களபமுந் தண்பனி நீரு முயங்குமலர்த்
தொத்துங் குளிரியுந் தூய்மலர்ப் பாயலுஞ் சூழ்ந்துபுறம்
கத்துங் கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப்
பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந்தொ[டிக்கே"

"தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங் கோகிலத்துக்
கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கும்—நின்றரத்தும்
அன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே
என்னைக் குமாரற் கியம்பு"

என்று உவமானசங்கிரகம் கூறுவது இங்குணர்தற் குரியதாம்.

மொழியக்கண் டான்பழி மூளக்கண் டான்பிணி முன்கைச்சங்கம், அழியக்கண் டானன்றி லீரக்கண் டான்றென்றலென்னுயிர்மேல், சுழியக்கண் டான்றுயர் கூரக்கண் டான்றுகில் சூழ்கலையும், கழியக்கண் டான்றில்லைக் கண்ணுத லான் கண்ட கள்ளங்களே. (எஎ)

(இ - ள்.) தில்லைக் கண்ணுதலான் - தில்லையம்பலத்தின் கண் ஆநந்தத்தாண்டவஞ் செய்யும் பரமன், பழி மொழியக்கண்டான்-(என்னைப் பிறர்) பழிமொழி கூறிப் பழிக்கச் செய்தான், பிணி மூளக் கண்டான் - (எனக்குக்) காமநோய் அதிகரிக்கச் செய்தான், முன்கைச் சங்கம் அழியக் கண்டான் - (யான்)முன் கைகளில் அணிந்திருந்த சங்குவளையல்களைக் கழலும்படிசெய்தான், அன்றில் ஈரக்கண்டான் - அன்றிற் பறவை (என்னுயிரைப்) பிளக்கச் செய்தான், தென்றல் - தென்றற்காற்று, என் உயிர்மேல் - எனது உயிரின்மீது, சுழியக் கண்டான் - சுழித்தோடச் செய்தான், துயர் கூரக்கண்டான் - (அவற்றால், எனக்குத்) துன்பம் மிகுதியாம்படி செய்தான், துகில் - ஆடையையும், சூழ்மேகலையும் - (அதனைச்) சூழ்ந்துள்ள மேகலாபரணத்தையும், கழியக்கண்டான் - (என்னுடம்பினின்றும்) நீங்கும்படி செய்தான், (இவை), கண்ட - (அவன் எனக்குச்) செய்த, கள்ளங்கள் - வஞ்சகச்செயல்களாம்; (எ - று).

(வி - ரை.) இது தலைவி கூற்று. இது காமமிக்க கழிபடர் கிளவியாம்; இதன் பொருள் "வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லும் சொல்" என்பதாம். அன்றில் ஈர்தலாவது அன்றிற்பறவை தன்னிசையால் காமநோய் மிக்கு வருந்துகின்றவரை வருத்துதலாம். கண்டான் கண்டான் என்பன இங்குச் செய்தான் செய்தான் என்னும் பொருளில் வந்தன. இச்செய்

யுள் சொற்பொருட்பின் வருநிலையணியாம். சுழித்தோடல் - கோபித்தோடல். கண்ணுதலான் என்பதன்பொருள் கண்ணை நெற்றியிலுடையவன்; அஃதாவது நெற்றியில் கண்ணையுடையவ னென்பதாம். (77)

கள்ள வளாகங் கடிந்தடி மைப்படக் கற்றவர்தம்
உள்ள வளாகத் துறுகின்ற வுத்தம னீண்முடிமேல்
வெள்ள வளாகத்து வெண்ணுரை சூடி வியன்பிறையைக்
கொள்ள வளாய்கின்ற பாம்பொன் றுளது குறிக்கொண்மினே.

(இ - ள்.) கள்ளம் - வஞ்சகக்குணத்தால், வளம்-செழிப்ப தான, ஆகம் - தேகாபிமானத்தை, கடிந்து - ஒழித்து, அடி மைப்பட - (தனக்கு) அடிமைப்படும்படி, கற்றவர்தம் உள்ளம் - (ஞான சாஸ்திரங்களைத் தக்காரிடத்துக் கற்கத்தக்கவாறு) கற்றவரது மனமாகிய, வளாகத்து - கோயிலின்கண்ணே, உறு கின்ற உத்தமன் - பொருந்தியிருக்கின்ற பரமனது, நீள் முடி மேல் - நீண்ட சடையின்மீது, வெள்ள வளாகத்து - வெள்ளப் பெருக்கத்தினது, வெண்மை நுரை சூடி - வெண்மையாகிய நுரையைத் தரித்து, வியன்பிறையை - (அங்கிருக்கின்ற) சிறந்த பிறைச் சந்திரனை, கொள்ள - பற்றிவிழுங்க, வளாய்கின்ற - வளைகின்ற, பாம்பு ஒன்று உளது - பாம்பு ஒன்று இருக்கின்றது, குறிக்கொண்மின் - (தொண்டர்களே! அதனை நீங்கள்) ஆராய்ந் தறிந்து கொள்ளுங்கள்; (எ - று).

(வி - ரை.) உத்தமன் என்பதன் பொருள் மேன்மை யுடையவன்; அஃதாவது இயல்பாகவே அஞ்ஞான விருளைக் கடந்து உயர்வாகவிருப்பவன் என்பதாம். கள்ளவளாகம் என் பதைக் கள்ளம் வளம் ஆகம் எனப் பதப்பிரிவு செய்துகொள்க; வளம் என்பது கடைக்குறையாய் வள் என வந்தது. பாம்பு

வெண்ணுரை சூடுதலாவது அது சடாமகுடத்துள்ள கங்கையிற் படிந்துசெல்லும்போது அக்கங்கையின் நுரை அதன்மீது படிதலாம். ஆகம் - பொருளாகுபெயர். சூடி வியன்பிறையை என்பதற்குப் பிரதியாகச் சூடிய வெண்பிறையை என்றும் பாடமுண்டு; அதற்கு, தரித்த வெண்மையாகிய பிறைச்சந்திரனை என்பது பொருளாம்.

தொண்டர்களே! நீங்கள் சடையின்மீது அரவுள்ளவனே நம்மையாளும் பரமனுவான்; நமக்குப் புகலிடமாயிருப்பவனவனே யென்பதை யாராய்ந்தறிந்து உய்யுநெறி தேடுங்களென்பது இச்செய்யுளின் கருத்தாம். (78)

குறிக்கொண் டிவள்பெய்த கோல்வளை யேவந்து கோளிழைத்தீர், வெறிக்கொண்ட வெள்ளிலம் போதோ வெலும்போ விரிசடைமேல், உறைக்கொன்றை யோவுடைத் தோலோ பொடியோ வுடைகலனே, கறைக்கண்ட ரேநுமக் கென்னே சிறுமி கடவியதே. (எகூ)

(இ - ள்.) கறைக்கண்டரே - விஷம் பொருந்திய கண்டத்தை யுடையவரே, (நீவிர்), இவள் பெய்த கோல்வளையே - இப் பெண் அணிந்துள்ள புள்ளிபொருந்திய வளையல்களையே, குறிக்கொண்டு வந்து - (அபகரிக்க) எண்ணிக்கொண்டு வந்து, கோள் இழைத்தீர் - (அவற்றைக்) கொள்ளுதலைச் செய்தீர், நுமக்கு - உம்மை, சிறுமி - இச்சிறுபெண், கடவியது - கேட்டது, வெறிகொண்ட - வாசனை பொருந்திய, வெள்ளில் அம் போதோ - விளா மரத்தினது அழகிய புஷ்பமாலையையோ, எலும்போ - எலும்பு மாலையையோ, விரிசடைமேல் உறை கொன்றையோ - விரிந்திருக்கும் சடையின்மீது பொருந்தியுள்ள கொன்றைமலர் மாலையையோ, உடைத்தோலோ - தோலாடை

யையோ, பொடியோ - விபூதியையோ, உடைகலனோ - பிரம கபாலத்தையோ, என்னே - (வேறு) எதனையோ, (எனக்கு அதனைக் கூறுவீராக); (எ - று).

(வி - ரை.) இது செவிலி கூற்று; தோழி கூற்றுமாம். நுமக்கு வேற்றுமை மயக்கம். உடைத்தோல் என்பதன்பொருள் உடையாகிய தோல், அல்லது (உமக்கு ஆடையாக) உடைய தோல் என்பதாம். உறை கொன்றை என்பது எதுகை நோக்கி வல்லொற்றுமிக்கு உறைக்கொன்றை என வந்தது. கோள் என்பது முதனிலை திரிந்துவந்த தொழிற்பெயராம். பரமரே! நீர் இச்சிறுமி உம்மை எது கேட்டதற்காக, இவளது வளையல்களைக் கவர்ந்து கொண்டீர்; அதனை எனக்குக் கூறல் வேண்டுமென இறைவனை நோக்கிச் செவிலி அல்லது தோழி கூறினளென்பது இச்செய்யுளின் கருத்தாம். உடைகலன் - சிதைவுற்ற பாத்திரம். இச்செய்யுள் ஐயவணியாம். (79)

கடவிய தொன்றில்லை யாயினுங் கேண்மின்கள் காரிகையாள்
மடவிய வாறுகண் டாம்பிறை வார்சடை யெந்தைவந்தால்
கிடவிய நெஞ்ச மிடங்கொடுத் தாட்கவ லங்கொடுத்தான்
தடவிய கொம்பதன் றுண்மே விருந்து தறிக்குறுமே. (அ0)

(இ - ள்.) கடவியது - (தோழிகளே! நாம் இவள் விஷயமாக) வினவத்தக்கது, ஒன்றில்லை-ஒன்றுமில்லையாம், ஆயினும்-ஆனாலும், கேண்மின்கள் - (யான் கூறுவதை நீங்கள்) கேளுங்கள், பிறை - பிறைச் சந்திரனை (யணிந்த), வார்சடை - நீண்ட சடையையுடைய, எந்தை வந்தால் - எமது சுவாமி வர (அவனுக்கு), கிடவிய - (அன்பு) பொருந்த, நெஞ்சம் - (தன்) மனத்தை, இடம் கொடுத்தாட்கு - இடமாகக் கொடுத்த இவளுக்கு, அவலம் கொடுத்தான் - (அவன்) துன்பத்தைக்கொடுத்

தான், (இச்செயலால் அவன்), தடவிய-பெரிய, கொம்பதன்மே லிருந்து - (மரத்தின்) கொம்பின்மீதிருந்து, தாள் தறிக்குறும் - (அதனது)அடியை வெட்டுகிறவனு யிருக்கின்றான், (இத்தகையானுக்குத் தன்மனத்தை இடமாகக் கொடுத்தவாற்றால்), காரிகையாள் - இப்பெண், மடவியவாறு - மடமைத்தன்மை யடைந்த விதத்தை, கண்டாம் - (நாம்) அறிந்தோம்; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. வந்தாலென்பது வர என்பதன் திரிபாம். இடவிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தான் வசிக்குமாறு தன் மனத்தைத்தனக்கு இடமாகக் கொடுத்தவளுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் இறைவனது செயல் நுனிமரத்தில் நின்றுகொண்டு அடிமரத்தை வெட்டுவார் செயலொத்திருக்கின்றது; இவ்வாறு செய்கின்றவனுக்குத் தன்மனத்தை இடமாகக்கொடுத்த இவள் பெரும் பேதையா யிருத்தல்வேண்டும் என்பது இச்செய்யுளின் கருத்தாம். 'இடவிய நெஞ்ச மிடங்கொடுத் தாட்கவ லங்கொடுத்தான்' என்றமையின், இச்செய்யுள் மாற்றுநிலை யணியாம். மடமைத் தன்மை - அறிவில்லாமை. (80)

தறித்தா யயன்றலை சாய்த்தாய் சலந்தர னைத்தழலாப்
பொறித்தா யனங்கனைச் சுட்டாய் புரம்புன லுஞ்சடைமேல்
செறித்தாய்க் கிவைபுக ழாகின்ற கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க் கிதுபழி யாகுங்கொ லாமென்று பாவிப்பனே. ()

(இ - ள்.) அயன்தலை தறித்தாய் - (பரமனே! நீ) பிரமனது தலையைக் கிள்ளினாய், சலந்தரனை சாய்த்தாய் - சலந்தராசுரனைக் கொன்றாய், அனங்கனை-மன்மதனை, தழலா(க)பொறித்தாய் - சாம்பராகும்படி எரித்தாய், புரம்சுட்டாய் - திரிபுரத்தை எரித்தாய், புனலும் - (பிறை, அரவு, தலைமாலை, கொக்கிறகு,

கொன்றைமலர்மாலை முதலியவற்றையேயன்றிக்) கங்கையையும், சடைமேல் - சடையின் மீது, (தரித்திருக்கின்றாய்), செறித் தாய்க்கு - (இவற்றைத்) தரித்துள்ள உனக்கு, இவை புகழா கின்ற(ன) - இவை புகழைத் தருகின்றனவாம், கண்டு - (இச் செயல்கள் புகழ்தருவனவாயிருத்தலைப்) பார்த்து, இவள் சில்வளை யும் - இவளது சில வளையல்களையும், (கிரகித்துக் கொண்டாய்), பறித்தாய்க்கு - (இவ்வளையல்களையும்) கிரகித்துக்கொண்ட உனக்கு, இதுபழியாகும் என்று பாவிப்பன் - இச்செயல் பழியைத் தருவதாம் என்று (நான்) கருதுவேன்; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. செறித்தாய்க்கு, பறித் தாய்க்கு என்பன வினையாலணையும் பெயர்களாம். ஆகின்ற என் பது அன்சாரியை பெறாத நிகழ்கால வினைமுற்று. கொல், ஆம் என்பன அசை நிலைகள். இறைவனுக்கு அயன்தலை தறித்தல் முதலியன புகழைத் தருவனவாம்; இவள் வளையல்களைப்பறித் துக் கொண்டமையோ இகழைத்தருவதா மென்பது இச்செய்யு ளின் கருத்தாம். அயன், சலந்தரன், அனங்கனென்பனவற்றின் பொருள் முறையே திருமாலிடத்துப் பிறந்தவன், சலத்திற் பிறந்தவன், அங்கமில்லாதவ னென்பதாம். அயன் என்பதி லுள்ள அ என்பது திருமாலை யுணர்த்தும் ஓரெழுத்தொரு மொழியாம்; அங்கம் - உடம்பு. (81)

பாவிக்கும் பண்டைய எல்லள் பரிசறி யாள்சிறுமி
ஆவிக்குங் குற்குலு நாறு மகரெக வங்கமெங்கும் [ணில்
காவிக்கண் சோரும்பொச் சாப்புங் கறைமிடற் றுனைக்கண்
தாவிக்கும் வெண்ணகையா ளம்மெல்லோதிக்குச்சந்தித்தவே.

(இ - ள்.) சிறுமி - இச்சிறுபெண், பாவிக்கும் - (தானறி யும் பொருள்களுள் எதனையும் இது தக்கது இது தகாதது என்று)

எண்ணியறியும், பண்டையள் அல்லள் - பழமையானவள் அல்லள் (இப்பொழுது முன்னிலைமையுடையவளென்று நினைக்கத் தக்கவள் அல்லள்), பரிசு அறியாள் - (இறைவனது) தன்மையை அறியமாட்டாள், ஆவிக்கும் - (இறைவன் தன்மீது இரக்கமுற்று வாராமை பற்றிக்) கொட்டாவிவிடுகின்றாள், அகம் நெக - மனம் கசிய, அங்கம் எங்கும் - சரீரமெங்கும், குற்குலு நாறும் - குங்கிலிய மணம் வீசப்பெற்றிருக்கின்றாள், காவிக்கண் - (கருமை நிறத்தாலும் குளிர்ச்சியாலும்) கருங்குவளைமலரை யொத்த கண்கள், சோரும் - (நீர்பெருகச்) சோர்வடைந்திருக்கின்றாள், பொச்சாப்பும் - (தன்னை) மறந்திருக்கின்றாள், கறைமிடற்றானை - விஷம்பொருந்திய கண்டத்தையுடைய பரமனை, கண்ணில் தாவிக்கும் - (தனது) கண்களிலேயே நிலைபெறச் செய்கின்றாள், வெண்ணகையாள் - வெள்ளிய நகையையுடையவள் (ஆகிய), அம்மெல் ஓதிக்கு - அழகிய மெல்லிய கூந்தலையுடைய இவளுக்கு, சந்தித்த(ன) - (இவை) உண்டாயின; (எ - று).

(வி - ரை.) இது தோழி கூற்று. காம வேட்கையுடைய மங்கையருடம்பு தமது கணவர் தம்மிடத்து வந்து கூடிக் குலவாத காலத்து, குங்கிலிய மணமுடையதாகத் தோன்றுமென்பது இங்குணர்தற் பாலதாம். ஆவித்தல், அங்கமெங்கும் குற்குலுநாறல், கண்சோர்தல், பொச்சாப்பு, கறைமிடற்றானைக் கண்ணில் தாவித்தல் என்பன பரமன்வந் தருள்செய்யாமையால், தலைமகளுக்குண்டாயின வென்பது இச்செய்யுளின் கருத்தாம். வெண்ணகை - வெண்மையாகியபல்.

"கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்"

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாங் கறிந்து"

என்னுங் குறள்களின் கருத்து ‘கறைமிடற்றானைக் கண்ணில் தாவிக்கும்’ என்பதன்கண் அமைந்திருத்தலறிக. (82)

சந்தித்த கூற்றுக்குக் கூற்ரும் பிணிக்குத் தனிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணியாகித் தித்தித் தமுதமுமாம்
வந்திக்கின் வந்தென்னை மால்செய்யும் வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ணாடியி னனடி யார்களுக் காவனவே. (அ௩)

(இ - ள்.) வானோர் வணங்க நின்று - (இந்திரன் முதலிய) தேவர்கள் வணங்க (அவரெதிரே) நின்று, அ அந்திக்கண் ஆடியினன் - அந்தப் பிரதோஷ காலத்திலே நடனம் செய்கின்ற பரமன், அடியார்களுக்கு - (தன்) அடியவர்களுக்கு, ஆவனவே - (நன்மை) ஆவனவற்றையே (செய்பவன்), சந்தித்த கூற்றுக்கு - (தன்னடியார்களை) எதிர்த்த யமனைக் கொல்லுதற்கு, கூற்ரும் - யமனவன், பிணிக்கு - (அவர்களடைந்துள்ள) பிணிகளை நீக்குதற்கு, தனி மருந்தாம் - ஒப்பற்ற மருந்தாவன், சிந்திக்கின் - (அவர்கள் ஒருபொருளையடையச்) சிந்தனை செய்தால், சிந்தாமணியாகி - (அப்போது அதனை அவர்தமக்குக் கொடுத்தற்குச்) சிந்தாமணி போன்று (இருந்து), தித்தித்த அமுதமும் ஆம் - (அவர்களுக்கு) இனிக்கின்ற அமுதமுமாக விளங்குகின்றவன், (இங்ஙனம் அவன் தன் அடியார்களுக்கு நன்மை ஆவனவற்றையே செய்பவனாயினும்), வந்திக்கின் - (நான் தன்னை) வணங்கினால், வந்து - (என்னிடத்திற்கு) வந்து, என்னை மால் செய்யும் - என்னை மயக்குகின்றான், (இங்ஙனம் அவன் என்னிடத்திற்கு வந்து எனக்கு நன்மை ஆகாதனவற்றைச் செய்கின்றமைக்குக் காரணம் என்னோ? அதனை யான் அறியேன்) ; (எ - று).

(வி - ரை.) இது தலைவி கூற்று. செய்பவன் என்பது சொல்லெச்சமாம். கூற்றுக்கு, பிணிக்கு என்னும் நான்கனுருபுகள் பகைப்பொருளில் வந்தன. சிந்தாமணி சுவர்க்கலோகத்திலுள்ள மணிகளுள் ஒன்று; அது தன்னையடுத்தவர் எதனை நினைப்பினும் அதனை அவர்க்குத் தருவதாம். ஆடினன் என்பது ஆடியினன் எனத்திரிந்து வந்தது. தன் அன்பர் யாவர்க்கும் நல்லனவற்றையே செய்யும் பரமன், தன்னடியவளாகிய எனக்குத் தீயனவற்றைச் செய்கின்றனனே என்று தலைமகள் வருந்திக் கூறினளென்பது இச்செய்யுளின் கருத்தாம். தித்தித்த என்பதன் அகரவீறு தொக்குநின்றது. அந்தி - மாலைக்காலம். பிரதோஷகாலம் சனிக்கிழமையன்று வருமாயின் மிகச் சிறப்புடையதாம். பிரதோஷ காலமாவது ஒவ்வொரு திரயோதசி திதியிலும் சூரியன் அஸ்தமிக்குமுன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி, அஸ்தமித்து மூன்றேமுக்கால் நாழிகை பரியந்தமுள்ள காலமாம்.

"பொங்குகங் காதரன் காளமயின் றேயொன்றும்
 புகலாம விருந்தனனோர் கணப்பொழுது புலவோர்
அங்கவனை யிடைவிடா தருச்சனைமுன் புரிந்தார்
 அத்திதியே காதசியா மடுத்ததிதி யதனில்
புங்கவர்பா ரணம்புசித்தே பூர்த்தியுற்ற ரதன்மேல்
 பொருந்துதிதி தனிலிமவான் பொற்கொடியை வைத்தே
சங்கரன்சூ லஞ்சுழற்றி நடித்தனனோர் யாமம்
 சதுர்மறைநூ லதுபிரதோ டம்மெனவே சாற்றும்"

என்று ஆகமத்திரட்டுச் செய்யுள் கூறுவதால்; பிரதோஷ காலத்தில் இறைவன் நடனஞ் செய்ததன் காரணம் விளங்குவதாம்.

ஆவன யாரே யழிக்கவல் லாரமை யாவுலகில்
போவன யாரே பொதியகிற் பார்புர மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத் திருந்தடி கைதொழுது
தீவினை யேனிழந் தேன்கலை யோடு செறிவளையே. (அச)

(இ - ள்.) அமையா(த) உலகில் - நிலைபெறுதலில்லாத உலகத்திலே, ஆவன - (ஒருவர்க்கு) வரத்தக்கனவற்றை, அழிக்கவல்லார் யார் - ஒழிக்கவல்லவர் யாவர் (ஒருவருமில்லை), போவன - போகத்தக்கனவற்றை, பொதியகிற்பார் யார் - (போகாது) நிலைபெறச்செய்யவல்லவர் யாவர் (ஒருவருமில்லை), தீவினையேன் - தீவினையையுடையயான், புரமூன்றெரித்த - புரமூன்றையும் எரித்தழித்த, தேவனை-(தேவ) தேவனை, தில்லைச் சிவனை - தில்லையம்பலத்தின்கண் ஆநந்தத் தாண்டவஞ் செய்யும் சிவபெருமானை, திருந்த - (என்மனம்) திருந்துமாறு, அடி - (அவனது) திருவடிகளை, கைதொழுது - (என்) கை (குவித்து) வணங்கி, கலையோடு - (இடையிற்கட்டியுள்ள) ஆடையுடனே, செறிவளை - (கைகளில் தரித்துள்ள) நெருங்கிய வளையல்களையும், இழந்தேன் - இழந்துவிட்டேன், (என்வினையின் பயன் நன்றாயிருக்கின்றது) ; (எ - று).

(வி - ரை.) இது தலைவி தான் செய்யும் நல்வினை தனக்கு இன்பந்தருவதாகாது துன்பந் தருவதுபற்றி வருந்தி, தன் தோழியோடு கூறிய கூற்றாம்.

“ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்”

என்று நல்வழி கூறுவது இச்செய்யுளின் முதலடியையும் இரண்டாமடியையும் பெரும்பான்மையு மொத்திருத்தலறிக. திருந்த என்பதன் ஈற்றகரமும் வளையும் என்னும் இறந்தது தழீஇய வெச்சவும்மையும் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றன. ஆவன, போவன என்பன வினையாலணையும் பெயர்களாம். பொதியகிற்பார் என்னும் பதத்திலுள்ள கில் என்பது அப்பதப் பொருளின் ஆற்றலையுணர்த்தும் இடைநிலை யிடைச்சொல்லாம். புரமூன்று - திரிபுரம். யாரே, யாரே என்னும் ஏகாரமிரண்டும் அசைநிலைகளாம். ஒருவர் செய்யும் வினை அவர்க்குச் செய்த அப்போதே தன்பயனைத்தருவதில்லை; தன் பயனைத் தருவதற்குரிய காலத்திலேயே தருவதாகின்றது; அதனால், நல்வினை செய்பவர்க்குத் துன்பம் வருமாயின், அஃது அவர் அப்போது செய்தநல்வினையின் பயனன்றாம்; அவர் அந்நல்வினை செய்வதற்குமுன் செய்த தீவினையின் பயனும்; அதனைத் தடுப்பது எவர்க்கும் எவ்வகையாலும் முடியாது என்னும் முடிபினை இச்செய்யுள் விளக்குவது நன்குணர்தற்பாலதாம். (84)

செறிவளை யாய்நீ விரையல் குலநலங் கல்விமெய்யாம்
இறையவன் றாமரைச்சேவடிப்போதென்றெல்லோருமேத்து
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று வேண்டிய நீசர்தப்பால்
கறைவளர் கண்டனைக் காணப் பெரிதுங் கலங்கியதே. (அரு)

(இ-ள்.) குலம் நலம் கல்வி மெய் - நற்குடிப்பிறப்பு ஈகைக்குணம் கல்வி உண்மை யுரைத்தல் (என்னுமிவை யெல்லாம்), எல்லோரும் ஏத்தும் - (நல்லார்) எல்லாரும் துதிக்கின்ற, இறையவன் சேவடித் தாமரைப் போது ஆம் என்று - (இந்திரன் முதலிய இமையவர் யாவர்க்கும்) தலைவனாகிய பரமனது சிவந்த திருவடித் தாமரை மலர்களாமென்று கருதி

(அவற்றை), நிறையுடை நெஞ்சிது-(எனது) நிறையுள்ள மனமாகிய இது, வேண்டிற்று - விரும்பியது (ஆயினும் அது), வேண்டிய நீசர் தம்மால் - (தன்னை) விரும்புகின்ற நீசரிடத்தும் (இருந்து அவர் தமக்கு அருள்புரிகின்ற), கறைவளர் கண்டனை- விஷம்பொருந்திய கண்டத்தை யுடைய பரமனை, காண - பார்க்க, பெரிதும் கலங்கியது - மிகவுங் கலங்கியது, (ஆதலின்), செறிவளையாய் - நெருங்கிய வளையல்களை யுடைய தோழியே, நீ விரையல் - நீ (அவனிடத்திற்குத் தூதாக) விரைந்து செல்லாதே ; (எ - று).

(வி - ரை.) இது தலைவி கூற்று. தன்னை யன்பாக நினைக்கின்ற நீசர்க்கும் நீடருள் புரிபவன் எம்பெருமான் என்பது இச்செய்யுளின் கருத்தாம். நீசர் தம்பாலும் என்னும் உம்மை தொக்கு நின்றது; அஃது இழிவு சிறப்பும்மையும் இறந்தது தழீஇய எச்சவும்மையுமாம். ஆம் என்பது பிரித்துப் போது என்பதனோடு கூட்டப்பட்டது. குலம் நலங் கல்வி மெய் எல்லாம் இறையவன் தாமரைச் சேவடிப் போதா மென்பதன் கருத்து, இறைவனது திருவடித் தியானமுடையார்க்குக் குலம்நல முதலிய வெல்லா முண்டா மென்பதாம். குலம் நலம் கல்வி மெய் என்பன இறையவன் தாமரைச் சேவடிப் போதாம் என்பது காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசார வழக்காம். குலம் நலம் கல்வி மெய் என்பன காரியமாம் ; இறையவன் தாமரைச் சேவடிப் போது என்பது காரணமாம். நெஞ்சிது என்புழி இது என்பது பகுதிப்பொருள் விகுதியுமாம். மெய் என்பதற்கு, உருவின் மிக்கதோர் உடம்பு என்பதும் பொருளாம். நிறை - நெஞ்சைக் கற்புநெறியினிறுத்துதலாம்.

இறைவன் நல்லோர்க்கே அருள்புரிவா னென்றவனைக் கருதியிருந்தேன் ; அவன் தீயோர்க்கும் அருள்புரிகின்றவனு

யிருக்கின்றான்; அதனால், தீயவனே யாவன்; தீயவனுயிருக்கும் அவனிடத்திற்குத் தோழியே! நீ எனக்காகத் தூது செல்லல் கூடாதென்று தலைவி தன்தோழியை நோக்கிக் கூறினளென்பது இச்செய்யுளின் திரண்டபொருளாம். தனது தலைவன் தன்மீது விருப்பமுள்ள பரத்தையரில்லின்கண்ணும் இருப்பதையறிந்த தலைவி, அவனை வெறுத்துத் தோழியோடு கூறினளென்பது இச்செய்யுளின் உள்ளுறைப் பொருளாம்.

"காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும்—சேணில்
புவித்தலத்தி லின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால்"

என்று நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி கூறுவதும் இங்கு உணர்தற்பாலதாம். (85)

கலங்கின மால்கடல் வீழ்ந்தன கார்வரை யாழ்ந்ததுமண்
மலங்கின நாக மருண்டன பல்கணம் வானங்கைபோய்
இலங்கின மின்னொடு நீண்ட சடையிமை யோர்வியந்தார்
அலங்கனன் மாநட மார்க்கினி யாடுவ தெம்மிறையே. (அசு)

(இ - ள்.) மால்கடல் கலங்கின - (பரமன் நடனஞ் செய்யும்போது) பெரிய சமுத்திரங்கள் கலங்குதலுடையனவாயின, கார்வரை வீழ்ந்தன - மேகம் (தவழ்கின்ற) மலைகள் (நிலைதவறி) வீழ்ந்துவிட்டன, மண் ஆழ்ந்தது-பூமியானது (பாதாள லோகத்தில்) அமிழ்ந்து விட்டது, நாகம் மலங்கின - நாகங்கள் வருத்தமடைந்தன, பல்கணம் மருண்டன - பலதேவக்கூட்டங்கள் மயக்கமடைந்தன, நீண்டசடை - (பரமனது) நீண்ட சடைகள், வான்அம் கை போய் - ஆகாய கங்கையின் பக்கமாகப் போய், மின்னொடு இலங்கின - மின்னலோடு விளங்குவனவாயின,

இமையோர் வியந்தார் - (இவற்றைக்கண்டு இந்திரன் முதலிய) தேவர்கள் ஆச்சரியமுற்றனர், அலங்கல் - கொன்றைமலர் மாலையையணிந்துள்ள, எம்இறை - எமது கடவுள்,நல் மா நடம்- நல்ல சிறந்த நடனத்தை, இனி ஆடுவது ஆர்க்கு - இனிமேல் ஆடுவது யாவர் காணும் பொருட்டு ; (எ - று).

(வி - ரை.) கடல் - சப்த சமுத்திரங்கள்; வரை - அஷ்ட குலபர்வதங்கள் ; நாகம் - அஷ்டமா நாகங்கள். இச்செய்யுள் இறைவனது நடனச் சிறப்பை வகுத்துக் கூறியதென்க. ‘வியந் தார்’ என்பதற்கு, (இந்திரன் முதலிய இமையவர் பரமனது நட னத்தைத் தரிசித்து, அதனைச்) சிறப்பித்துப் பேசினர் என்றும் பொருள் கூறலாம். பரமனது நடனச் சிறப்பை விரிவாயறிய விரும்புவோர் அதனைக் காரைக்காலம்மையார் அருளியுள்ள மூத்த திருப்பதிகத்திற் காண்க.

“தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ ”

என்று திருவாசகங் கூறுவ திங்குணர்தற்பாலதாம். (86)

எம்மிறை வன்னிமை யோர்தலை வன்னுமை யாள்கணவன்
மும்முறை யாலும் வணங்கப் படுகின்ற முக்கணக்கற் [ன்
கெம்முறை யாளிவ ளென்பிழைத் தாட்கிறையென்பிழைத்தா
இம்முறை யாலே கவரக் கருதிற் றெழிற்கலையே. (அஎ)

(இ - ள்.) எம் இறைவன் - எமது கடவுள், இமையோர் தலைவன் - (இந்திரன் முதலிய) இமையவர்க்குத் தலைவன், உமை யாள் கணவன் - உமாதேவியினது புருஷன், மும்முறையாலும் - முறையாக (மனம் வாக்கு காயமென்னும்) மூன்றாலும், வணங்

கப்படுகின்ற - (நல்லோர் யாவராலும்) வணங்கப்படுகின்ற (முக்கண் நக்கனுவன்), முக்கண்நக்கற்கு - (அந்த) மூன்று கண்களையுடைய நிர்வாணிக்கு, இவள் எம்முறையாள்-இப்பெண் எந்தமுறையினை யுடையவளாவாள், என்பு இழைத்தாட்கு - (தனது) எலும்பு மாலையை விரும்புதலைச் செய்த இவளுக்கு, இறை - இறைவன், என் பிழைத்தான் - யாது தவறுசெய்தான், (எனின்), இம்முறையாலே - (இவள் தனது எலும்புமாலையை விரும்புதலைச் செய்த) இந்தக் கிரமத்தினுலே (அவனது திருவுள்ளம்), எழில்கலை-(இவளது) அழகிய ஆடையை, கவரக் கருதிற்று - கிரகிக்கும்படி எண்ணியது ; (எ - று).

(வி - ரை.) இது தலைவன் அருள் பெருமை காரணமாக ஆடை கலைய அறிவழிந்திருக்கின்ற தலைவியினிலைமையைக் கண்டு செவிலி கூறியதாம். இழைத்தாளென்பதன் பொருள் விரும்புதலைச் செய்தாளென்பதாம். 'என்பிழைத்தாட்கிறை யென்பிழைத்தான்' என்பதற்கு, இவள் அவனுக்கு யாது பிழை செய்தாள்; அவன் இவளுக்கு யாது பிழைசெய்தான் என்பதும் பொருளாம். இதில் இவள் இறைவனுக்குப் பிழையாதோ செய்தாள்; அவளுக்கு இவனும் பிழையாதோ செய்தான் என்னும் பொருள் தொனிப்பதறிக. இப்பொருளில் இச் செய்யுள் சொற்பொருட்பின் வருநிலை யணியாம். 'மும்முறையாலும்' என்பதற்கு, முறை (ஆக) மூன்றாலும் என்பது பொருளாம். (87)

கலைதலை சூல மழுக்கனல் கண்டைகட் டங்கங்கொடி [கை
சிலையிவை யேந்திய வெண்டோட் சிவற்கு மனஞ்சொற்செய்
நிலைபிழை யாதுகுற் றேவல்செய் தார்நின்ற மேருவென்னு
மலைபிழை யாரென்ப ராலறிந் தோர்களிம் மாநிலத்தே. (அஅ)

(இ - ம்.) இம்மாநிலத்து - இப்பெரிய பூமியில், அறிந்தோர்கள் - (வேதாகமங்களை நன்கு) உணர்ந்த பெரியோர், கலை - மான், தலை - பிரம கபாலம், சூலம் - சூலாயுதம், மழுக்கனல் - அக்கினிமயமான மழுப்படை, கண்டை - வீரக்கழல், கட்டங்கம் - யோகதண்டம், கொடி - விடைக்கொடி, சிலை - பிநாகமென்னும் வில், இவை - (என்னும்) இவற்றை, ஏந்திய - தரித்துள்ள, எண்தோள் சிவற்கு - எட்டுத்தோள்களையுடைய பரமனுக்கு, மனம்சொல் செய்கை-மனம் வாக்குக் காயம் (என்னும் முக்கரணங்களாலும்), நிலைபிழையாது - முறை தவறாது, குற்றேவல் செய்தார் - சிறுதொண்டு செய்தவர், நின்ற - நிலைபெற்ற, மேரு வென்னும் மலை - மேருமலை (போல), பிழையார் என்பர் - (தவறாது) நிலைபெறுவர் என்று சொல்லுவர் ; (எ - று).

(வி - ரை.) பரமனுக் கெண்தோ ளுண்டென்பதை "எண் தோள் வீசிநின் றாடும் பிரான்றன்னை" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுவதாலும், "எட்டுடை யான்புயம்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதாலுமறிக. பரமனை மனம் வாக்குக்காயமென்னும் முக்கரணத்தாலும் தவறாது நினைத்தும் துதித்தும் தொழுதும் வருபவர் தவறாது சிவபதம் பெறுவ ரென்பது இச்செய்யுளின் கருத்தாம். இராப்பகல் என்னுந் தொடர்போல, மனம் சொல் செய்கைஎன்னுந்தொடர் உம்மைத் தொகைநிலைத்தொடராம். ஆல் - அசைநிலை. (88)

மானிலத் தோர்கட்குத் தேவ ரனையவத் தேவரெல்லாம்
ஆனலத் தாற்றொழு மஞ்சடை யீச னவன்பெருமை
தேனலர்த் தாமரை யோன்றிரு மாலவர் தேர்ந்துணரார்
பானலத் தாற்கவி யாமெங்ங னேயினிப் பாடுவதே. (அகூ)

(இ - ள்.) தேவர் அனைய - (இந்திரன் முதலிய) இமைய வரை ஒத்துள்ள, அத்தேவரெல்லாம் - அந்தப் பூதேவர்யாவரும், ஆன - (சிறப்புடையது) ஆய; நலத்தால் - நன்மையடையும் பொருட்டு, தொழும் - வணங்குகின்ற, அம்சடை - அழகிய சடையையுடைய, ஈசன்அவன் பெருமை - பரமனாகிய அவனது பெருமையை, தேன் அலர்த் தாமரையோன் - தேன் சிந்துதலை யுடைய செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமனும், திரு மால் - விஷ்ணுவும் (ஆகிய), அவர் - அச்சிறந்த தேவர்களும், தேர்ந்து உணரார் - ஆராய்ந்து அறியாதவரா யிருக்கின்றனர், (அங்ஙனமாயின்), மால்நிலத்தோர்கட்கு - பெரிய பூமியிலுள்ள வர் பொருட்டாக, யாம் - நாம், பாநலத்தால் - செய்யுளினிலக் கணங்கொண்டு, கவி - பாடல்களை, இனிப்பாடுவது எங்ஙன் - (அவன் மேல்) இனிப் பாடுவது எப்படி? (எ - று).

(வி - ரை.) ஆன நலத்தால் என்பதும் பாநலத்தால் என் பதும் எதுகை நோக்கி ஆனலத்தால் எனவும் பானலத்தால் எனவும் வந்தன. ஆனலத்தால் என்பதன் ஆலுருபு நான்காம் வேற்றுமைப் பொருட்கண் வந்தது. எங்ஙன் என்னும் வினா ஈண்டு முடியாதென்னும் பொருட்கண்வந்தது. அத்தேவரென் பதன் அகரச்சுட்டு, பிரசித்தப் பொருளில் வந்தது. பூதேவரென் பார் அந்தணர். இதனை "ஒருகோடி பூதேவ ருங்கை தொழுங் கோவை யுறவுன்னுவாம்" என்னும் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தின் காப்புச் செய்யுளினடியாலு முணரலாம். தேவதேவ னது பெருமையை யளவிட்டுரைப்பது எவர்க்கும் எவ்வகையா லும் முடியாதென்பது இச்செய்யுளின் கருத்தாம். (89)

பாடிய வண்டுறை கொன்றையி னுன்படப் பாம்புயிர்ப்ப
ஒடிய தீயா லுருகிய திங்களி னூறலொத்த

தாடிய நீறது கங்கையுந் தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தாலுமை பாகமெங் கொற்றவற்கே. ()

(இ - ள்.) பாடிய - ரீங்காரஞ் செய்கின்ற, வண்டு உறை - வண்டுகள் வசிக்கின்ற, கொன்றையினன் - கொன்றைமலர் மாலையையுடைய பரமன், ஆடிய நீறது - (தன் திருமேனியின் மீது) பூசிய வெண்ணீறானது, படம்பாம்பு உயிர்ப்ப - படத்தை யுடைய பாம்பானது பெருமூச்சுவிட (அதனால்), ஓடிய தீயால் - கொழுந்துவிட்டெரிந்த தீயினால், உருகிய திங்களின் - உருகிய சந்திரனது, ஊறல் ஒத்தது - கசிவுநீர் (வழிந்தோடுவது) போன்றிருக்கிறது; எம் கொற்றவற்கு - எமது தலைவனாகிய பரமனுக்கு, உமைபாகம் - உமையவள் இடப்பாகத்திருப்பது, கங்கையும் தெண்ணீர் யமுனையும் - (வெண்மையான தெளிந்த நீரை யுடைய) கங்கையும் (கருமையான) தெளிந்த நீரையுடைய யமுனையும், கூடிய - சேர்ந்த, கோப்பு ஒத்தது - கலப்பை ஒத்திருக்கின்றது; (எ - று).

(வி - ரை.) இறைவன் செந்நிற மேனியனாயினும், வெண்ணீறணிதலால் வெண்ணிற மேனியன்போலிருக்கின்றான்; அவ் வெண்ணிறம் அவன் திருமுடி மீதுள்ள சந்திரன் உருகி அவன் உடம்பின் மீது வழிந்தோடியது போன்றிருக்கிறது; இங்ஙனம் வெண்ணிறமாகிய இறைவனது ஆகத்தோடு கருநிறமாகிய இறைவியின் ஆகம் இடப்பால் கலந்து நின்ற தோற்றம் வெண்மை நிறத்ததாய கங்கையும் கருமை நிறத்ததாய யமுனையும் கூடிய தோற்றம் போன்றிருக்கின்றது என்பதிங்குணர்தற் பாற்றும். இப்போதும் அலகபாத் என்னும் பிரயாகைக்குச் செல்வோர் அங்குக் கங்கையும் யமுனையும் கலந்த பிறகு ஓடும் ஆறு பாதிப்பாகம் வெண்மை நிறமாகவும் பாதிப்பாகம் கருமை

நிறமாகவும் சிறிதுதூரம் செல்லும் காட்சியைப் படவேறிச் சென்று காணலாம். இச்செய்யுள் வண்ணப்பண்புவமை யணி யாம்; வண்ணம் - நிறம். (90)

கொற்றவ னேயென்றுங் கோவணத் தாயென்று மாவணத்தால்
நற்றவனேயென்று நஞ்சுண்டி யேயென்று மஞ்சமைக்கப்
பெற்றவ னேயென்றும் பிஞ்ஞக னேயென்று மன்மதனைச்
செற்றவ னேயென்று நாளும் பரவுமென் சிந்தனையே. (91)

(இ - ள்.) என் சிந்தனை - எனது மனமானது, நாளும் - தினந்தோறும், கொற்றவனே என்றும் - தலைவனே என்றும், கோவணத்தாய் என்றும் - கோவணமணிந்த கோலமுடைய வனே என்றும், ஆவணத்தால் - (சடாமுடிதோலாடை முதலிய) அடையாளங்களால், நற்றவனே என்றும் - சிறந்த தவமுடைய வனே என்றும், நஞ்சுண்டியே என்றும் - விஷத்தையுண்ட வனே என்றும், அஞ்சு அமைக்கப் பெற்றவனே என்றும் - (தோற்றம், நிலை, ஈறு, மறைப்பு, அருள் என்னும்) பஞ்சகிருத் தியங்களும் செய்ய (உரிமை) பெற்றவனே என்றும், பிஞ்ஞ கனே என்றும் - தலைக்கோல முடையவனே என்றும், மன்மத னைச் செற்றவனே யென்றும் - மன்மதனை அழித்தவனே என் றும், பரவும் - (சிவபெருமானைத்) துதிக்கும்; (எ - று).

(வி - ரை.) அஞ்சும் என்னும் முற்றும்மை தொக்கு நின்றது; அவ்வஞ்சு என்பது தொகைக் குறிப்புச்சொல்லாம். கொற்றம் - வெற்றி, அதனையுடையவன் கொற்றவன். பிஞ் சகம் - தலைக்கோலம், அதனை யுடையவன் பிஞ்சகன். மன்மதன் என்பதன்பொருள் புத்தியை மயக்குகின்றவ னென்பதாம்; மன் - புத்தி, மதன் - மயக்குகின்றவன். வேதனையும் (பிறப்பை யும்) காலனையும் (இறப்பையும்) வெல்ல விரும்புகின்றவர்

எஞ்ஞான்றும் தவறாதும் மறவாதும் சிவசிந்தனையுடையவரா யிருத்தல் வேண்டுமென்பது இச்செய்யுளின் கருத்தாம்.

"நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி—ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி"

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதால், தவஞ்செய் வார்க்குரிய அடையாளங்கள் இவையென விளங்குவனவாம். ()

சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே. (௬௨)

(இ - ள்.) யான் - நான், வெந்த வெண்ணீறு அணி ஈசற்கு - (தீயின்கண் பூசுவதற்குத்தக்க அளவாக) வெந்துள்ள திருவெண்ணீறு அணிந்த பரமனுக்கு, சிந்தனை செய்ய - (அவனைத்) தியானம் செய்ய, மனம் அமைத்தேன் - (என்) மனத்தை வைத்தேன், செப்ப - (அவனது திருநாமங்களைச்) சொல்ல, நா அமைத்தேன் - (என்) நாக்கினை வைத்தேன், வந்தனை செய்ய - (அவனது திருவடிகளை) வணங்க, தலையமைத்தேன் - (என்) தலையை வைத்தேன், தொழ - (அவனைக்) கும்பிட, கை அமைத்தேன் - (என்) கைகளைவைத்தேன், பந்தனை செய் வதற்கு - (அவனை என் சித்தத்தில்) கட்டுவதற்கு, அன்பமைத் தேன் - அன்பைவைத்தேன், அரும்ப மெய்வைத்தேன் - (அவ னது திருநாமங்களைக் கேட்டவளவிலே) சிலிர்க்கும்படி (என்) உடம்பை வைத்தேன், விதித்தன இவை - (பரமனது கருணை யைப் பெறுமாறு மக்கள் இன்றியமையாது செய்யத்தக்கனவாக

அவர்களுக்கு வேதாகமங்களால்) விதிக்கப்பட்டவை இவையே யாம் ; (எ - று).

(வி - ரை.) பந்தனை - கட்டு. விதித்தன - வினையாலணையும்பெயர். இவை என்றது சிந்தனைசெய்ய மனமமைத்தல், செப்பநாவமைத்தல், வந்தனைசெய்யத் தலையமைத்தல் முதலியவற்றை.

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனிச்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே."

என்று மணிவாசகப்பிரான் திருவாய் மலர்ந்தருளியிருப்பதும்,

"சிந்தனை யுனக்குத் தந்தேன் திருவரு ளெனக்குத் தந்தாய்
வந்தனை யுனக்குத் தந்தேன் மலரடி யெனக்குத் தந்தாய்
பைந்துணை ருனக்குத் தந்தேன் பரகதி யெனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா கருவையி லிருக்குந் தேவே"

என்று திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி கூறுவது மிங்குணர்தற்பாற்றும். (92)

விதித்தன வாழ்நாள் பெரும்பிணி விச்சைகள் கொண்டுபண்டே
கொதிப்பினி லொன்றுங் குறைவில்லை குங்குமக் குன்றனைய
பதித்தனங் கண்டனங் குன்றம்வெண் சந்தனம் பட்டனைய
மதித்தனங் கண்டன நெஞ்சினி யென்செய்யும் வஞ்சனையே.

(இ - ள்.) விதித்தன - (எனக்குப் பிரமனால்) விதிக்கப் பட்டனவாகிய, வாழ்நாள் - வாழ்நாட்கள், பெரும்பிணி - (நீக்குதற்கரிய) பெருநோய் போல்வனவாம், பண்டு - முன்பு, விச்சைகள் - (பற்பல) சாஸ்திரங்களை, கொண்டு - (ஆராய்ச்சி செய்வதன்கண் நான் ஊக்கங்) கொண்டு, (அவற்றின் முடிபறியாமையால்), கொதிப்பினில் - (அறியாமை ஐயம் திரிபு என்பனவற்றால் வருந்திய) வருத்தத்துக்கு, ஒன்றும் குறைவில்லை - (எனக்கு) ஒரு சிறிதும் குறைவில்லையாம், (ஆயினும்), குங்குமக் குன்றனைய பதி - (செந்நிறத்தால்) குங்குமக்குன்றையொத்த இறைவனே, (உன்திருவருளால் உன்னடியாரும் யானும்), வெண்சந்தனம் - வெண்மையாகிய சந்தனக் குழம்பு, பட்டது அனைய - பூசியதையொத்துள்ள, குன்றம் - கைலாசமலையாகிய, தானம் - (உனது) இருப்பிடத்தை, கண்டனம் - தரிசித்தோம், மதித்தனம் - (அதனையே) தியானித்தோம், கண்டனம் - (பின்பு உன்னைத்) தரிசித்தோம், நெஞ்சு - (எமது) மனம், இனி - இனிமேல், என் வஞ்சனைசெய்யும் - (எங்களுக்கு) என்ன வஞ்சனை செய்யும், (ஒரு வஞ்சனையும் செய்யாது); (எ - று).

(வி - ரை.) கொதிப்பினில் என்னும் ஏழனுருபு நான்கனுருபின் பொருளில்வந்தது. செய்யுள்விகாரத்தால் பதி தானம் என்பன பதித்தனம் எனவும், பட்டது அனைய என்பன பட்டனைய எனவும் வந்தன. கண்டனம் மதித்தனம் கண்டனம் என்னும் மூன்றும் உடன்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களாம். வாழ்நாள் - உயிர் உடம்போடு கூடிவாழுங்காலம். பெரும்பிணி - குஷ்டவியாதி. விச்சைகள் - மீமாம்சை, தருக்கம், சாங்கியம், யோகம் முதலிய நூல்கள். (93)

வஞ்சனை யாலே வரிவளை கொண்டுள்ள மால்பனிப்பத்
துஞ்சும் பொழுது முறத்தொழு தேன்சொரி மாலருவி
அஞ்சன மால்வரை வெண்பிறை கவ்வியண் ணாந்தனைய
வெஞ்சின வானையி னீருரி மூடிய வீரனையே. (௯௪)

(இ - ள்.) வஞ்சனையாலே - வஞ்சகச் செய்கையாலே, வரிவளை - (எனது) கீற்றமைந்த வளையல்களை, கொண்டுள்ள - பறித்துக்கொண்டிருக்கின்ற, (வீரனை), மால் அருவி - பெரிய அருவிநீர், சொரி - பெருகிவழிகின்ற, மால் அஞ்சனவரை - பெரிய நீலகிரியானது, வெண்பிறைகவ்வி - வெண்மையான பிறைச்சந்திரனைக் கவ்விக்கொண்டு, அண்ணாந்தனைய - நிமிர்ந்திருப்பது போன்றுள்ள, வெஞ்சின ஆனையின் - கொடிய கோபம் பொருந்திய யானையினின்றும், ஈர்உரி மூடிய வீரனை - உரித்ததோலை (மேலாடையாகப்) போர்த்துக்கொண்டுள்ள வீரனாகிய பரமனை, மால்பனிப்ப - (என்காம) மயக்கம் நீங்குமாறு, துஞ்சும்பொழுதும் - (விழித்திருக்கும் காலத்திலன்றித்) தூங்கும் காலத்திலும், உறத்தொழுதேன் - நன்றாகத் தொழுதனன்; (எ - று).

(வி - ரை.) இந்த யானையை அஞ்சனமால்வரையாகவும், அதன்கொம்பினை வெண்பிறையாகவும், மதசலத்தை மாலருவியாகவும் கொள்க. மால் - காமப்பித்து; தூங்குதல்-கனாக்காண்டல்; சினம் - தணியாக்கோபம். கற்றகேட்ட பெரியோர் என்பதுபோல, உள்ள, மூடிய என்னும் பெயரெச்சங்கள் வீரனையென்னும் பெயர்கொண்டு முடிந்தன. அண்ணாந்திருப்பது அனைய என்பன செய்யுள் விகாரத்தால் அண்ணாந்தனைய என வந்தன. இஃது ஈசனிடத்துக்காதல் கொண்ட ஒருத்தி தனது கனவினிலைமையைத் தன் தோழியினிடத்துக் கூறியதாம். இச்செய்யுள் இல்பொருளுவமையணியாம். (94)

வீர னயனரி வெற்பலர் நீரெரி பொன்னெழிலார்
காரொண் கடுக்கை கமலந் துழாய்விடை தொல்பறவை
பேரொண் பதிநிறந் தாரிவ ரூர்திவெவ் வேறென்பரால்
யாரு மறியா வகையெங்க ளீசர் பரிசுகளே. (கூ௫)

(இ - ள்.) எங்களீசர் பரிசுகள் - எம்பரமனுரது தன்மைகள், (மும்மூர்த்தி வடிவமாம்), இவர் - இம்மூர்த்திகளது, பேர்-பெயர், (முறையே) வீரன் அயன் அரி - வீரபத்திரன் அயன் அரி என்பனவாம், ஒண்பதி - (இவர் உறையும்) சிறந்த இடங்கள், வெற்பு அலர் நீர் - கைலைமலை செந்தாமரைப்பூ திருப்பாற்கடல் என்பனவாம், நிறம்-(இவரது) வண்ணம், எரி பொன் எழில் ஆர் கார் - நெருப்புநிறம் பொன்னிறம் அழகமைந்த மேகநிறமென்பனவாம், தார்-(இவரது) மாலைகள், ஒண் கடுக்கை கமலம் துழாய் - சிறந்த கொன்றைமலர்மாலை செந்தாமரை மலர்மாலை துளசிமாலை என்பனவாம், ஊர்தி-(இவரது) வாகனங்கள், விடை தொல்பறவை - ரிஷபம் பழமையாகிய பறவைகள் என்பனவாம், அறியாவகை - (எம்பரமனே மும்மூர்த்தி வடிவமாயுள்ளான் என்பதை) அறியாத தன்மையினுலே, யாரும்-(அன்பரல்லாத) எவரும், வெவ்வேறு என்பர் - (பெயர்முதலியவற்ருல் அம்மூவரும் பரமனுக்குப் பின்னமாக) வெவ்வேருக இருக்கின்றனரென்று கூறுகின்றனர் ; (எ - று).

(வி - ரை.) இச்செய்யுள் திரிமூர்த்தி வர்ணனையாம்; முறைநிரனிறைப் பொருள்கோளாம். பறவைகள் - அன்னப் பறவையும், கருடப் பறவையுமாம். அயனதுவாகனம் அன்னப் பறவையாம்; அரியினதுவாகனம் கருடப்பறவையாம். அயன்-பிரமன் ; அரி - விஷ்ணு. வீரன் என்பது சிவபெருமானது திருநாமங்களுள் ஒன்று. இறைவன் உலகைப் படைத்தளித்தழிப்ப

மும்மூர்த்தி வடிவமாக விளங்குகின்றனனென்பது இச்செய்யுளின் கருத்தாம். இதனைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவெழுகூற்றிருக்கையில் "படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை" என்று திருவாய்மலர்ந்தருளி யிருப்பதாலுமுணர்க. ஆல் - அசை.

"அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனா யழிப்பவனுந் தானே"

என்று இந்நூலாசிரியர் திருக்கைலாய ஞானவுலாவில் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதும் இங்கு உணரத்தக்கதாம்.

"பாருருவி னீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவின் மூவருமே யென்ன நின்ற
விமையவர்தந் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ
யொன்றுமாக் கடலுருவ மொத்து நின்ற
மூவுருவங் கண்டபோ தொன்றாஞ் சோதி
முகிலுருவ மெம்மடிக ளுருவந் தானே"

என்று திருமங்கையாழ்வார் கூறுவதும்,

"அரனா ரணனாம மான்விடைபுள் ளூர்தி
உரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவே னேமி
உருவமெரி கார்மேனி யொன்று"

என்று பொய்கையாழ்வார் கூறுவதும்,

"தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழும்

திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து ''

என்று பேயாழ்வார் கூறுவதும் இங்குணர்தற் பாலனவாம்.

பரியா தனவந்த பாவமும் பற்றுமற் றும்பணிந்தார்க்
குரியா னெனச்சொல்லி யுன்னுட னுவ னெனவடியார்க்
கரியா னிவனென்று காட்டுவ னென்றென் றிவையிவையே
பிரியா துறையுஞ் சடையா னடிக்கென்றும் பேசுதுமே. (கூசு)

(இ - ள்.) பரியாதன - ஒழியாதனவாகி, வந்த - (நீர்ப் பெருக்குப்போல விடாது தொடர்ந்து) வருகின்ற, பாவமும் - பாவமென்னும் தீவினையும், பற்றும் - (யான் எனதென்னும் செருக்காகிய) அபிமானமும், அற்று - (முறையே தானஞ் செய்வதாலும் தவஞ் செய்வதாலும்) ஒழியப் பெற்று, பணிந் தார்க்கு - (தன்னை மெய்யன்போடு) வணங்கும் அடியார்க்கு, உரியான் - (குருவடிவங் கொண்டுவந்து அருள் செய்வதற்கு) உரியவனுயிருக்கின்றான், எனச்சொல்லி (உம்) - என்று கூறியும், உன்னுடனுவனென (ச்சொல்லியும்) - (ஆண்டவனே! யான் உன் திருவடித்தொண்டு செய்ய நீங்காது) உன்னோடு இருப்பே னென்று கூறியும், அடியார்க்கு - (பாவமும் பற்றும் ஒழியப் பெறாத) அடியவர்க்கு, இவன் - இந்தச் சிவபெருமான், அரி யான் என்று (சொல்லியும்) - (காணுதற்கு) அருமையானவன் என்று கூறியும், காட்டுவனென்று (சொல்லியும்) - (மெய்யடி யார்க்குத் தன்உண்மை வடிவத்தைத் தவறாது) காண்பிப்ப னென்று கூறியும், என்ற இவை இவையே - என்று கூறப்படுகின்ற இவ்விப்புகழ் மொழிகளையே, பிரியாதுறையும் - (நமது சித்தத் தின்கண்) நீங்காது வசிக்கின்ற, சடையானடிக்கு - சடாமுடியினை யுடைய சிவபெருமானது திருவடிகளை அடைதற்பொருட்டு, என்

றும் - எந்நாளும் (மறவாது), பேசுதும் - (அன்பர்களே ; நாம்) கூறுவோமாக ; (எ - று).

(வி - ரை.) சொல்லி என்னும் சொல் பின்னுள்ள என என்பதனோடும் என்று என்று என்பவற்றோடும் சென்றியைந்து நின்றது. எண்ணும்மை நான்கும் தொக்கு நின்றன. என்ற என்பதன் ஈற்றகரம் தொக்குநின்றது. பரியாதன என்பது எச்சப் பொருளில்வந்த முற்றும். அற்றும் என்பதன் உம்மை சாரியையாம். சிவபெருமானது புகழ் மொழிகளை மறவாமல் அன்போடு பேசுகின்றவர்க்கு அவனது கருணையெளிதாக வுண்டாகுமென்பது இச்செய்யுளின் கருத்தாம். (96)

பேசுவ தெல்லா மரன்றிரு நாமமப் பேதைநல்லாள்
காய்சின வேட்கை யரன்பா லதுவறு காற்பறவை
மூசின கொன்றை முடிமே லதுமுலே மேன்முயங்கப்
பூசின சாந்தந் தொழுமா லிவையொன் றும் பொய்யல்லவே.()

(இ - ள்.) அப்பேதை நல்லாள் - அந்த அறியாமையுடைய பெண், பேசுவது எல்லாம் - கூறுவதனைத்தும், அரன் திருநாமம் - பரமனது திருநாமமாம், அரன்பாலது - (அவள்) பரமன்மீதுவைப்பது, காய் - வருத்துகிற, சினவேட்கை - சினமும் வேட்கையுமாம், முடிமேலது - (அவள்) முடியின்மீதிருப்பது, அறுகால்பறவை - வண்டுகள், மூசின கொன்றை - நெருங்கியுள்ள கொன்றைமலர்மாலையாம், முலேமேல் முயங்க - (அவள்) முலேயின்மீது பொருந்த, பூசின(து) சாந்தம் - பூசியிருப்பது விபூதியாம், தொழும் - (அவள் பரமன் வருதலேயே நோக்கித்) தொழுகின்றாள், இவை ஒன்றும் பொய்யல்ல - இவற்றுள் ஒன்றும் பொய்யல்ல ; (எ-று).

(வி - ரை) சிவபெருமானைக் காதலித்த ஒருத்தி, அவன் அருள் செய்யாமை காரணமாக வருந்திய வருத்தத்தை அவளது தோழி யுணர்ந்து, அவளது நிலைமையைக் கூறி வருந் தினளென்பது இச்செய்யுளின் கருத்தாம். நல்லாள் என்பதன் பொருள் - நற்குண நற்செய்கை யுடையவளென்பதாம். சினம் - கோபம்; வேட்கை - ஆசை. இங்குச் சினம் ஊடலாம்; ஆசை புணர்ச்சி விருப்பமாம். அறுகாற் பறவை - ஆறுகால்களை யுடைய வண்டு. பூசினது என்பது செய்யுள் விகாரத்தால் துவ்வீறு குறைந்துநிற்கப் பூசின எனவந்தது. ஆல் - அசைநிலை.

அரனது திருநாமம் நமசிவய அல்லது சிவயநம என்னும் பஞ்சாட்சரமாம். இதனை,

“ மற்றும் பலபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா வமுதின் திருநாம மஞ்செழுத்தும்
சோராம லெப்பொழுதுஞ் சொல் ”

என்று நக்கீரர் கூறுவதாலுமறிக. (97)

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்துபுக்கிங்
குய்யா வுடம்பினே டூர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளிபினு நானில மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்ரு னடிமற வாவரம் வேண்டுவனே. (கூஅ)

(இ - ள்.) பொய்யா(த) - (தன்னை யடைந்தவர்க்குத் துன் பந்தருவதினின்றும்) தவறுதலில்லாத, நரகம் - நரகத்தின்கண், புகினும் - சென்றிருந்தாலும், துறக்கினும் - (அதனைவிட்டு) நீங்கி ஞலும், இங்கு - இம்மண்ணுலகத்தின்கண், போந்து - வந்து, ஊர்வ நடப்ப பறப்ப வென்று - ஊர்வன நடப்பன பறப்பன வென்று (கூறப்படும்), உய்யா(த) - (துஷ்டப் பிராணிகளி

னின்றும் தவறிப்) பிழைத்தலில்லாத, உடம்பினோடு - உடம்பின் கண், புக்கு - வந்தடைந்து, நையாவிளியினும் - வருத்தமுற்று இறந்தாலும், நால்நிலம் ஆளினும்-(அரசனாகப் பிறந்து குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என) நான்கு வகையாயுள்ள பூமியை ஆண்டாலும், நான்மறை - (இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும்) நான்கு வேதங்களும், சேர் - (தேடிச்சென்று) அடைதற்கிடமான, மையார் மிடற்றான் - கரிய விஷம் பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானது, அடி - திருவடிகளை, மறவா (த) வரம் - மறவாது தியானிக்கும் வரத்தினை, வேண்டுவன் - (யான் என்றும்) வேண்டியிருக்கின்றேன் ; (எ - று).

(வி - ரை.) ஆண்டவனே ! யான் எப்பிறப்பிலும் உன் திருவடிகளை மறவாதிருக்கும் வரத்தை விரும்பி யிருக்கின்றேன் என்றார் என்பது இச்செய்யுளின் கருத்தாம். கூறப்படும் என்பது சொல்லெச்சமாம் ; வருவித்துரைக்கப்பட்ட மற்றவையெல்லாம் இசையெச்சமாம். பொய்யா, உய்யா, மறவா என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். ஊர்வ, நடப்ப, பறப்ப என்பன அன்சாரியை பெறாத அகரவீற்றுத் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள். மை - பண்பாகு பெயர். ஏ - ஈற்றசை.

"ஈச னவனல்லா தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான்"

என்று காரைக்கால் அம்மையார் என்னும் புனிதவதியார் அருளியிருப்பது இங்குணர்தற்பாலதாம். (98)

வேண்டிய நாட்களிற் பாதியுங் கங்குன் மிகவவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது பிள்ளைமை மேலதுமூப்

பாண்டின வச்சம் வெகுளி யவாவழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன் சடைமுக்கண் மாயனையே. ()

(இ - ள்.) வேண்டிய நாள்களில் - (நாம் இருக்க) வேண்டிய நாட்களிலே, பாதியும் - பாதியளவும், கங்குல் - இராத்திரியாம், அவற்றுள் - அந்நாட்களிலே, மிக - மிகவும், வெந்நோய்- (தீர்ப்பதற்கரிய) கொடிய நோய்கள், ஈண்டிய - நெருங்கியிருப்பனவாம், (அந்நாட்களுள்), பிள்ளைமை - இளமைப்பருவம், முதலது - முதலாவதாக விருப்பதாம், மூப்பு - மூப்புப்பருவம், மேலது - இறுதியதாக விருப்பதாம், ஆண்டு - (இவ்விரண்டு பருவத்திற்கும் நடுவான) பருவத்தில், இனம் - ஓரினமாயுள்ள, அச்சம் வெகுளி அவா அழுக்காறு - பயம் கோபம் பேராசை பொறாமை (என்பன நிலைபெற்றிருப்பனவாம்), இங்ஙனே - இவ்வாறாகவே (நம்முடைய வாழ்நாளெல்லாம்), மாண்டன - (உயிர்க்குறுதி தருவதாகாது) ஒழிந்தன, (இனியேனும் நாம் உய்யும்பொருட்டு), வளர் - (ஓரளவாக) வளர்ந்திருக்கின்ற, புன்சடை-நெருங்கிய சடையினையும், முக்கண் - (சூரியன் சந்திரன் அக்கினி யென்னும்) மூன்று கண்களையுமுடைய, மாயனையே - மாயனென்னுந் திருநாமத்தையுடைய பரமசிவனையே, சேர்தும்- (அன்பர்களே! நாம் அடைக்கலமாக) அடைவோமாக; (எ-று).

(வி - ரை.) மாயன் - மாயையைத் தன்வசமாக வைத்திருப்பவன். ஆண்டு - யௌவனப் பருவகாலம். ஆண்டவனே! யான் என் வாழ்நாள்களை வீணாகக் கழித்து வருகின்றேன்; யான் கொள்ளும் அச்சமுதலியவற்றிற்கு ஓரளவேயில்லை; இனியேனும் உன்திருவடியை யடைந்துய்ய விரும்புகின்றேன் என்றாரென்பது இச்செய்யுளின் கருத்தாம்.

“வேதநூற் பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு

பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டே னரங்கமா நகரு ளானே"

என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் கூறி யிருப்பது இங் குணர்தற்பாலதாம். (99)

மாயனன் மாமணி கண்டன் வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காய்சின வானை வளருங் கனக மலையருகே
போயின காக்கையு மன்றே படைத்தது பொன்வண்ணமே.

(இ - ள்.) மாயன் - (விசித்திர சத்திவாய்ந்த) மாயையை யுடையவனும், நல்மாமணி கண்டன் - சிறப்பமைந்த பெரிய நீலமணிபோன்ற கண்டத்தை யுடையவனும், (ஆகிய), வளர் சடையாற்கு - (ஓரளவாக) வளர்ந்திருக்கின்ற சடையினை யுடைய பரமனுக்கு, அடிமை ஆயின தொண்டர் - அடிமையான அடியார்கள், துறக்கம் பெறுவது - சுவர்க்கம் பெறுவர் என்பது, சொல்லுடைத்தே - சொல்லவேண்டிய அவசியமுடையதோ, (அன்று), காய்சினம் - மிக்க கோபத்தையுடைய, ஆனை - யானைகள், வளரும்-சஞ்சரிக்கும், கனகமலை அருகே-(மேரு என்னும்) பொன்மலையின் அருகே, போயினகாக்கையும் அன்றே - சென்றடைந்த காக்கையும் அல்லவா, பொன்வண்ணம் படைத்தது - பொன்னிறம் பெற்றது, (அதுபோல, சிவனை யடைந்தவரும் சிவபதம் பெறுவர்) ; (எ - று).

(வி - ரை.) இச்செய்யுள் எடுத்துக்காட் டுவமையணியாம். துறக்கமென்பது இங்குச் சிவலோகமாம். சொல்லுடைத்தே என்னும் ஏகாரம் எதிர்மறைப்பொருளில் வந்தது; சொல்லாமலே பெறப்படும் என்று பொருள் தருதலின். பொன்மலையை

அடைக்கலமாக அடைந்த காகமும் தவறாது பொன்னிறமாக விளங்குவதுபோல, சிவபெருமானை யடைக்கலமாக அடைந்தவரும் தவறாது சிவலோகம் பெறுவரென்பது இச்செய்யுளின் கருத்தாம். இந்நூல் பொன்வண்ண மென்பதை முதலிலும் ஈற்றிலும் பெற்று அமைந்திருக்கும் அழகு செய்யுள் அந்தாதியின் அமைப்பாம். இவ்வமைப்பு மண்டல வந்தாதி என்று சொல்லப்படும். அஃதாவது அந்தாதி என்னும் நூலின் ஈற்றுச் செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் ஒன்றாக வருவதாம்.

பொன்வண்ணத்தந்தாதி மூலம்

உரையுடன்

முற்றுப்பெற்றது.

பொன்னம்பலத்தான் பொன்னடி வாழ்க

ஸ்ரீ வடிவேற் சற்குரு திருவடி வாழ்க

நால்வரலாறு

ஓரபியுத்தர் பாடல்

(அபியுத்தர் - புலவர்.)

அன்றுவெள் ளானையின் மீதிமை யோர்சுற் றணுகுறச்செல்
வன்றொண்டர் பின்பரி மேற்கொண்டு வெள்ளி மலையரன்முன்
சென்றெழி லாதி யுலாவரங் கேற்றிய சேரர்பிரான்
மன்றிடை யோதுபொன் வண்ணத்தந் தாதி வழங்கிதுவே.

(இ - ள்.) அன்று - (பரமசிவன் நீ கைலைமலைக்கு வரல் வேண்டுமென்று கட்டளையிட்டருளிய) அக்காலத்தில், வெள்ளானையின் மீது - வெள்ளையானையின்மேல் (ஏறி), இமையோர் - தேவர்கள், சுற்று - சுற்றிலும், அணுகுற - நெருங்கிவர, செல் - (கைலைமலைக்குச்) சென்ற, வன்தொண்டர்பின் - வன்தொண்டரென்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பின்னே, பரிமேற்கொண்டு - குதிரையின்மீதேறிக் கொண்டு, வெள்ளிமலையரன்முன் - வெள்ளிமலையென்னும் கைலாயகிரியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் சந்நிதியிலே, சென்று - போய் (இருந்து), எழில் - அழகமைந்த, ஆதியுலா - ஆதியுலா என்னும் நூலினைப்(பாடி), அரங்கேற்றிய - அரங்கேற்றஞ் செய்த, சேரர்பிரான் - சேரமான்பெருமாள் நாயனர், மன்றிடை - (சிதம்பரம்) கனகசபையிலே, ஓது - திருவாய்மலர்ந்தருளிய, பொன்வண்ணத்தந்தாதி - பொன்வண்ணத்தந்தாதி யென்பது, வழங்கு - (சிவனடியார் யாவரும் படித்து) வழங்குகின்ற, இதுவே - இந்நூலேயாம் ; (எ - று).

(வி - ரை.) அரங்கேற்றுதல் - கல்விக்கழகத்துள்ளவர் அங்கீகரிக்குமாறு செய்தல். ஆனை - யானை யென்பதன் மரூஉ.

பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	8	வுடு	ஓடு
12	7	கணகவண்ணம்,	கனகவண்ணம்-
16	16	வேடுபாடு	வேறுபாடு
33	12	பழவை	பழமை
43	9	(விரை)	(வி - ரை.)
70	4	மிகுதி	விகுதி
96	24	வெண்ணமையாகிய	வெண்மையாகிய
107	8	பெருமூக்சு	பெருமூச்சு

Kesari Printing Works, Madras.